உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்: ச.	விபவ—ஆனி, ஆடி.	மலர்: ௩-௪.

உ

இராசராசன்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 11-ஆம் பக்கம்.)

இனி, கேரளாந்தக வளநாட்டுத் தட்டைக்களநாட்டுத் தேவனும்பள்ளித் திருகோம்பலூர் மாதேவர் ஆலயத்துப் பணி மக்கள், கோயிற் காரியங்களுக்காக ஏற்பட்ட பொருளைக் கவர்ந்து கொண்டதைக் கண்டறிந்து உலகளவித்த திருவடிகள் சாத்தன் என்பவர் தண்டம் இறுத்தனர் என்று (Ep. Coll. No. 199 of appendix B of 1917) அறியக்கிடக்கின்றது. அதிலுள்ள உலகளவித்த என்னும் சொற்றொடர், திருவடிகள் சாத்தன் என்பாரும் உலகளத்தலை மேற்கொண்டிருந்தாருள் ஒருவர் என்பதை உணர்த்தி நிற்றல் காண்க.

இனி, இவர்களையன்றி, "திருவாய் மொழிந்தருளினபடிக்கு வரியிலார் வரியிலே இட்டு" எனவும், "இப்படி கணக்கிலும் இட்டுக்கொள்ளக் கடவர்களாக வரிக்குக் கூறுசெய்வார்க்கும் சொன்னோம்" எனவும், "புரவுவரி ஆலங்குடியான்" எனவும், "வரிப்பொத்தகம் பரித்தியூர்க் கிழவன் சிங்களவெண்காடன்" எனவும், "பட்டோலைப் பெருமான் அம்பலத்தாடி" எனவும், "விடையதிகாரி உய்யக்கொண்டான் எழுத்து" எனவும் சாசனங்களிற் காணப்படுதலின், வரியால் வந்த தொகையைக் கணக்கிற் பதிவு செய்யும் வரியிலாரும், அதனை இன்னின்னதற்குச் செலவிட வேண்டுமெனப் பாகுபாடு செய்யும் வரிக்குக் கூறு செய்வாரும், அரசிறை நீங்கிய ஊர்களினின்றும் வருதற்குரிய வரிகளுக்குக் கணக்கு வைக்கும் புரவுவரியும், குத்தகைக்கு விட்ட நிலங்கட்கு அட்டவணை வைக்கும் வரிப்பொத்தகமும், காரியக் குறிப்பெழுதும் பட்டோலைப்பெருமானும், வந்தவோலைகளைப் பார்வையிட்டு விடையெழுதும் விடையதிகாரியும் இருந்தனராதல் தெரிந்துகொள்க.

இனி, இராசராசேச்சர சாசனங்களில், 'பெருந்தரம் ராஜகேஸரி மூவேந்த வேளான்' 'பெருந்தரம் ராஜராஜ வாணகோவரையன்' என்பன போலப் பெருந்தரம் என்னும் சொல்லை அடைமொழியாகப் பெற்ற பதினெழுவர் பெயர்கள் காணப்படுகின்றன. இவைகளையன்றிச் 'சிறுதனத்துப் பணிமகன்' என்றாற் போலச் சிலர் பெயர்க்குமுன் சிறுதனம் என்னும் சொல் புணர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறன்றி ஒருவர்க்கு மட்டும் 'சிறுதனத்துப் பெருந்தரம்' என இரண்டும் வந்துள்ளன. இவற்றால், சிறுதனம், பெருந்தரம் என்பன அரசனால் அளிக்கப் பெறும் பட்டங்கள் போலும் என்றுய்த்துணரற்பாற்று.

இனி நிலம் அளந்த கோலினை உலகளந்த கோல் என்ப. (திருவையாற்று ஒலோகமாதேவீச்வரக் கல்வெட்டு). சிற்றம்பலக் கோல், பங்கிட்டகோல் எனவும் வழங்கினர் (S. I. I. Vol. III part I). அக்கோல் பதினறுசாண் அளவுடையது (S. I. I. Vol. III part I. p. 16). நிலம்—நீர்நிலம், கொல்லை, காடு

என்று மூவகைப்படும் S. I. I. Vol. III part I p. 25). அவை, நூறுகுழி கொண்டது ஒருமா ஆகவும், இரண்டாயிரங் குழி கொண்டது ஒரு வேலியாகவும் அளக்கப்பட்டன. "வேலி நூற்றுக் கலமாக வந்தநிலம் பதினாலே எட்டுமா" "வேலி நூற்றுக்கல வரிசைக்கீழ் வந்தநிலம் ஏழரையே முக்காணி" எனக் காணப்படுதலின், நூற்றுக்கல விளைவுள்ளதும் அதற்குக் கீழ்ப் பட்டதுமென வேலி இருதரமாகப் பிரிக்கப்பட்டமை காண்க. இறையிலி நீங்கு நிலம் மூக்காலே இரண்டுமாக்காணி அரைக் காணிக் கீழ் அரையே மூன்றுமாவின் கீழ் மூன்றுமா அரைக் காணி முந்திரிகைக் கீழ் முக்காணிக் கீழ்முக்காலே ஒருமா" (Vol. II part I p. 56) என்ற இத்துணைச் சிறுபகுதி அளவுள்ள நிலத்தையும் அளந்து காணிக்கடன் ஏற்படுத்தப்பட்டதெனின், நிலம் எத்துணை நுட்பமாக அளக்கப்பெற்றுளதென்று தெரிந்து கொள்க.

இனி, அளக்குமிடத்துப் பலர்க்கும் பொதுவாகப் பயன் படக் கூடிய ஊர்நத்தம், ஊர்க்களம், குடியிருக்கை, திருக் கோயில், ஐயன்கோயில், பிடாரிகோயில், நந்தவனம், திருமஞ் சனக்குளம், ஊருணிகுளம், புலத்திற் குளங்கள், ஓடைகள், நீரோடுகால், கன்றுமேய்பாழ்நிலம், கொட்டகாரம், பெருவழி, தளிச்சேரி, ஈழச்சேரி, வண்ணாரச்சேரி, கம்மாண்சேரி, பறைச் சேரி, பறைக்குளக்குழி, சுடுகாடு, கற்கிடை (Vol. II part I) என்றின்னவைகள் இறையிலியாக நீக்கப்படும்.

இனி, "நாற்கோ லாசறுதியில் நாட்டின புள்ளடிக்கல்லே யுற்று" எனவும், இப்பரிசு கல்லுநாட்டி எல்லைதெரித்து" என வும் வருதலின், நிலத்தை அளந்து எல்லை தெரிந்து புள்ளடிக்கல் நடும் வழக்குண்மை தெரியலாம்.

இனி, விளையும் நெல்லின் ஒரு பகுதியினைக் காணிக்கடனாகக் கொடுப்பதுண்டு. "இறைகட்டின நிலத்தால் காணிக்கடன் ராஜ கேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக் கக்கடவநெல்லும் இடக்கடவ பொன்னுங் காசும் பேசிக் கல்லில்

வெட்டின" (Vol. II Part. I p. 54) என்னும் சாசனப்பகுதியால், நெல்லையன்றிப் பொன்னுங் காசும் இறை கொடுத்தமை காண்க.

இனி, "ஈராண்டு நிரம்பி மூவாண்டு தத்தங் காணியான நிலங்களுக்கு அவ்வவ் ஊர்களிலாரோடும் ஊரிடுவரிப்பாடு இறை இறுது போனார் காணி உடையாரைத் தவிர ஊர்நிலமாய் அவ்வவ் ஊர்களிலாரே விற்றுக்கொள்ளப் பெறுவார்களாகவும்" என்னும் இராசராசன் இருபத்து நான்காம் யாண்டு ௧௩௪ ஆம் நாளில் திருவாய் மொழிந்தருளின ஆணைப்படி (Vol III Part I p 14.) ஈராண்டு கழிந்து மூன்றும் யாண்டு தொடங்கவும் இறை கொடாதவர் நிலங்கள் பறிமுதல் செய்து ஊர்ப்பொதுவாக்கொண்டு விற்கப்பட்டமை அறிக.

இனி, "இந்நான் கெல்லைக்குட்பட்ட தரமிலி மிகுதிக் குறைவுபட்ட குழி ௬௱. இக்குழி அறுநூறுக்கு எம்மிலிசைந்த விலைப் பொருள் அன்றாடு நற்காசு 20. இப்படி இருபதும் ஆவணக் களரியே காட்டி காப்பிட்டு கைசெலவறக் கொண்டு விற்று விலைப் பிரமாணஞ் செய்துகொண்டு மண்ணறவிற்று பொருளைக்கொண்டோம்" என்பது கொண்டு, அக்காலத்து ஊர்தோறும் ஆவணக் களரி (Registration Office) இருந்ததென்பதையும், நிலத்தை விற்பவர் வாங்குவோர் ஆகிய இருவரும் ஆவணத்துடன் ஆவணக் களரிக்குச் சென்று நிலத்தின் விலையையும் நான்கெல்லையையும் தெரித்துத் தாம் இசைந்தமைக்கு உறுதிமொழி கூறிப் பின்னர் ஆவணம் காப்பிடப்பெற்றுத் திரும்பினரென்பதையும் அறியலாம்.

இனி, "ஸ்ரீராஜராஜதேவர் எங்கள் நகரத்தில் எடுப்பித்தருளின அரிஞ்சிகை ஈச்வரத்து மஹாதேவர்க்கு இந் நாற்பேரெல்லையுள்ளு நடுவுப்பட்ட.........உண்ணில மொழிவின்றி இப்புலிக்குன்றத்து நிலம் எப்பேர்ப்பட்டதும் இத்தேவர்க்கு வேண்டு நிவந்தங்களுக்குத் தேவதான இறையிலியாகச் சிலாலேகை செய்து கொடுத்தோம் மேற்பாடியான ராஜாஸ்ரயபுர நகரத்தோம்." (Vol. III. Part I. p. 25) என்றதனால், நிலம் குடிகட்கே

உரிமையுடையது. தனக்கு வேண்டுமாயின், குடிகள் தம்மில் ஒருப்பட்டுச் சாசனம் செய்துதர அரசன் கொள்வானேயல்லது, வலிதிற்கொண்டிடான் என்பது புலனாகும்.

இனி, 'நிலைநீர்ப்பாட்டம்' 'ஒழுக்குநீர்ப்பாட்டம்' என வரிகள் காணப்படுதலின், ஏரி, குளம், ஆறுகளினின்றும் நீரைப் பாய்ச்சிக் கொள்வதற்கு வரி ஏற்பட்டிருந்தமை காண்க. நீரை, விளைவுக்கு வேண்டிய அளவு பாயச்செய்தல், பாய்ச்சலுக்கேற்ற வசதி அமைத்தல், நீர் நிலைகளைப் பேணுதல் என்றின்னவைகள், ஊர்ச்சபையாருள் ஏரிவாரியப் பெருமக்களின் கடமையாயிருந்தது.

இனி, கருந்திட்டைக்குடி வசிட்டேச்வரர் ஆலயத்தின் தென்புற மேல்புறச் சுவர்களில் வெட்டப்பெற்றுள்ள இராசராசன் பதினேழாம் யாண்டுச் சாசனத்து, "ஏழாங் கண்ணாற்று இராஜகேஸரி வாய்க்காலுக்கு தெற்கு ஈ-ஆம் சதிரத்து வடக் கடைய நிலம் மூன்று மாவும்...............ச-ஆம் கண்ணாற்று இராஜகேஸரி வாய்க்காலுக்கு தெற்கு உ-ஆம் சதிரத்து தெற்கடைந்த காலிலே" (S. I. I. Vol. V. p. 508) எனக் காணப்படுதலால் கண்ணாறுகள் பலவெட்டுவித்து, இன்னின்ன கண்ணாறு இவ்வளவிவ்வளவு சதுரத்துக்குப் பாய்வது என்று ஏற்பாடு செய்திருந்தமை பாராட்டத்தக்கது.

இனி, தண்ணீர் வரியை யன்றிக் கண்ணாலக்காணம், குசக்கர்ணம், இலைக்கூலம், தறிப்புடவை, செக்கிறை, இடைப்பாட்டம், நல்லா, நல்லெருது, நாட்டுக்காவல் உள்ளிட்ட பல்வகைத்தாய வரிகளும் இருந்தமை லீடன் சாசனத்தால் அறியலாம். இவற்றுள் நாட்டைக்காப்பது காரணமாக ஏற்பட்ட நாட்டுக்காவலைப் பாடிகாவல் எனவும் வழங்குப.

இனி, தானஞ் செய்யப்படும் நிலங்களுள், சைவ வைணவ ஆலயங்கட்குக் கொடுக்கப்படும் நிலங்கள் தேவதானம் எனவும், சைன பௌத்த ஆலயங்கட்கு அளித்தவை பள்ளிச்சந்தம் என

வும், பார்ப்பனர்க்குத் தந்தவை பட்டவிருத்தி எனவும், அறச்சாலைக் கென்று விடப்பட்டவை சாலாபோகம் எனவும் பெயர் பெறும்.

இனி, இராசராசன் காலத்தில் ஊர்தோறும் சபையிருந்தமையும், அச் சபையினர் தத்தம் ஊரிலுள்ள நிலங்கட்கு அரசிறை ஏற்படுத்தமையும், அதனைத் திரட்டி அரசனுக்குச் செலுத்தினமையும், ஈராண்டு நிரம்பி மூன்றும் யாண்டு தொடங்கவும் இறை கொடாதவர் நிலத்தைப் பறிமுதல் செய்து ஊர்ப்பொதுவாக்கி விற்றமையும், நாட்டைச் சுற்றிப்பார்த்து நன்மை தீமைகளை ஆராய்ந்து தக்கவாறு தண்டம் விதித்தமையும், இராசராசேச்சரத்திற்கு மெய்க்காப்பாளர், கணக்கர், பரிச்சாரகம் செய்வோர்களை அனுப்பிவந்தமையும், சாசனங்களால் அறியக்கிடப்பினும் அவற்றுள் காரிய நிறைவேற்று கழகத்தினரை (நிர்வாக சபையினரை)த் தேர்ந்தெடுக்குமாறு காணப்படவில்லை. எனினும் சம்வத்சரவாரியர் தோட்டவாரியர், ஏரிவாரியர், பொன்வாரியர், பஞ்சவாரியர் என்ற உறுப்பினராய பெருமக்கள் இருந்தனராதல் முன்னோர் சாசனங்களிற் போலவே இன்னவன் சாசனங்களிலும் காணப்படுகின்றது. ஆகவே அன்னவரைத் தேர்ந்தெடுக்குமாறும் முன்னோர் முறையினை ஒட்டியே இன்னோன் காலத்தும் இருந்திருத்தல் அமையும் எனக்கருதி உணர்தற்கிடமிருத்தலின், அம்முறையினை ஈண்டுச் சுருங்க உரைப்பதும் இன்றியமையாததாயிற்று.

இனி, காரிய நிறைவேற்றுகழக உறுப்பினரை (காரியநிர்வாக சபை அங்கத்தினரை)த் தேர்ந்தெடுக்குமிடத்து, காணிக்கடன் செலுத்தற்கேற்ற கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையராய், மறைகளையும் ஆகமங்களையும் நன்குதேர்ந்து அவற்றைப் பிறர்க்குணர்த்தவும் வல்லராய், காரியம் நிறைவேற்றுவதிற் திறமை வாய்ந்தவராய், முப்பத்தைந்துக்கு மேற்பட்டு எழுபத்தைந்துக் குட்பட்ட வயதினராய், நன்னெறியில் ஈட்டிய பொருளும் தூய வாழ்க்கையும் பெற்றவராய், மூன்று யாண்டுக்குட்பட்டு எந்தக் காரிய நிறைவேற்றுக் கழகத்தினும் உறுப்பினராக இருந்திராதவ

ராய் இருப்பவரே தேர்ந்தெடுக்கத் தக்கவராவார். இன்னும், அரைக்கால் வேலி நிலமே உடையராய், ஒரு மறையைக் கற்றூராய், நான்கு பாடியங்களுள் ஒரு பாடியத்தைப் பிறர்க்கு உணர்த்தவும் வல்லாராய் இருப்பவரும் உறுப்பினராகத் தேர்ந்திடத் தக்காரே. சுருங்கச் சொல்லுமிடத்துக், காணிக்கடன் இறுத்தற்கேற்ற நிலமும் சொந்த மனையும் அறத்தாற்றில் ஈட்டியபொருளும் உடையராய்க், கல்வி நிரம்பி ஒழுக்கத்தில் இழுக்கின்றிக் காரியம் நிறைவேற்றுவதலில் வல்லுநரே உறுப்பினராகத் தேர்ந்துகோடற்கேற்றவர் என்றறிந்துகொள்க.

இனி, எந்தக்காரிய நிறைவேற்று கழகத்திலாவது உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும், அவர்க்குச் சிற்றவ்வை, பேரவ்வை, அத்தை, மாமன் என் றின்னவர் மக்களும், அவர்தம் மக்களும், தந்தையும், தாயுடன் பிறந்தவன், தந்தையொடு பிறந்தவன், தம்முடன் பிறந்தவன், மனைவியொடு பிறந்தவன், பெண்கொடுத்த மாமன், உடன்பிறந்தாள் கணவன், மகளை மணந்தவன் என்றிவர்களும், இன்னவர் சுற்றத்தினரும் தேர்ந்தெடுக்கத் தகாதவராவர். இவர்களையன்றி, நெருங்கிய சுற்றத்தினளாகிய ஒரு பெண்ணைத் தகாப்புணர்ச்சி செய்தாரென்றுவது, பார்ப்பனக்கொலை, கள்ளுண்டல், களவாடல், ஆசான்மனைவியைக் கூடல் என்ற இவைகளில் எதையேனும் செய்தவரென்றுவது கிராம குற்றப்பதிவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், அவர்க்கு உறவினரும், ஆராய்வின்றிக் காரியத்திற் றுணியும் இயல்பினரும், பிறர் பொருளை வவ்வினோரும், கள்ளக் கையெழுத்திடலாகிய கூடலேகை (Forgery) செய்தாரும், தீமையான காரியங்களைச் செய்ததன் பொருட்டுக் கழுதைமீதேற்றப்பட்டவரும், இழிகுலத்தவரின் கூட்டுறவு காரணமாகச் சாதியினின்றும் விலக்குண்டு கழுவாய் (பிராயச்சித்தம்) செய்யப்பெறுதவரும் தேர்ந்திடத் தக்கவரல்லர். இன்னும், எத்தகைய கையூட்டுக் (Bribe) கொண்டாரும், கிராமத்துரோகியெனக் கருதப்பட்டவரும், பொதுமகளிரோடு கூடினோரும் கழுவாயால் தூயவரானபோதினும் வாணாளின் முடிவுவரையும் உறுப்பினராகத் தேர்ந்திடத் தகாதவராவர்.

இனி, மேற்கண்ட விதிக் கிணங்கிக் காரிய நிறைவேற்று கழக உறுப்பினரைக் குடவோலை வாயிலாக ஆண்டுதோறும் தேர்ந்தெடுப்பார்கள். தேர்ந்தெடுக்குமிடத்து, தர்ம கிருத்தியம் கடைகாணும் வாரியர், அரசன் ஆணைப்படி, நாட்டில் சபை கூடுதற்கென்று அமைத்த பெருமாளிகையில், இளைஞர் முதல் முதியோர் வரையுமுள்ள எல்லோரையும் குறைவறக் கூட்டி, அன்று அவ்வூர் நம்பிமார் அனைவரையும் அழைத்துவந்து அம் மாளிகையினுள் இருக்கச் செய்து, அவர்க்கு நடுவிற் குடத்தினை வைப்பார்கள். அவருள் வயது முதிர்ந்தார் ஒருவர் அக்குடத்தினை மேலே உயர்த்து, அதனுள் ஒன்றுமில்லை என்பதை எல்லோரும் அறியக்காட்டிக் கீழே வைத்த பின்னர், ஒவ்வொரு ஊரையும் முப்பது பகுதியாகப் பகுத்து, ஒவ்வொரு பகுதியிலுள்ள ஒவ்வொருவரும் தகுதியுடையரெனத் தமக்குத் தோன்றும் ஒருவர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, எழுதிய ஓலைகளை ஒருங்கு சேர்த்து, இன்ன பகுதியைச் சார்ந்த ஓலை என்பது விளங்க, அப் பகுதியின் பெயர் எழுதிய வாயோலை பூட்டிக் கட்டிக் குடத்தில் இடுவர். இவ்வாறு முப்பது பகுதியினரும் இட்டபின்னர், அம் முதியார், அங்கு நடைபெறுவது இன்னதென் றறியாத ஒரு சிறுவனைக் கொண்டு, அக் குடத்தினின்றும் ஒரு ஓலைக் கட்டினை எடுப்பித்து, அதனை அவிழ்த்துப் பிறிதொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் ஒரு ஓலையை அவனைக்கொண்டெடுக்கச்செய்து, அதனைத் தாம் வாங்கி, அங்கிருக்கும் கரணத்தான் கையிற் கொடுப்பர். அவன், தன் ஐந்து விரல்களையும் அகலவிரித்து அகங்கையில் அதனை ஏற்று, அதன்கண் எழுதப்பெற்றுள்ள பெயரை யாவரும் அறிய வாசிப்பன். அங்கிருந்த நம்பிமார் அனைவரும் அவ்வோலையைப் படித்திடுவர். அதன் பின்னர் அப்பெயர் ஒரு ஓலையின்கண் எழுதிக்கொள்ளப்படும். இவ்வாறு மற்றைய கட்டுகளையும் ஒன்றின்பின் ஒன்றாக முன்போல் எடுப்பித்துப் பிரித்துக் குடத்திட்டுக் குலுக்கி, முன்னையிற்போல ஒவ்வொரு ஓலையாக எடுக்கச்செய்து எழுதிக்கொள்வார்கள். இவ்வண்ணம் எழுதிய முப்பதின்மருள் கல்வியின் முதிர்ந்து வயதின் மூத்தார் பன்னிருவரைச் சம்வத்சரவாரியர் எனத்

தேர்ந்திடுவர். மற்றைய பதினெண்மருள் பன்னிருவர் தோட்டவாரிய ராகவும், அறுவர் ஏரிவாரிய ராகவும் தேர்ந்திடப்படுவர். பின்னரும், இம்முறையே முப்பது ஓலைகளைத் தேர்ந்து குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் பன்னிரண்டினை எடுப்பித்து, அறுவரைப் பொன்வாரிய ராகவும், அறுவரைப் பஞ்சவாரிய ராகவும் ஏற்படுத்துவார்கள். ஆகவே, இக் காரிய நிறைவேற்று கழகம், சம்வச்சரவாரியர், தோட்டவாரியர், ஏரிவாரியர், பொன்வாரியர், பஞ்சவாரியார் என்ற ஐவகைப்பட்ட வாரியரைத் தன்பாற் கொண்டதாகும். இக் கழக உறுப்பினர், ஏதேனும் தவறுதல் காரணமாக இடையில் விலக்குண்டா லல்லது, தம்மைத் தேர்ந்தெடுத்த அன்றுதொட்டு முந்நூற்றறுபது நாள் வரையினும் தம் வேலையை நடத்துதற்கு எத்தகைய தடையும் உடையரல்லர். அவருள்; நியாய விசாரணை செய்து கொலைக்குக் கொலை, ஏனையவற்றிற்குச் சிறை தளை சங்கிலிபுகுதல் முதலிய தண்டம் விதித்தலும், கோயிற் காரியங்கள் ஒழுங்குற நடக்கின்றனவா என்றாராய்தலும், ஊரைச் சுற்றிப்பார்த்து நன்மை தீமைகளை நாடி வேண்டுவ செய்தலுமாகிய பொதுக்காரியங்களை மேற்கொள்வது சம்வச்சரவாரியர் கடமையாகும். ஏரி முதலிய நீர்நிலைகளைப் பழுதுறுமற் பாதுகாத்தலும், விளைச்சலுக்கு வேண்டும் நீரைச் சரிவரப் பாய்ச்சுவித்தலும் ஆகியவற்றை ஏரிவாரியக்காரரும், நிலத்தைப் பொறுத்தனவற்றைத் தோட்டவாரியக்காரரும் மேற்கொண்டிருந்தனர். பலவகையானும் திரட்டப்படும் காசுகளை ஆராய்வு செய்வது பொன்வாரியக்காரர் பொறுப்பாக இருந்தது. பஞ்சவாரியக்காரர் கடமை இன்னதெனத் தெரியவில்லை. மேற்கூறிய கழக உறுப்பினரைப் பெருமக்கள் என்ப. இவர்கள் கூடுதற்கு ஊர்தோறும் மாளிகை அமைக்கப்பெற்றிருந்தது. அது நாலூர் என்னும் சிற்றூரார் இராசராசன் எனப் பெயரியதொரு பெருமாளிகையிற் சபை கூடியமை 322 of 1910 னுல் காணப்படுதலின் அறியப்படும். இஃதன்றி மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் பெருமக்கள் குறைவறக் கூடுதற்கென இராசராசன் எடுப்பித்த செம்பியன்மாதேவிப் பெருமண்டபமும் அதனை வலியுறுத்தும். No. 178 of appendix B of 1915.

இனி, மேற்கூறிய கழகத்தார் பணித்தவற்றைச் செய்பவன் கரணத்தான் அல்லது 'மத்தியஸ்தன்' எனப்படுவான். நல்ல வழியில் ஈட்டிய பொருளும் நல்லொழுக்கமும் உடையவனையே கணக்கனாக ஏற்படுத்துவர். அவன் எழுதிய கணக்கைப் பெருமக்கள் வேண்டும் போது, பிறனைக்கொண்டு காட்டாது, தானே காண்பித்து அவர்களால் நன்கு மதிக்கப்பட்டாலொழிய அடுத்த ஆண்டில் கணக்கெழுதும் உரிமை அவனுக்கு உண்டாகமாட்டாது. கணக்கனுக்கு ஒரு நாளைக்கு நாழி நெல்லும் வருடத்திற்கு ஏழு கழஞ்சு பொன்னும் ஓரிணைக் கூறையும் சம்பளம் கொடுக்கப்படும். கணக்கன், ஆராய்வு செய்வதற்குக் கணக்கைப் பெருமக்களிடம் கொடுக்கும் போது, மழுவைக் (Red-hot iron) கையில் ஏந்தி உறுதிமொழி கூறிக்கொடுத்திடக் கையில் ஊறுபாடு இல்லையாயின், அவனுக் கேற்பட்ட ஏழு கழஞ்சு பொன்னின் மேலும் காற் பங்கு பொன் கூட்டிக் கொடுப்பதும், ஊறுபாடு நேருமாயின் பத்துக் கழஞ்சு பொன் தண்டமும் ஆக்கினையும் ஏற்படுத்துவதும் வழக்கென்பர். G. O. No. 99 Home (Mis) 29th august 1916, p. 116. (தொடரும்.)

உ

எனது நனவிற் கனா.

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்,
தமிழ்ப்புலவர், சலகண்டபுரம்.

அளந்தமைத்த வாழ்நாட்களிற் கழிந்தனபோக எஞ்சி நின்ற இருப்பறியாமல் ஒன்றை வீணாக இழக்கும் மடமையும் அச்சமும் மறப்ப, 'இற்றைப்பகற்போது என் விரைந்து செல்லவில்லை' என வெறுப்புற்று, யான், திருவரங்கப் பெருமான்போற் பள்ளி கொள்ளும் வண்ணம், பண்டறிவுண்மையிற் குறித்து வந்த விருந்தாகக் கடுப்புநோய் என் வயிற்றிற்புக்கது. சின்னாட்குப் பின் மறுமுறைகாணும் அன்பால் வலியப்போந்த அங்

நட்பாளனைக் கவலையும் கடுமையும் உள்மூடி, வெளிமுக அன்பு காட்டியேனும் வரவேற்காதொழிய என்னால் இயலவில்லை. வந்த பின் செயற்பாலதென்? நடந்துபோந்த அடியிணைகள் நோமே என அந்நண்பனது கால்களை வருடுங்கடமையை அடிக்கடி என் வயிற்றறைப் பிசைந்து கொள்வதன் வழியாகச் செலுத்தினேன். குற்றேவலரின் உழைப்பு மிகுமளவு, இன்பமிகுதி ஆள்வோர்க்குச் சேர்வதால், எப்போதும் அடிமைகளின் அயர்ச்சிகளை அவர்கள் உணர்தல் கூடாமையே. அத்தவறுபாடு யார்கண்ணதாகும்? அமுக்கி அமுக்கி வருடியும் 'அமையும்' என்னாது, இன்பவுறக்க மெய்திய அத்திய நண்பர், 'உனது கடமையை இன்னும் நன்றாக விரைந்து செய்' என அதட்டிப் பாடிக்கொண்டிருந்தனர். இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்வதன்றே சால்பாவது!

ஓயாத இக்கைத்தொண்டை எவ்வகையிலேனும் நீக்கிச் சற்று இளைப்பாற வழிதேடினேன். ஒன்று தோன்றிற்று, மெல்ல வுறக்கங்கொள்ளலாம் என. ஆனால் அதனை வருவிக்க வேண்டுமே. கண்குவிந்த பின்னரே துயில் தொடங்குமியற்கை கொண்டு அதனை நான் செய்தால் அஃது தானே வாராதா? நம்மா லாவதையே நாம் செய்யலாம். வெற்றிலைபாக்கு வைத்தழைத்தும் தூக்கம் வாராது எங்கேயோ தூங்கிக்கொண் டிருந்துவிட்டது. என் கைத்தொண்டை நீக்கத் தலைப்பட்டால் தன்னை அப்பிணியரசு சினந்து பற்றுமென்றஞ்சியோ, உரியகாலத்தன்றி வேண்டும்போ தெல்லாம் எளிதிற்றலைகாட்டுவதால் தன் பெருமையும் மதிப்புங் கெடுமெனக் கருதியோ, ஒருவர் அழுவதைப்பார்க்க விரும்பி அடித்துக்கொண்டிருக்கும் புண்ணியர் செய்கையிற்றிருவுளங் கொண்டோ, வேறெதுபற்றியோ என் வேண்டுதல் வீணாக மன மிரங்காமல் உறக்கம் ஒதுங்கி நின்றது.

அது வரும்போது வருக! நான் உறங்குவதாக நினைத்தேனும் விருந்தாளி அலட்டாதிருப்பன் எனக் கண்களை இறுகமூடி அக் கணமே நண்பகலை நள்ளிரவாக மாற்றிக்கொண்டேன். என் சூழ்ச்சி பலிப்ப, வருத்தமறியா விருந்தாளியும் மெய்யெனக் கருதித் தானும் சிறிது கண்ணயர்வானாயினன்.

இனி, நான் மூடிய கண்களைத்திறக்குமோசை அவன் எஃகிய செவியிற்றுக்கி விழிப்பனேல், வருத்தமெய்துமேயெனப் பின்னும் இறுகப்பூட்டிய கண்களால் வீணே கழியுங்காலம் பயன்பெற ஓர்கனுக் காணலாமென விரும்பினேன். வழக்கம்போல் உறக்கம் வந்து காட்டும் கனவை இப்போது உரிமையோடு காட்டவல்லார் எவரே? எனக் கவலையுற்றுத் தேடுங்காலை, உள்ளத்தின் அடிவாரத்தினின்று சற்றும் ஓய்வொழிச்சலின்றிச் சுரந்து பெருகி இடைவிடாதோடிக்கொண்டிருக்கும் நினைவுகளாகிய ஊற்றுக்களை சேர்ந்து குறையிரந்தேன். ஒன்றை யொன்று தள்ளிச்சென்று முன்னேறித்தொடர்ந்து அணியணியாய்த் தலைநிமிர்ந்தோடிக் கொண்டிருக்கும் அவ்வெள்ளத்திரள் என்குறைகளுக்குச் செவி சாய்க்கச் சிலகணப்போதுகள் சென்றன. என்றும் வாயாற் பேசியறியாத அவை என் வேண்டுகோட்கிணங்கி "உறக்கமில்லைக் கனவு காணும் உளவன்மை நினக்குளதோ? எம்மை ஓர் வழிப்படுத்துச் செந்நெறி ஒன்றில் நீளச்செலுத்தும் ஆற்றலுடையைகொல்? இல்லாவிடின் எம்முதவியிற் பயன்பெறுய்." என வினவிச்செப்பின.

"அன்பீர்! என் அகவன்மையும், நும்மைக்கொண்டு செலுத்தும் ஆற்றலும் எனக்கமைந்துள்ள வளவிற்கேனும் நீவிர் செய்யவற்றைச் செய்யலாமல்லவா"? என நேர்மொழிந்தேன். 'தடையில்லை, புறப்படு; எங்கள் இற்றைவேலை கெடினும் கெடுக; உறுதியோடு கால்களை ஊன்றி வை; பிற்படாதே; பிறர் இகழ்ச்சியிற் கண்ணைத்திருப்பாதே; ஆற்றல் மீறிய செய்கையிற் றவறுபாடுகளை ஆன்றோர் இகழ்வாரல்லர்; ஆதலின் இந்நூற்கு அவையடக்கம் வேண்டுவதின்று' எனக்கூறி என்னை இட்டுக் கொண்டுசென்ற அவ்வலைக்குழாங்கள், வழியில் அடிக்கடி நினைப்பூட்டியவை யெல்லாம், எம்மை ஒருவழிச்செலுத்தச் சற்றுத் தளரினும் உன்னைக் கைவிட்டேகுவோம் எனக் கட்டியங் கூறியதைத்தவிர வேறில்லை. மேல் எதிர்ப்படும் காட்சியிலோடிக் கொண்டிருந்த நாட்டத்தாலும், வழிகாட்டிகளைச் சிதறாது தொடர்ந்து நடத்தும் அச்சங்கலந்த பெரும் பொறுப்பாலும் நெருக்குண்டிருந்த யான், இதுகாறும் அறியாத அப்புதிய வழி

யின் இருமருங்குந்தோன்றும் இயற்கை வளங்களை நன்கறிந்து கொள்ள முடியவில்லை. தாமே கண்டு பிறர்க்குரைக்கும் வழக்க மான கனவுகட்கு முற்றும் எதிரிடையாகப் பலர் கண்ணுக்கும் நேரே காட்டற்குரிய இக்கனவை எனக்களித்ததற்காக என் எண்ணத்தொடர்ச்சிகளுக்கு மனமார்ந்த நன்றி பாராட்டாநிரேன்.

என்ன அழகு! ஆ! ஆ!! என்ன வியப்பு. நோக்கும் கண்ணுக்கும் வாயுரைக்கும் அடங்காப்புதுமை. மனம்தான், இதனை எப்படி விழுங்கும்? பல கதிரவர்களின் பேரொளியும் மின் மினிப்புல்லொளியினும் சிறுக நின்று சுடர்விடும் இஃது என்ன பொருள்?

"மின்கொண்டி ழைத்தவெயி லைக்கொடுச மைத்த
என்கொண்டி ழைத்தனவெ னத்தெரிகி லாத
வன்கொண்டல் விட்டுமதி முட்டுவன மாடம்" என

முன் ஓர்புலவர்பெருந்தகை மொழிந்த வாறே, மறைந்தொழியா மின்னலையும், முதிர்ந்து மாறா இளவெயிலைபுந் தலைப்பெய்தமைத்த இம் மாமணி மாடம் காண்போர் மடைமைமுகிலைப் போக்கி மதியை முட்டி ஊடுருவிக்கொண்டு மேற்செல்வதோர் ஒளிப் பிழம்பேயாம். என் குவிந்த கண்களைக் கூசுவிக்குமிப்பேரொளி, நிறந்த கண்களை என் செய்யாது? இச்சுடர் தாக்கிப்போலாம் வானுலகு பொன்னுலகாயது: அந்நன்றி செலுத்தற்கேயோ வானகத்தோர் இம்மண்ணுலக மக்களாய்த்தோன்றுவதும். என் றும் அசைவற்ற உறுதிப்பாடுற்ற இம்மாளிகையின் அடிப்புறம் கீழுலகவெல்லையிலேனும் அதற்கப்பாலேனும் காணப்படலாம். மேல் முகடும் வான நாட்டில் அவ்வாறும். நாற்றிசையும் உள் ளடங்கிய மேற்பரப்பு, கற்றுணர்ந்த அறிஞர்களின் பேரறிவே போல அளவுபடுவதன்று. காண்போர் கண்களொன்றோ, அவர் தம் உள்ளத்தையும் உடலையும் தொழிலறத்தடுத்துத் தன்கட் கொண்ட ஓவிய வினங்களில் ஒன்றாக்கிவிடும் சிறந்த வேலைப்பாடு களை ஆயிரத்துக்கு இன்னும் மிக்க நாவில்லாத நான் எப்படிப் புகழ்வேன்? இவ்வோவியங்கட்கு இல்லை! இல்லை!! பார்க்க வந்தோரையே ஓவியங்களாக்கிக் கொண்ட இதன் பொற்புக்கு

"இணையேயில்லை" என்னுங் கூச்சலானன்றிப் புகழின் இறுதியை அணுக யார் தாம் வல்லுநர்? ஒன்றுமட்டும் உண்மை. இப் பொன்மாளிகையை நோக்க வந்தாரை மீட்டற்குக் கண்ணிலாப் பிறர் தாம் ஏற்றவர், ஏனெனில், கண்ணுடையார் எவரும் ஆங்கு ஓவியமாவராதலானே. இத்திருக்கோயில், உலகப்பொருட் களால் ஆயதன்று, உலகப்பொருட்கள் அல்லாதவுமல்ல. எது மெய்? உலகப்பொருட்கள் பலவற்றோடும் பன்னெடு நாட்பழகிப் பெற்ற அறிவைச் சிறுகச் சிறுகத் திரட்டிச் சூழ்கொண்டு அரிதின்முயன்று வெளியிட்டு நம்மனோர்க்கு நல்கிய நல்லிசைப் புலமை வள்ளல்களின் தேர்ந்த கைவேலையேயாம். நன்றாய் உணரின், உலகங் கடந்த பெரும் பொருட்களையும் இஃது கண் ணுறக் காட்டவல்லதே. இவ்வியத்தகுகாட்சி, கண்களுக்கு விருந்தளிப்பதோடமையாது, நாவினுந்தேனூற்றோடப் பெருக்கு மெனின், இதைப் பொதுமக்கள் படைப்பென்பதறியாமையே. ஒளிப்பிழம்புகளின் வாழ்விடமாகக் கடவுளோ, அவரருள்பெற்ற கருவிலே திருவுடையாரோ இதனையமைத்தனர் போலும்.!

பல்லாயிரம் ஆண்டுகளாக இதன் முழுப்பேரழகையும் மொண்டுகொள்ளற்கு அஃகியகன்ற அறிவாளர் பலரும் கைவளைக் கின்றனரெனினும், அப்பேரொளியின் எட்டுணைப்பகுதி அன்றி அதனினும் பன்னூறு மடங்கு சிறிய அணுத்தனையுங் கவர்ந்தா ரிலர்; முடியாதென மீண்டாருமல்லர். இவ்வொளி மணிமாடம் தோன்றி எத்தனை ஆண்டுகளோ! வரையறுப்பது ஐயமே! இன் னும் அக்கட்டிடவேலை நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றது. கைவல்ல நுண்ணூலறிஞர் பலரும் இதன் பகுதிகளுள் யாதேனு மொன்றைச் செப்பனிட்டுத் தீர்ப்பதன்றி வறிது பெயர்வாரல்லர். முற்காலத்தும் இப்படித்தான் முடிந்திருக்கவேண்டும். வருங்காலத் தும் இவ்வேலை நிகழும் என்பதும் தேற்றமே. இங்ஙனம் நீளத் தொழில் நிகழுமேல் இவ்வேலை என்றும் முற்றுறுவதன்று. ஓர் கால் மாப்பேரூழிகாலத்துறங்கினுலும் மீண்டும் உலகம் படைக் கப்படுங்காலத்துத் தானே விழித்துக்கொள்ளும். இவ்வாற்றால் அதனைப் பழையதென்பதற்கில்லை. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப்-பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்ப்

பெற்றித்தாய் நிற்கும் அது காலவேற்றுமையாற் றூக்குண்ணுது, பழமையும் புதுமையும் வேண்டியோர்க்குணர்த்தத் தன்கட்கொண் டுள்ளது போலும். ஊன்றிக் கருதுவோரின் உள்ளத்தை அறிவின் வல்லமையோடு பெயர்த்துச் சேய்மையிற் செலுத்தும் அப் பொருட்களின் பொலிவுகளைக் காணலும் உரைத்தலும் எளிதாக லாம். அவற்றோடு கொஞ்சிப் பேசுவதோ, கூடியுறவாடுவதோ, படி எடுத்தமைத்தலோ, அவரவரறிவின் றிறங்கட்கேற்பப் பல் வேறு வகைப்படும். உண்பொருள் ஒன்று தொண்டைக்கட்கிடப் புழி நாம் பேசவியலாதவாறேபோல், அதன் அருமைகளைத் தேர்ந் துணரும்போதும் ஊமர்களாகத்தான் ஆவோம். நம் குறிப்பும் வேறொன்றில் நுழையமாட்டாது. இவ்வண்ணம் வெளியிடற் கரிய பல சிக்கல்களோடு என் அறிவணுகலாகாத உயர்நிலைப் பொருளோடு என் உள்ளம் புணர்ந்ததுகொண்டு உங்கட்கென் னுரைகள், தமது மனமகிழ்ச்சியை உணர்த்தப்புக்க பேச்சறியாக் குழந்தைகளின் கூச்சலினும் சிறந்த பயன் தரா. பெருங்கல்வி திறந்தமைத்தகூர்ங்கண்ணரேபோல், என் தகுதியில்லாப்புறக்கென்ற விழிகளையும் அக்கட்டிடத்தின் புறத்தே சுழல்வித்துக்கொண்டு என் அருகிலடுத்த அறிவின் றூண்மேற்கையிட்டுப் பையவுலாய் போந்தேன். அதன் அடிவரிகளின் பெருமை உரைப்போரது உள்ளக்கருத்தின் தகுதியைப் பொறுத்ததாயினும் இரண்டடி களுக்குச் சிறிதும் குறையப்படாதென்னும் வரையறையுண்டு. இவ்வரம்புக்குட்பட்டே அஃதமைக்கப்பட்டிருந்தது. சுற்றுப் புறத்தும் மேற்பகுதிகளிலும் கவித்த பாக்கள் பெரும்பான்மை யும் நால்வகைப்படுமாயினும், ஒவ்வோர் வகையினும் கிளைத்த பல்வேறு இனங்களால் யாப்புறுக்கப்பட்டவை. பொருத்துவாய் தெரிவது எளிதல்லவென்றாலும், சங்கிலித் தொடர்கள் போல் ஓர் முடிவில் வேறோர் தொடக்கம் தோன்றி இடையற நீண்டு சென்றுள்ளன. ஒன்றற்கொன்று இணையும் இயைபுகள் அருகா மையிலேயே இருக்கவேண்டுமென்பதின்றிப் பொருந்துமாற்றால் எங்கேனுமிருக்கலாமென்பது மேல்வரிச்சட்டம். ஒலியின் அணுப் பகுதிகள் ஒருங்கு சேர்ந்த தொகுதி, அவை இணைந்ததொடர், அவற்றினுள் மூழ்கிய தெள்ளிய நுண்பொருள்கள், இவை

பொருந்திய சேர்க்கைக்கட்டு, அதினின்று ததும்பும் உயரிய வனப்பு என்னும் இவை ஐந்திஞலியன்ற அரிய வேலையே எப்புறமும்! இக்கவினியமாடம் கால்கொள்ளுமுன், அமைக்கப் புக்கவர்கள் தம் மனவெளியில் அருவமாக முற்படவகுத்தழகு நோக்கிய பின்னரே இத்தொழிலிற் றலையிட்டிருக்கக் கூடுமென எண்ணினேன். இயற்கையரசியின் எல்லா நலங்களையும் பன்னாட் பயின்ற தேர்ச்சியாற் பொதிந்த பொருட்களை அவர் தம் அறிவு கைநிறைய வாரி வழங்கினும், அவற்றை அவ்வாறே சொல்லாலுருப்படுத்து வெளிப்படுத்தியவாற்றல் மிகவும் அரியதே என அப்பழக்கமுடையார் பாராட்டுகின்றனர். தமது வாழ்நாட்களின் உயர்ந்த தேட்டங்களைப் பின் வருவோர்க்கென மனமுவந்து வழங்கிப்போந்த அக்கலைஞர், தாங்கண்டு மகிழ்ந்ததைத்தவிர வேறு கூலியை எதிர்நோக்கினவர்களல்லர். பின்னர், இத்துறையில் தேர்ச்சிபெறுகுநர்பலரும் இவ்வண்ணம் தமது தொழில் நுணுக்கங்களை நம் தம்வழித்தோன்றல்களின் வாழ்க்கைக்கு எளிதிற் பயன்படுமாறு ஈண்டே இயற்றி நிறுவக்கடவர் என வழிகாட்டிச் சென்றனரென்னுங் குறிப்பும் தோன்றிற்று.

இப்பழைய வினைஞருள் ஒருவர் தம் சிறந்த வேலைக்குப் பரிசாகப் பதினறு நூறுயிரம் பொன் பெற்றதுண்டென்றும், வேறெருவர், உயர்ந்த மலையேறக் கண்ணுக்குத் தெரியக்கண்ட நாடுகளைக் கூலியாக ஏற்றனரென்றும், இவ்வாறு பற்பலர் நன்கொடையும், செல்வர்களின் மதிப்பும் பாராட்டுதலு மெய்தினர்களென்றும் சுவர்ப்புறத்தெழுதப்பட்ட கல்வெட்டுக்கள் கூறின. அப்படியாயின், அவர்பெற்ற கூலி, தமது வேலையின்பொருட்டாகாது, கொடுப்போர் பெயரைப் புகழோடு கூட்டி என்றும் இறவாதுயிர்ப்பித்தற்குப் பெறப்பட்டதாகும் எனத்துணிந்தேன். தமது கடமையை நனிசிறப்பச்செய்தோமென அவர்கள் மகிழுமளவுக்கு வேறு வானட்டுக் கற்பக வுலகம் பெறினும் களிக்குநரல்லர். அற்றுகலினன்றே அவர்கள் நல்லிசைப் புலவரென நாளுமொளி சிறப்பவிளங்குகின்றனர். கண்பெற்றபேறு தருதற்கென்றே சமைந்த இத்திருக்கோயிலை என்போற்காண அவாவிப்

புக்க இளைஞரிற் சிலர்பலர், தம் அறியாமையாலஞ்சியோ, இஃது யாதோவென மருண்டோ அறிவு செல்லுங் கூர்மையின்றெனச் சோம்பியோ, இதனினும் சிறந்த பிறிது காண்பாமென வூழ்வயப் பட்டோ புறத்தே நழுவி விட்டனர். ஆயினும், வேறுசில மாளிகைகளோடிதனை ஒப்புக்காணும் ஆராய்ச்சியாளர் சிலர் சூழ்ந்து நின்றிருந்தனர். நிகழ்கால எதிர்காலங்களில் வல்லுநர் வகுத்தற்கெனத் தனிப்பட்ட வெள்ளிடைகளும் விடப்பட்டிருந் தன. அவ்விடங்களிற் கையறியாச் சில இளைஞர், அம்மாட நிலைக் கும் தகுதிக்கும் ஒவ்வாதபடி விளையாட்டுச் செய்குன்றங்களை யமைத்துக்கொண்டிருந்தனர். முன்னைய வியப்புக்கு அடிமை யாகிய என் கண்ணும் கருத்தும், இப்புதிய தொழில்களின் அழகும் உறுதியும் பயனுமற்ற இளமையை நோக்கிற்றில; வெறுப்போடென்னை வேறு திக்கிற் செலுத்தின. நாட்டின் அப் போதப்போதைய ஆவல்களைக் காலங் கண்காட்டிக் குறிப்பிடுவதற் கேற்ப, உரிய் துறைகளிற் கைபோயவர்கள், தம் அறிவின் வல்லமையை உயிர்ச்சிலையாக ஈண்டு நாட்டல் வேண்டுமெனப் பெரியோர் குறித்த அவ்விடங்கள் வீணுக்கப்படுவது தக்கதாகாது என்பது என் எண்ணம். ஆங்குத் தோன்றிய உயிரோவியங்கள், என் பார்வையை வலித்து, அடியிட்டு மேல்மட்டும் நிறைவுறுதன வும், சிறிது பகுதி தொடங்கி இடையே கைவிடப்பட்டு நிற்பன வும், அடிப்படையிலேயே அமைந்து கிடப்பனவும், அடி கோலற்குத் தோண்டப்பட்டுத் தூர்ந்துள்ளனவுமாகிப், பலசிகா அமைப்புக்களை உட்கொண்டு கோலுமுன் தவக்கமுற்று, அந்நிலை யிலேயே பொலிவற வழிந்து சிதறிக்கிடந்த உருக்கள்குவிந்த சில இடங்களைச்சுட்டிக் காட்டின. அவ்வத்திறம் தெரிந்தியற்ற வல்ல வெவ்வேறு கைத்தொழிற்புலவர் முன்வாராமையே அவற் றிற்குப் பொருட்டாக விருக்குமென என் கருத்து கவலையோடு மொருவிற்று. சிலபலர் இருந்து கூர்ந்து நோக்கி மகிழுங் கூடங்கள் எண்ணிறந்தவாயினும், பொதுமக்கள் எளிதாக உலாவு தற்கு இன்னும் ஏராளமான நடைமுற்றங்கள் வேண்டும். இப் போதிருப்பவை போதா. அளவளாவி உரைகூறும் நடைகள் மேனுட்டு முறையில் அமைப்பின் சாலப்பயன்படும். (தொடரும்.)

உ

பதி பசு பாசப் பனுவல்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

இது, சைவசித்தாந்த முணர்த்தும் நூல்களுள் ஒன்று. பிரமாணவியல், பதிசாதகவியல், பசு சாதகவியல், பாச சாதகவியல், பொதுவியல், போதகவியல் என ஆறு இயல்களை உடைத்து. மிகவும் சிதைவுற்ற பழைய ஏட்டுச் சுவடியினின்றும் எழுதப் பெற்றது. இதனை இயற்றியவர் மறைஞானசம்பந்தர்.

பாயிரம்.

காரூர் பொழிலுந் தேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமு
மாதவர் கூட்டமு மீதுறை தில்லையிற்
கனக சபையிற் பனக முனிவனும்
போத மிகுத்த புலிக்கான் முனிவனு
மாதவ விரணிய வருமனு மிறைஞ்சத்
திருமா லயனிந் திரனிமை யோரு
மருமா மறையா லடிபணிந் தேத்தப்
பானு கம்பர் பணிலமும் வாண
னுன குடமுழ வாதியு முழக்க
மாண்டகு மதுர வாய்மொழி யிடமாத்
தாண்டவம் புரிவோன் சரண கமலம்
புந்தியி னுளுஞ் சிந்தனை பண்ணி
யப்பதி தன்னி லருங்குகை மடத்தி
லெப்பதி யோரு மேத்தவு மிருந்தோன்
இகமது தன்னிற் சுகனையொப் பானேன்
வெண்ணெ யம்பதியில் மெய்கண்ட தேவன்
மண்ணிடை மீண்டு வருதலொப் பானே

னருந்தமி ழுணர்வா லகத்திய முனியெனத்
திருந்துதொல் காப்பியஞ் சிவமயஞ் செய்தோ
ஞுசில் வடநூற் போச ராச
ஞுதி கமலா லயமுதற் புராண
மோது மதியாற் சூதனை யொப்போன்
மூவர் முதலா முதியவர் பாட
லாவ லுடனே யடங்கலு முணர்ந்தோ
னவமிகு நூல்கள் காணு விதத்துடன்
சிவதரு மோத்தாந் தமிழாற் செய்தோ
ஞுகம பண்டித னருந்தவர் புகலும்
மோகமில் சாத்திர முழுது முணர்ந்தோன்
நண்ணிய தவமறை ஞானசம் பந்த
னெண்ணிய முன்னூ லியல்வழு வாம
லதிக சைவ வளவைமுன் காணப்
பதிபசு பாசப் பனுவல்செய் தனனே.

மலையான் மகள்பெற்ற வாரணத்தை வாழ்த்த
வொலையாம்வீ டேனையமூன் றும். (க)

முதல்வன் சிவனுயிர்க்க ஞுதிமல முத்தன்
பதமலரென் சென்னியில்வைப் பாம். (உ)

பெற்றுளைச் சிற்றுயிரைப் பேருயிரி னீங்காளைப்
பொற்றுளிற் சூட்டுவநாட் போது. (ங)

இந்த விருவர் புதல்வ ரிணையடியு
நந்திபத மும்பணிவா நாம். (ச)

அனுதிமல முத்தனரு ளாகமுந் தந்த
வனுசிரமா தாள்வணங்கு வாம். (ரு)

அமலனைக்கண் டாலவனத் தாட்டுவித்த வம்மை
கமலமலர்த் தாடொழுமெங் கை. (சு)

என்பிணைப்பெண் ணுக்குமியற் சம்பந்த னேழிசைப்பாட்
டென்பிறப்புந் தீர்த்தளிக்கு மின்பு. (எ)

வாக்கியலால் வன்கதவை மாமறைக்காட் டிற்றிறந்த
வாக்கிறைவன் பாதநினை வாம். (அ)

மோகநா மற்றோ மொழிந்துனியும் வெள்ளானைப்
பாகனு ரூரன் பதம். (கூ)

திருவாத வூரர் திருவாக் கடியு
மொருவாதெம் வாயினுச்சி யும். (ய)

நெஞ்சினுநீங் காதெமக்கு நிற்கு மாதத்தன்
கஞ்சனூ ராள்வான் கழல். (கக)

மதுரகவி மாளிகைத்தே வன்முதலோர் பாதப்
புதுமலரெஞ் சென்னியில்வைப் போம். (கஉ)

வேதகனை வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனெனும்
போதகனைப் போதமும்வைப் போம். (கங)

மெய்கண்ட தேவ னுரைவிளக்கும் வித்தகர்தாள்
கைகொண் டருச்சிப்பேங் காண். (கச)

பாசமற வெம்முளமைப் பார்த்துபதே சித்தாண்ட
தேசிகர்தாள் வைப்பாஞ் சிரத்து. (கரு)

வாழ்க மறையவரும் வானவரு மானினமும்
வீழ்கபுனல் வாழ்கமுறை வேந்து. (கசு)

வாழ்க சிவாகமும் வல்லார்க ளெல்லாருஞ்
சூழ்கசிவ னென்றுரைக்குஞ் சொல். (கஎ)

ஊமன் றெழுழலும் பொருளுணர்த்த லோர்ந்துரைப்பாம்
யாமிறைவ னூற்பயனை யீங்கு. (கஅ)

தொகுத்துப் பதிபசுபா சம்விளங்கச் சொல்வாம்
மதித்தமலன் வாக்காக மம். (ககூ)

வினைவினர் வேதமுத லிந்நாலின் குற்றங்
களைவரெமக் குப்பரிந்து காண். (உய)

பாயிர முற்றும்.

(தொடரும்.)

௨

மாதங்கள்.

திருவாளர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், நாங்குனேரி.

"தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநுந் நாளுண் ணும்."

"வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுத்லால்." நாலடியார்.

மிகவும் விளக்கமாகத் தோன்றுகின்ற ஞாயிறு அளவுகருவியாக, கூற்றுவன் நமது வாழ்நாளை ஒவ்வொரு நாளும் அளந்து உண்ணுகின்றான். விளங்குகின்ற ஒளிமண்டிலமான அஞ்ஞாயிறும் நமது வாழ்நாளுக்கு அளவாக ஒவ்வொரு நாளும் தவறாமல் தோன்றுகின்றான். அவன் பகலையும் செய்கிறான், இரவையும் செய்கிறான். அவன் நமக்குத் தோன்றுகின்ற காலமே பகலெனப் படும்; அவன் நமக்குத் தோன்றாதிருக்கின்ற காலமே இரவெனப் படும். பகலில் ஒளி திகழ்கிறது; இரவில் இருள் மிகுகிறது. அவன் பகலைச் செய்வதால் பகலவனெனவும், இரவைச் செய்வதால் இரவி யெனவும் சொல்லப்படுகிறான். பகலும் இரவும் சேர்ந்தது ஓர் நாள். இந்நாள் அறுபது நாழிகைகளாகப் பகுக்கப் பெற்றிருக்கிறது. சிலகாலங்களில் பகற்பொழுது அதிகமாக இருக்கும்; சிலகாலங்களில் இராப்பொழுது அதிகமாக இருக்கும். பகல் அதிகமாக இருந்தாலும் அன்றி இரவு அதிகமாக இருந்தாலும், எக்காலத்திலும் பகலும் இரவும் சேர்ந்து அறுபது நாழிகைகளே. எவ்வாறெனில், பகல் அதிகமாக இருக்கிற காலத்திலே இரவு குறைந்திருக்கிறது; இரவு அதிகமாக இருக்கிற காலத்திலே

பகல் குறைந்திருக்கிறது. பகலில் எவ்வளவு நாழிகை அதிகமாக இருக்கிறதோ அல்லது குறைவாக இருக்கிறதோ அவ்வளவு நாழிகை இரவில் குறைந்தோ அல்லது அதிகமாகவோ இருக்கிறது.

இரவி தோன்றுகிற நேரம்முதல், இரவி மறைகிற நேரம் வரை யுள்ளகாலம் பகலெனவும், அவன் மறைந்து மீண்டும் தோன்றுகிறவரை யுள்ளகாலம் இரவெனவும் இவ்வுலகத்திலுள்ள மக்கள் அனைவராலும் கொள்ளப்படுகின்றன. இருந்தாலும் தமிழ் மக்கள் மட்டுமே அவன் தோன்றுகிற காலம் முதல் மறைந்து மறுபடி தோன்றுகிற காலம் வரையுள்ள பொழுதை ஓர் நாள் அல்லது ஓர் கிழமையாகக் கொண்டு வருகின்றனர். முகம்மதியரோ இரவி மறைகிற வேளையாகிய இரவு தொடங்கி, தோன்றி மறுபடி அவன் மறைகிற வரையுள்ள காலத்தையே ஓர் கிழமையாகக் கொண்டு வருகின்றனர். கிறித்தவர்களாகிய மேல் நாட்டினரோ இரவில் நடுக்காலம் தொடங்கி அதாவது நள்ளிரவுமுதல் இரவி தோன்றி மறைந்து பின்வரும் மறு நள்ளிரவு வரையுள்ள காலத்தையே ஓர் கிழமையாகக் கொண்டு வருகின்றனர். அதாவது தமிழ்மக்கள் கிழமை காலை முதலும், முகம்மதியர் கிழமை மாலை முதலும், கிறித்தவர் கிழமை நள்ளிரவு முதலும் தொடங்குகின்றன.

கிறித்தவர்கள் ஓர் நாளை இருபத்து நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு மணியென்று வழங்கப் பெறுகின்றது. ஒரு மணியென்பது தமிழ்மக்கள் பகுப்பின்படி இரண்டரை நாழிகைகளாம். தமிழ்மக்கள் காலத்தை ஓர்ந்தறிவதற்கு ஓரையெனப் பெயரிய ஓர் கால அளவையும் வைத்திருக்கிறார்கள். இவ்வோரை ஒரு மணியாகிய இரண்டரை நாழிகை அளவினதாம். இவ்வோரையே கிழமைகளின் வரிசைத் தோற்றத்திற்குக் கருவியாகவுள்ளது. இரவியின் தோற்றம்மறைவா லேற்படுகின்ற இந்நாளைவைத்தே எனைய மாதம், ஆண்டு ஆகிய கால அளவுகளும் அறியப்படுகின்றன.

வானத்தில் விண்மீன்களும் (நக்ஷத்திரங்கள்), கோள்களும் (கிரகங்கள்) நம்மைச் சுற்றிச் சுற்றி வருகிறதை நாம் காண்கின்றோம். விண்மீன்கள் விட்டு விட்டு மின்னி விளங்கும். கோள்களோ எப்போதும் ஒன்றுபோல் ஒளிரும். கோள்கள் ஒன்பது. அவை ஞாயிறு, திங்கள் (சந்திரன்), செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது என்பன. இவைகளெல்லாவற்றிற்கும் முதன்மை பெற்றிருப்பது ஞாயிறே. இவனிடமிருந்தே மற்றைய கோள்களெல்லாம் தோன்றின. இதனாலே இஞ்ஞாயிறு 'கோளரசு' என்ற பெயரால் வழங்கப் பெறுகிறது. ஆதலினாலே ஞாயிற்றுக்கிழமையே முதற்கிழமையாக, ஏனைய திங்கள் முதலிய ஆறுகிழமைகளும் இதன் பின்னரே எண்ணப் பெறுகின்றன. திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய ஆறு கோள்களும் தங்களுக்கென் இயற்கை ஒளி இல்லாதவைகளாய்ப் பகலவனுடைய ஒளியினாலேயே ஒளிபெற்று விளங்குகின்றன. இரவியே இயற்கை ஒளியுடையவனாய் ஏனைய திங்கள் முதலிய கோள்களுக்கும் ஒளிதந்து அவைகளை விளங்கும்படி செய்பவனாயிருக்கின்றான். இதனையே உலகமுய்யத் தோன்றிய பெருந்திருவாளர் மெய்கண்டதேவர் திருவாய் மலர்ந்தருளிய சிவஞானபோதம் ஐந்தாம் சூத்திரம் இரண்டா மதிகரணத்திலுள்ள,

"வெய்யோ னொளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல"

என்ற வெண்பாவுக்குப் பொருள் காணவந்த தமிழ்ப்பேருரையாளர் முனிவர் பெருமான் சிவஞான சாமிகளும் "நாண்மீன் முதலியவற்றின் ஒளி யெல்லாம் ஞாயிற்றினுடைய ஒளியே" எனக் குறித்திருக்கின்றனர்.

இராகு, கேது என்ற இரண்டு கோள்களும் கோள்களாக எண்ணப்பெற்றாலும் அவை உண்மையில் உருவில்லாதனவாய் நிழற்கோள் (சாயாகிரகங்) களாக இருக்கின்றன. ஆதலின் உருவுடன் நமது கண்ணுக்குப் புலனாகும் கோள்கள், இவ்விராகு கேதுக்களைத் தவிர, ஞாயிறு முதலிய எழுமேயாம். நிழல்களாகிய

இவ்விராகு கேதுக்களை ஞாயிறும் திங்களும் மறைகிற (கிரகண) காலங்களில் அவைகளின் மேலே காணலாம். இதனையே சிவ ஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரம் மூன்றுமதிகரணத்தில் வரும்

"இந்துவிற் பானுவிலி ராகுவைக் கண்டாங்கு"

என்ற செய்யுட்டொடருக்கு மாதவச் சிவஞானமுனிவர் உரை காணுமிடத்து, "அந்தராத்தியங்கு நவக்கோள்களுள் ஏனைய கோள்போலக் காணப்படாத இராகு கேதுக்களை உபராகத் (கிரகணத்) திற் காணுமாறுபோல" என்றும், "கேது சாயாக் கிரகமாதலின் வேறு கூறுதிராகுவை யென்றொழிந்தார்" எனவும் விளக்கிப் போந்தமை காண்க.

இரவி நாம் வாழும் மண்ணுலகத்திலிருந்து தொண்ணூற்றிரண்டு கோடி மைல்களுக்கப்பாலிருக்கின்றான். இவ்விதமாக அளவிலடங்காத தூரத்திலிருந்தாலும் இவ்விரவியே, நாமும் ஏனைய உயிரினங்களும் வாழ்வதற்கு முதற்காரணனாயிருக்கிறான். பகலவனுடைய வெப்பமும் ஒளியுமின்றேல் உலகமுமின்றாம். நாம் வாழும் இம்மண்ணுலகமும் அவனிடமிருந்தே தோன்றியதாகும். அவனுடைய அருளாலேயே மழைபெய்கிறது, காற்று வீசுகிறது, கடலில் நீரிருக்கின்றது, அக்கடலில் நீரோட்டமிருக்கின்றது, குளிர்ச்சியால் தோன்றுகிற பனிக்கட்டிக்கு முதற்காரணமான நல்ல தெளிந்த தண்ணீர் தோன்றுகிறது, பனிக்கட்டிகள் ஓரிடத்திருந்து மற்றோரிடத்துக் கோடுகின்றன, மரம் செடி கொடிகள் உணவருந்தி உயிர் வாழ்கின்றன, நாமும் உயிருடன் வாழ்கின்றோம். வெய்யோனின் வெப்பத்தாலேயே பருவகாலங்கள் தோன்றுகின்றன. அவனுடைய வல்லமையாலேயே விண்மீன்களும் கோள்களும் நின்று நிலவுகின்றன. இவ்வுண்மைகளை யெல்லாம் நன்கறிந்த தமிழ்ப் பெரியார் இப்பகலவனுக்கு 'கோளரசு' எனத் தந்த பெயர் பொருந்தும், பொருந்தும்.

கோளரசாகிய ஞாயிறும், அதனால் ஒளிபெற்று விளங்கும் ஏனைய ஆறு கோள்களும் விண்ணில் நம்மைச்சுற்றிச் சுற்றி வருகின்றன. விண்ணில் எந்த வழியாக ஞாயிறு நம்மைச்சுற்றி

வருகின்றனே அந்த வழியாகவே மற்றைக்கோள்களுஞ் சுற்றி வருகின்றன. அவ்வழி ‘விண்வழி’ யென்றும் ‘ஞாயிற்றுவழி’ யென்றும் கூறப்பெறும். அவ்வழி ஓர் வட்டமாக இருக்கிறது. கோள்கள் நிற்கும் நிலைகளை அளந்தறிவதற்கு இவ்வட்டத்தில் இருபத்தேழு நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்நிலைகள் அவ் வழியிலுள்ள அசையாத விண்மீன்களை அடையாளமாகக்கொண்டு அறியப்படுவன. இவைகளுள் முதலாவது நிலை, குதிரைத்தலை போல் உருவமைந்துள்ள விண்மீன் கூட்டத்தால் அறியப்பெறுவது. இது ஐப்பசி யெனவும் அசுவதி யெனவும்பெயர் பெறும். இரண்டாவது நிலை அடுப்புப்போலுள்ள மூன்று விண்மீன் தொகுதியால் அறியப்பெறுவது. இது அடுப்பு எனவும் பரணி யெனவும் பெயர் பெறும். இவ்வாறே கார்த்திகை முதலிய ஏனைய இருபத்தைந்து நிலையங்களும் ஒவ்வொரு விதமான உருவத்தையுடைய விண்மீன் தொகுதிகளைத் தமக்கு அடையாள மாகக் கொண்டு அறியப்பெறுவதோடு கார்த்திகை முதலிய பெயர் களையும் பெற்றுள்ளன. விண்ணில் இவைகளோடு விளங்கும் ஏனைய அளவிலடங்காத மீன்கள், இரண்டொன்று தவிர, தனிப் பெயரால் அழைக்கப்பெறு.

இவ்வாறு இருபத்தேழு பிரிவுகளாகப் பகுக்கப்பெற்றுள்ள விண் வட்டம், தம்முள் தனித்தனி இரண்டேகால் இரண்டேகால் விண்மீன்களையுள்ளடக்கிய பன்னிரண்டு பெரும் பகுதிகளாகவும் பிரித்தறியப்படுகிறது. இப்பன்னிரண்டு பெரும் பிரிவுகளிலும் கோள்கள் வாழ்கின்றப்படியால் இவைகள் வீடு(இராசி)களென்று பெயர் பெறுவன. இவ்வீடுகள் பன்னிரண்டும் பின்வருவன :— ஆடு (மேடம்), எருது (இடபம்), இரட்டை (மிதுனம்), நண்டு (கற்கடகம்), சிங்கம் (சிம்மம்), கன்னி (கன்யா), துலை (துலாம்), வண்டு (விருச்சிகம்), வில் (சாபம்), சுறு (மகரம்), கூடம் (கும்பம்), மீன் (மீனம்). இவ்வீடுகள் ஒவ்வொன்றிலும் ஞாயிறு வாழ் கின்ற கால அளவே மாதங்களாம். இம்மாதங்கள் தனித்தனி இருபத்தொன்பது முதல் முப்பத்திரண்டு நாட்கள் வரையுள்ள கால அளவாம். இரவி ஒவ்வொரு வீட்டிலும் வாழும் கால அளவு பின்வருமாறு :—

		நாள்.	நாழிகை.	விநாடி.
(க)	ஆடு	... ... ௩௰	௫௫	௩௨
(௨)	எருது	... ... ௩க	௨௪	௰௨
(௩)	இரட்டை	... ... ௩க	௩௬	௩௮
(௪)	நண்டு	... ... ௩க	௨௮	௰௨
(௫)	சிங்கம்	... ... ௩க	௨	௰
(௬)	கன்னி	... ... ௩௰	௨௭	௨௨
(௭)	துலை	... ... ௨௯	௫௪	௭
(௮)	வண்டு	... ... ௨௯	௩௰	௨௪
(௯)	வில்	... ... ௨௯	௨௰	௫௩
(௰)	சுறா	... ... ௨௯	௨௭	௰௬
(௰க)	குடம்	... ... ௨௯	௪௮	௨௪
(௰௨)	மீன்	... ... ௩௰	௨௰	௨க
	ஆக மொத்தம்	... ௩௬௫	௰௫	௩க

இந்த அளவு எக்காலத்திலும் ஒரேமாதிரியாக இருக்கும். இது பண்டைக் காலந்தொட்டுத் தமிழ்மக்கள் கொண்டுவரும் மாதங்களின் அளவாம். இம்மாதங்களுக்கு அவ்வவ்வீட்டின் பெயரே பெயராம்.

ஞாயிறு நம்முடைய கண்ணுக்கு நம்மைச் சுற்றிவருவது போற் காணப்படினும் அவன் உண்மையில் சுற்றுவதில்லை. நாம் வாழும் பூமியே இரவியைச் சுற்றிவருகிறது. பூமி அவனைச் சுற்றிவருவதோடு தன்னையும் சுற்றிக்கொள்கிறது.

இது தன்னை ஒருமுறை சுற்றும் காலமே ஓர் நாள். இதுபகலவனை ஓர் முறை சுற்றிவரும் காலமே நாம் மேலேகாட்டிய பன்னிரண்டு மாதங்களாம். இப்பன்னிரண்டு மாதங்களும் சேர்ந்து நாம் மேலே குறித்தபடி ௩௬௫ நாள்—௰௫ நாழிகை—௩க விநாடிகளாம். இப்பன்னிரண்டு மாதங்களும் சேர்ந்து ஓர் ஆண்டு என்று பெயர் பெறும். என்றும் மாறாது ஒரே அளவினவாக உள்ள இம்மாதங்களிலேயே பண்டைத் தமிழ் மக்கள் திருவிழாக்

களும் நன்னுட்களும் ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். இக்கணக்கு முறை இரவிப்போக்கால் ஏற்படுவதாதலால் இரவிக்கணக்கு எனப் பெறும். இது வடமொழி வழக்கில் சௌரமானம் அல்லது சூரிய மானம் எனப்படுகிறது. மானம்—கணக்கு.

தமிழ் மக்கள் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே பூமிதான் இரவியைச் சுற்றி வருகிறதென்ற உண்மையை அறிந்தவராதலின், அவ்வுண்மைபற்றியும் தமது மாதங்களுக்குப் பெயரமைத்திருக்கின்றனர். அவை சித்திரை (ஆட்டிரவி), வைகாசி (எருதிரவி), ஆனி (இரட்டையிரவி), ஆடி (நண்டிரவி), ஆவணி (சிங்கவிரவி), புரட்டாசி (கன்னியிரவி), ஐப்பசி (துலையிரவி), கார்த்திகை (வண்டிரவி), மார்கழி (வில்லிரவி), தை (சுறவிரவி), மாசி (குடவிரவி), பங்குனி (மீனிரவி), என்பன. இப்பெயர்களை அமைப்பதற்குக் காரணம் பின்வருவது.

ஞாயிறு எந்த வீட்டில் நுழைவதுபோலக் காணப்படுகின்றதோ அவ்வீட்டிற்கு நேர் ஏழாவது வீட்டில் பூமி நுழையும். அவ்வாறு பூமிபுகும் அவ்வீட்டின் முதலிலுள்ள விண்மீனின் பெயரே அம்மாதத்தின் பெயராக அமைந்துள்ளது. முதல் வீடாகிய ஆட்டு வீட்டில் ஞாயிறு நுழைவதுபோலத் தோன்றும் போது, பூமி அதற்கு நேர் ஏழாவது வீடாகிய துலையில் நுழையும். துலைவீட்டின் முதலிலிருப்பது சித்திரை யென்ற பெயரையுடைய விண்மீன். ஆதலின் ஆட்டிரவி என்ற மாதம் சித்திரை மாதம் என்ற பெயரைப் பெற்றது. ஞாயிறு இரண்டாவது வீடாகிய எருதிற் புகுவதுபோலத் தோன்றும்போது, பூமி அதற்கு நேர் ஏழாவது வீடாகிய வண்டிற்புகும். வண்டு வீட்டின் முதலிலிருக்கும் மீன், வைகாசி (விசாகம்) என்பது. ஆதலின் எருதிரவி வைகாசிமாதம் என்ற பெயரைப் பெற்றது. இவ்வாறே ஏனைய மாதங்களும் பூமிபுகும் அவ்வவ் வீட்டின் முதலிலுள்ள விண்மீனின் பெயரே தமக்கும் பெயராகப் பெற்றன. விண்வட்டத்தின் அமைப்பை உணர்த்தும் கட்டம் பின்வருவது. அது வட்ட வடிவினதேனும் எளிதில் அமைப்பதற்காக அதை நாற்கோணமாக அமைத்தெழுதுவது உலக வழக்கம்.



மேலே கண்ட வட்டத்தில் பன்னிரண்டு வீடுகளும் அவ் வீடுகளில் இருபத்தேழு விண்மீன்களும் அமைந்து நிற்கும் நிலையும் தெளிவாக விளங்குவது காண்க. பண்டைக்காலத்தில் விண்மீன் வரிசையில் தை (பூசம்) யின் பின்னரே அதைப்புணரும் தை அதாவது புணர் தை (புணர்பூசம்) அமைந்திருந்தது. தற்கால வழக்கில் அம்முறைமாறி, புணர் தைபின் பின் தை வழங்கி வருகிறது. முன்னிருக்கும் பொருளையே பின்னிருக்கும் பொருள் புணர்வதாகும். இதுவே இயற்கை. இவ்வியற்கைக்கு முற்றிலும்

மாருகத் தற்கால வழக்கு இருக்கிறது. இவ்விவரமெல்லாம் வேறு கட்டுரையில் ஆராய்வோம். நிற்க, முகம்மதியர்கள் எவ்வாறு காலத்தை மதிக்கின்றனரெனப் பார்ப்போம்.

முகம்மதியர் நாள், மாலை முதற்றொடங்கி மறு மாலைவரை யாமென முன்னர் ஆராய்ந்தோம். இவர்கள் திங்களின் வளர்ச்சி தளர்ச்சியைக்கொண்டு காலத்தை மதிக்கிருர்கள். பூமியைப் போலவே திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்களெல்லாம் இரவியைச் சுற்றி வருகின்றன. இரவியோ இக்கோள்களுக் கெல்லாம் நடு நாயகமாய் அளவிடங்கா ஒளியுடன் அரசாய் விளங்குகின்றுன். திங்கள் முதலிய கோள்கள் ஆறும் இயற்கை ஒளியற்றனவாய் வெய்யோனின் ஒளி தம்மேல் விழுவதனுலே கண்ணுடிபோல அவ்விரவியொளியையே வெளி வீசுகின்றன. இவைகளுள் திங்கள் மட்டும் பகலவனைச்சுற்றுவ தோடு நில்லாமல் பூமியையும் சுற்றிச் சுற்றி வருகிறது. கோளர சாகிய ஞாயிற்றின் முன்னிலையில் திங்கள் ஓர் மின்மினிபோலும் என்று கூறுதற்கேனும் இடனின்றும்.

திங்கள் வளர்தலையும் தேய்தலையும் உடையது. திங்கள் தேய்ந்து தேய்ந்து முற்றிலும் மறைந்து பின்வளரத் தொடங்கு கிறது. முற்றிலும் மறைந்த பின் அது மூன்றும் நாளே கண் ணுக்கு தெரியத்தொடங்கும். அந்நாள் மூன்றும் பிறை(திருதியை) என்று சொல்லப்பெறும். அந்நாளே முகம்மதியர்களுடைய மாதத்தின் முதல் நாளாகும். முகம்மதியர்களுடைய மாதங்கள் பின் வருவன :—க. மொகரம், உ. சபர், ங. ரப்பூலவ்வல், ச. ரப்பூசானி, ரு. ஜமாதிலவ்வல், சு. ஜமாதிசானி, எ. ரஜப், அ. ஷாபான், கூ. ரம்ஜான், ய. ஷவ்வால், யக. ஜில்ஹாத், யஉ. ஜில்ஹேஜ்.

முகமதுநபி என்ற பெரியாரே முகம்மதிய சமயத்தை நிலை நாட்டியவர். அவர் வாழ்ந்த நாடு அரேபியா என்பது. அந் நாட்டில் அவர் தாம் வாழ்ந்து கொண்டிருந்த ஊராகிய மெக்காவி லிருந்து மெடீனு என்ற ஊருக்குப் போன காலமாகிய கி. பி. 622

ஜூலை மாதம் 16-ம் நாள் வெள்ளிக்கிழமைமுதல் முகம்மதியர்களுடைய ஆண்டு தொடங்குகிறது. அன்றே அவர்கள் மொகரம் மாதத்தின் முதல் நாளாம். முகம்மதியர்களுடைய மாதம் இருபத்தொன்பது அல்லது முப்பது நாட்களையுடையது. இவர்களுடைய ஆண்டு ஹிஜரி எனப்படும். இது ௩௫௪ நாள்--௪௮ நாழிகை--௯ விநாடியை யுடையது. இக்கணக்குப்படி இவ்வாண்டு பெரும்பாலும் ௩௫௪ நாட்களையுடையதாக இருக்கும். ஆனால் முப்பது ஆண்டு கொண்ட ஒரு வட்டத்தில் ௨, ௫, ௭, ௰, ௰௩, ௰௬, ௰௮, ௨௧, ௨௪, ௨௬, ௨௯ இந்தத் தொகை மீதம் வருகிற ஆண்டுகளில் ௩௫௫ நாட்களையுடையதாக இருக்கும்.

ஞாயிற்றை வைத்துக் காலத்தைக் கணக்கிடும் தமிழ்மக்களின் மாதங்களோடு சேரவேண்டுமென்ற கட்டுப்பாடில்லாமல், முகமதியர்கள் தங்கள் மாதத்தையும் ஆண்டையும் பிறைப்போக்கிலேயே விட்டு விடுகின்றனர். அதனால் ஹிஜ்ரியின் தொடக்கமாகிய மொகரம் மாதம், நமது தமிழ் மாதங்களில் வேறு வேறு மாதங்களில் தொடங்கும். நமது தமிழ் ஆண்டைக் காட்டிலும் முகம்மதியருடைய ஆண்டு ஏறத்தாழப் பதினொரு நாள் குறைவாக இருக்கிறபடியால், இவர்களுடைய ஆண்டுப் பிறப்பு பின் நோக்கியே வரும். அதாவது சென்ற கி. பி. 1890-ல் மொகரம் மாதம் ஆவணிமீ 4உ பிறந்தது; 1891-ல் ஆடிமீ 24உ பிறந்தது. இவ்வாறு பின் நோக்கிச்சென்று 1898-ல் வைகாசி மாதத்திலும், 1904-ல் பங்குனி மாதத்திலும், 1906-ல் மாசி மாதத்திலும், 1909-ல் தை மாதத்திலும் பிறந்தது; பின் 1914-ல் கார்த்திகை மாதத்திலும், 1918-ல் புரட்டாசியிலும், 1922-ல் பழையபடி ஆவணிமீ 9உ யன்றும் பிறந்தது. இவ்வாறாக 1890-ல் ஆவணி மாதம் 4உ யன்று பிறந்த முகம்மதிய ஆண்டின் முதன் மாதமாகிய மொகரம், மறுபடி அந்த ஆவணி மாதத்தில் அதனிலும் 4உயிலில்லாமல் 9உ யன்று பிறக்க, முப்பத்திரண்டு ஆண்டுகளாயிருக்கின்றன. பின் 1923-ல் ஆடி மாதத்திலும், 1926-ல் ஆனி மாதம் 28உயிலும் பிறந்த மொகரம் மாதம், நிகழும் 1928-ல் ஆனி மாதம் 7உ யன்று பிறந்திருக்கிறது. இதற்குக் காரணம் இரவியாண்டிலும் திங்கள் யாண்டு ஏறத்தாழப் பதினொரு நாள் குறைந்

திருப்பதே. இதனால் ஏறத்தாழ இரவிக் கணக்கில் இரண்டாண்டு எட்டு மாதங்களுக் கொருமுறை திங்கள் யாண்டு ஏறக்குறைய முப்பது நாள் பின்னடைகிறது. இக்கணக்கின்படியே தான் இரவிக்கணக்கு (சௌரமான) மாத மொன்றில் தொடங்கும் முகம்மதிய ஆண்டு, மறுபடி அதே மாதத்தில் தொடங்க ஏறக்குறைய முப்பத்திரண் டாண்டுகளாகின்றன என்பதை மேலே எடுத்துக் காட்டினோம்.

முகம்மதிய சமயத்தினர் எவ்வாறு இத்திங்கள் மாதத்தைக் கொள்கின்றனரோ, அதைப் போலவே சுமார்த்த சமயத்தினராகிய ஆரியர்களும் இதையே கொள்கின்றனர். ஆனால் இவர்கள் கொள்ளும் முறை முகம்மதியர்கள் கொள்ளும் முறையினின்றும் பல வேறு வகையில் மாறுபடுகின்றது. திங்கள் உண்மையில் கண்ணுக்குத் தோன்றுமளவு ஒளி பெற்று விளங்கும் மூன்றாம் பிறையை மாதத்தின் முதல் நாளாகக் கொள்வதை விடுத்து இவர்கள் அது உண்மையில் ஒளி பெறும் முதற் பிறையையே தமது மாதத்தின் முதல் நாளாகக் கொள்கின்றனர்.

இவ்வாரியர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வட நாட்டிலிருந்தனர். அப்போது அவர்களுக்குத் தமிழ் மக்களுடைய காலக் கணக்கு முறையொன்றும் தெரியாது. கோள்களில் மிகவும் சிறியதாய், இயற்கை யொளி யற்றதாய், பலவிதமாகச் சுற்றித் திரிவதாய், வளர்ச்சி தளர்ச்சியுடையதாய் உள்ள திங்கள் ஒளியற்றதாய் மறைந்திருக்கும் நாளே இருள்மதி (அமாவாசை) யெனப்படும். அதன் மறுநாள் முதல் அது கொஞ்சங் கொஞ்சமாக ஒளி பெற்று வளர்கிறது; பதினைந்தாம் நாள் முழு ஒளியுடன் விளங்குகிறது. அன்று நிறைமதி (பௌர்ணமி அல்லது பூரணை) எனப்பெறும். மறுநாள் முதல் அது கொஞ்சங் கொஞ்சமாக ஒளி குறைந்து குறைந்து, பதினைந்தாம் நாள் ஒளி கொஞ்சமும் இல்லாமல் மறைந்து விடுகிறது. இவ்வாறாகத் திங்கள் ஒளிபெறத் தொடங்கி முழு ஒளி பெற்றுப் பின் முழுவதும் ஒளி யறுவது வரையுள்ள காலத்தை, இவ்வாரியர்கள் ஓர் மாத மென்று கொண்டனர். இவர்கள் பல்கித் தென்னா டடைந்தனர்; அடைந்த போது தமிழ் மக்களுடைய மதிநுட்பத்தையும் கணித முறை

களையும் கண்டு வியந்து, தாமும் தமிழ் மக்களுடைய விழாக்களையும் நோன்புகளையும் கையாளத் தொடங்கியதோடு தமது நோன்பு நாட்களையும் தமிழ் மக்கள் கணக்காகிய இரவிக்கணக்கு (சௌர மான) முறையின்படியுள்ள மாதங்களிலேயே கொண்டு நடக்கத் தலைப்பட்டனர்.

திங்களின் கணக்குப்படி ஒழுங்கான முறையில் தங்கள் ஆண்டு மாதம் முதலியவைகளைக் கணக்கிடும் முகம்மதியரைப் போலல்லாமல், இவ்வாரியர்கள் தங்கள் திங்கட் கணக்கிலும் இரவிக்கணக்கு உயர்ந்ததென்றும், நிலையுள்ளதென்றும், அதிக மானதென்றும் கண்டு அதனால் தங்கள் மாதத்தையும் இரவிக் கணக்கு மாதங்களோடு சேர்த்தனர். தமிழ்மக்களோடு சேரும் முன்னர் அவர்களுடைய மாதங்களுக்குப் பெயர் கிடையாது. முகம்மதியர்களோ தங்கள் மாதங்களுக்கு மொகரம் முதலிய தனிப்பெயர்களைத்தந்து வழங்கி வருகின்றனரென்பதை முன்னரே கண்டுளோம். அவ்வாறல்லாமல் சுமார்த்தர்களாகிய ஆரியர்கள் தங்கள் ஆண்டினை இரவிக்கணக் காண்டோடு சேர்க்க எண்ணி யதற்கேற்ப இரவிக்கணக்கு மாதங்களின் பெயர்களையே தங்கள் திங்கட் கணக்கு (சாந்திரமான) மாதங்களுக்கும் பெரும்பாலும் திரித்தும் சிறுபான்மை மாற்றியும் வழங்குவாராயினர்.

அவர்கள் சித்திரையைச் சைத்திரமென்று திரித்தனர்; அதைப்போலவே வைகாசியை வைசாகமென்றும், ஆடியை ஆஷாடமென்றும், ஆவணியைச் சிராவணமென்றும், புரட்டாசி யைப் பாத்திரபதமென்றும், ஐப்பசியை ஆஸ்வீஜமென்றும், கார்த்திகையைக் கார்த்தீகமென்றும், மார்கழியை மார்க்சீர்ஷ மென்றும், மாசியை மாகமென்றும், பங்குனியைப் பால்குன மென்றும் திரித்தனர். ஆனியை ஜேஷ்டமென்றும் தையைப் புஷ்யமென்றும் மாற்றினர். இதனிலும் இவர்கள் திரித்து மாற்றிய தன்மை புலனாகிறது. தை என்பது பூசமென்ற மறு பெயரை யுடையது. பூசமென்ற பெயரையே இவர்கள் புஷ்ய மெனத்திரித்தனர். மேலும் இப்புஷ்யத்துக்கு மறு பெயராகத் தை யென்பதையே "தைஷீ" எனத்திரித்தும் வழங்கத் தொடங்கினர்.

தைஷீ என்பதே முதலில் ஏற்பட்டது. இதுவும் மற்றை யவைகளைப்போலவே நேர்திரித்தலென்பதைக் காட்டாமல் மறைக் கவே புஷ்யமென்பதை உலக வழக்குக்குக் கொண்டுவந்து தைஷீ என்பது செய்யுள் வழக்களவிலேயே இருக்கும்படி அவர்கள் செய்துவிட்டனர் போலும். ஆனிப் பெயரைமட்டும் முற்றிலும் மாற்றியிருக்கின்றனர். இதிலும் இவர்கள் கேட்டையறிவிக்கும் விண்மீனாகிய கேட்டையின் பெயரையே ஜேஷ்டையெனத்திரித் தவராவர். இது, தனிமாதிரியாகத் தாம் மாதப்பெயரமைத்தன ரென உலகினர்க்குக் காட்டற்குச் செய்ததுபோலும்!

இவ்வாரியர் தமிழ்மாதப் பெயர்களையே இவ்வாறு திரித்துக் கொண்டதோடு கூட, அந்தந்தப் பெயரையுடைய மாதம் அந்தந்த இரவிமாதத்தோடு ஒற்றுமைப்பட்டு முடியவேண்டுமெனவும் ஏற் பாடு செய்துகொண்டனர். தொடக்கம் முன் மாதத்திலிருக்க லாம். இதனால் இவர்கள் முடிவையே முதன்மையாகக் கொண்ட னர், தொடக்கத்தைத் முதன்மையாகக் கொள்ளவில்லை யென்பது தெளிவாகிறது. இவ்வாறு கொள்ளும்போது முன் நாம் முகம் மதிய மாதங்களைப்பற்றிக் கூறியபோது குறித்தாங்கு இரண் டாண்டு எட்டு மாதங்களுக்கொருமுறை முப்பது நாள் குறை வதால், தமிழ் மாதத்திலே இரண்டு இருள்மதிகள் (அமாவாசை கள்) வரும். அப்போது முதல் இருள்மதியோடு அத்தமிழ்மாதப் பெயரைக்கொண்ட திங்கட்கணக்கு (சாந்திரமான) மாதமும் இரண்டாவது இருள் மதியோடு அதற்கடுத்த தமிழ்மாதத்தின் பெயரைக்கொண்ட திங்கட் கணக்கு மாதமும் முடிவடையும். அதனால் இரண்டாவது இருள்மதியோடு முடிவடையும் திங்கட் கணக்கு மாதம் அதற்குரிய அடுத்த தமிழ்மாதத்தோடு சேராமற் போகிறது. இது தங்கள் ஏற்பாட்டிற்கு மாறுதலினாலே முதல் இருள்மதியின் பின் தொடங்கி இரண்டாவது இருள்மதியோடு முடிகிற திங்கட் கணக்குமாதத்தை அதிகமாதம் அல்லது பொய் மாதம் என்று தள்ளிவிட்டு, இரண்டாவது இருள்மதியின் பின் தொடங்கி மறு தமிழ்மாதத்திலுள்ள இருள்மதியோடு முடிவாகிற திங்கட்கணக்கு மாதத்தையே நிசமாதம் அதாவது உண்மையான மாதமென்று கொள்கின்றனர்.

தற்காலத்தில் வடநாட்டில் இந்தத் திங்கட்கணக்கு மாதத்தைக் கொண்டு நடப்போர் சிலரிருந்தாலும் தமிழ் நாட்டில் இதைக் கொண்டு நடப்போர் ஒருவருமிலர். ஆதலின் இத்தென்னாட்டில் திங்கட் கணக்கு (சாந்திரமானம்) பேச்சளவிலேயே யிருக்கிறது. நிகழும் விபவ ஆண்டில் (கி. பி. 1928) ஆடி மாதத்தில் இரண்டு இருள் மதிகள் வந்தன. அவை முதல் நாள் ஒன்றும் முப்பத்தோராம் நாள் ஒன்றுமாம். ஆதலின் 2உ முதல் 31உ முடியவுள்ள ஆடி மாதம் அதிக மாதம் அல்லது பொய் மாதமென அவர்கள் கூறுவர். அதனால் அம்மாதத்தை அவர்கள் தள்ளிவிடுதல் வேண்டும். ஆடி மாதத்திற் பிறந்த எந்த ஆரியராவது தமது பிறந்த நாளைத் தமது ஆஷாடமாதம் வருகிற தமிழ் ஆனியிற் செய்ததுண்டா? அல்லது தமிழ் ஆடியிற் செய்யாமல் விடுத்ததுண்டா? ஆடி மாதத்தில் இறந்த தமது தந்தைக்கோ தாய்க்கோ இறந்த நாளை (திதியை) எவராவது தமிழ் ஆனி மாதத்திற் செய்ததுண்டா? அல்லது தமிழ் ஆடி மாதத்தில் செய்யாமல் விடுத்ததுண்டா? தமிழ் ஆடி மாதத்தில் ஆரியருடைய அதிக மாதம் வந்ததால் ஆடிப்பூரம் முளைக்கொட்டுத் திருநாள் எந்தக் கோவிலிலாவது இவ்வாண்டில் வேறு மாதத்தில் நடைபெற்றதுண்டா? இல்லை, இல்லை; ஆடிப்பூரம் முளைக்கொட்டுத் திருவிழா ஆடி மாதத்திலேயே நடைபெற்றது. சங்கர நயினார் கோவில் முதலிய ஊர்களில் நடைபெறும் ஆடித் தபசுத் திருவிழா ஆடி மாதத்திலேயே நடைபெற்றது. வைணவர்களும் வில்லிபுத்தூரில் ஆண்டாளுக்கு ஆடித்திருவிழாவை ஆடி மாதத்திலேயே நடத்தி மகிழ்ந்தனர். சென்ற ஆடி மாதத்தில் தமது கணக்குப்படி அதிக மாதம் வந்தது. அதனால் அம்முப்பது நாளும் பொய்யான காலம் என ஆரியர் எவராவது அக்காலத்தில் உண்ணாதும் உறங்காதும் இருந்ததுண்டா? இல்லை, இல்லை. ஆடி இருள்மதி, நிறைமதி, கார்த்திகை முதலிய எல்லா நோன்புகளும் ஆடி மாதத்திலேயே கொள்ளப்பெற்றன. இந்த இருள்மதி முதலியவைகளை, வட நாட்டில் சிலர் திங்கட் கணக்கைக் கொண்டு வருகின்றனரெனக் கூறினேமே, அவர்களுங்கூடக் கைவிடாது கொண்டனர். இதனால் அதிக மாதமென்பது தமிழ் மக்களுக்குக் கிடையாதென்பதும்,

அது உண்டு எனக் கூறும் ஆரிய மக்களும் அதைக் கொள்ளாமல் பேச்சளவிலேயே வைத்திருக்கின்றன ரென்பதும் தெளிவாகின்றன.

திங்கட் கணக்கு முறையால் வரும் இடையூறுகளில் ஒன்று காட்டுதும். விரியுமாதலின் பல இங்கே காட்ட இடமில்லை. சித்திரை மாத வளர்பிறை ஒன்பதாம் (நவமி) நாளே இராமன் பிறந்த நாளென்பார் வைணவர். அந்நாள் (இராம நவமி) இத் திங்கட் கணக்கு முறைப்படி சில ஆண்டுகளில் இல்லாமலே போகிறது. சித்திரை மாதத்திற் பிறந்த இராமனுக்குப் பிறந்த நாள் சில ஆண்டுகளில் சித்திரை மாதத்திலும் சில ஆண்டுகளிற் பங்குனி மாதத்திலும் நடைபெறுகிறது. சென்ற குரோதன ஆண்டில் சைத்திரமென்ற ஆரிய மாதத்தின் வளர்பிறைக் காலம் தமிழ்ச் சித்திரை மாதத்தில் இல்லை. அதனால் குரோதன ஆண்டு சித்திரை மாதத்தில் இராமநவமி இல்லை. அவ்வாண்டின் ஈற்றதாகிய பங்குனியில் இரண்டு இருள்மதிகள் வந்துவிட்டபடியால் அதைப் பொய் மாதமென்று பஞ்சாங்கம் கணித்து வெளிவிடும் ஆரியச் சுமார்த்தர் தள்ளிவிட்டனர். ஆதலினாலே அக் குரோதன ஆண்டில் இராமநவமியே இல்லாதொழிந்தது. அப்பிறந்த நாள் விழா அதற்கடுத்துவந்த ‘அட்சய’ ஆண்டில் சித்திரை மாதம் 9உயும், பங்குனி மாதம் 28உயும் ஆக இரண்டு முறை கொண்டாடப் பெற்றது. இதனால் இராமன் பிறப்பு, குரோதன ஆண்டில் இல்லாதொழிந்ததற்காக அதற்கடுத்த அட்சய ஆண்டில் இரண்டு முறை இராமன் பிறந்ததாகக் கொண்டாடப்பட்டது. இவ் விடையூறெல்லாம் இவ்வாரிய முறையால் வந்ததே. இவர்கள் முகம்மதியரைப் போலத் தங்கள் மாதக் கணக்கை ஒழுங்கான முறைப்படி கொண்டிருந்தனரேல் இவ்வின்னலெல்லாம் விளையா. இரவிக் கணக்கினரான சைவர்களைப்போலவே தமிழ்மக்களாகவும் இரவிக் கணக்கினராகவுமுள்ள வைணவச் சமயத்தினர் இதனை நன்கு சிந்தித்துப் பார்த்து உரியகாலத்தைக் கொள்வாராக.

சுமார்த்த சமயத்தினராகிய ஆரியர்கள் மேலே கண்டபடி தங்கள் திங்கட் கணக்குமாதத்தைத் தெரிந்து கொள்வதற்காகச்

செய்துகொண்ட ஏற்பாட்டையே விதியாக எழுதிக்கொண்டிருந் தனரென்றால் மிகவும் நலமாக இருந்திருக்கும். அவ்வாறு செய்து கொள்ளாமல் அவர்கள் தங்கள் சைத்திரம், வைசாகம் முதலிய பேர் கொண்ட மாதங்களின் தோற்றத்துக்கு வேறு வகையாக விதியெழுதத் தொடங்கினர். அவ்விதிகள் உண்மையான கார ணத்தோடு எழுதப் பெறாமையால் ஒருவகையானும் பொருத்த மற்றவைகளாக உள்ளன.

பாணினி என்பவரே முதன் முதலில் இவ்விதியெழுதியவர். அவர் தாம் எழுதிய இலக்கண நூலாகிய பாணினீயத்தில் நான்கா வது அத்தியாயம் இரண்டாவது பாகத்தில் "நிறைமதிசேர்ந்த விண்மீனின் பெயராலே மாதம் அறியப்படுகிறது" என்று கூறு கிறார். வடமொழி நிகண்டாகிய அமரம் காலவர்க்கத்திலே இதையே விவரமாகக் கூறியிருக்கிறது. அதாவது இன்னின்ன விண்மீனில் நிறைமதி வருதலினாலே இன்னின்ன பெயர் உண்டா யிற்று என்பதாம். எடுத்துக்காட்டாக இங்கே ஒன்று கூறு வோம். அமரம் காலவர்க்கத்தில் "புஷ்யயுக்தா பௌர்ணமாசி பௌஷீமாஸீது யத்ரஸா" என ஓர் சொற்றொடர் உள்ளது. இதன் பொருள் "பூசமென்ற (தை) விண்மீனோடு நிறைமதி சேர்ந்த அது புஷ்ய மாதமெனப்படும்" என்பது. புஷ்யமென் றும், தைஷீ என்றும் வடமொழியில் பெயர்பெற்ற மாதத்திற்குப் பேர் வந்த காரணம் புஷ்ய (பூச) மென்ற விண்மீனோடு நிறைமதி சேர்ந்ததேயாகும். இக்காரணம் பாணினீய இலக்கணத்துக்கு மாறுபடுகின்றது. எவ்வாறெனில், தைமாதத்தில் நிறைமதி தை நாளிலும் வருகிறது; புணர் தயிலும் வருகிறது. இன்னும் முன் பின்னுள்ள விண்மீன்களிலும் வருகிறது. அதனால் பாணி னீயப்படி எந்தெந்த விண்ணோடு நிறைமதி சேர்கிறதோ அந்தந்த விண்மீனின் பெயரை அவ்வம்மாதம் பெறவேண்டும். இதன் படி நிறைமதி புஷ்யத்தில் வந்தபோதுதான் புஷ்யமாத மென்ற பெயர் ஆகுமேயன்றி வேறு விண்மீன்களில் நிறைமதிவரும் ஆண்டுகளில் இம்மாதம் அவ்வவ் விண்மீன்களின் பெயராலேயே வழங்கப்பெறல் வேண்டும். ஆதலினாலே குறித்த ஒருபெயரையே

ஒவ்வொரு மாதத்துக்கும் கூறும் அமரம் அவ்வாறு கூருது பொதுப்படக் கூறும் பாணினீயத்தோடு முரண்படுகின்றது. பாணினீயத்திற் கூறப்பெற்றுள்ள விதியின்படி மற்ருெரு இடையூறு உண்டாகிறது. ஆதாவது நிறைமதி எப்போதும் இரண்டு விண்மீன்களைச் சேர்ந்தேவரும். ஆதலின் ஒவ்வொரு மாதமும் இரண்டிரண்டு விண்மீன்களின் இணைப்பெயராலேயே அழைக்கப் பெறல் வேண்டும்.

பாணினீயத்திற்குப் பிற்பட்ட நூல் அமரம். அமரத்திற்குப் பிற்பட்ட நூல் சூரியசித்தாந்தம். இச்சூரிய சித்தாந்தம் கூறும் விதியோ மிகவும் விந்தையாக இருக்கிறது. இந்நூலின் இறுதி யத்தியாயம் பதினைந்தாவது சுலோகம் "நிறைமதியின் முடிவு எந்த விண்மீனோடு சேர்கிறதே அந்த விண்மீனின் பெயராலேயே அம் மாதம் அறியப்படும்" எனக் கூறுகிறது. இதற்கடுத்த பதினாறு வது சுலோகம் இன்னின்ன மாதத்தில் இன்னின்ன விண்மீன் களில் நிறைமதிவரும். நிறைமதி எந்நாளில் வந்தாலும் முன்னு விடப்பெற்ற சைத்திரம் முதலிய பெயர்களே பெயர்களாம்" எனக் கூறுகிறது. இப்பதினாறுவது சுலோகத்திற் கூறப்படுகிற விண் மீன்களைத்தவிர வேறு விண்மீன்களிலும் நிறைமதி வருகிறது. அவைகளையும் சேர்த்து விதியற்றும் வடமொழி ஆசிரியர் இது வரை தோன்றினரில்லைப்போலும்!

ஆதலின், மேலே கூறிய பாணினீயமும், அமரமும், சூரிய சித்தாந்தமும் தம்முட் பலவகையிலும் மாறுபடுகின்றமையினாலே ஆரியர்கள் மாதப் பெயர்களைத்தகுந்த காரணங்கொண்டு அமைக்க வில்லையென்ற உண்மை புலனாகிறது. தமிழ் மக்கள் சித்திரை முதலிய பெயர்களை ஒருநாளும் மாறாத எக்காலத்திலும் பொருந் தும் காரணங்கொண்டு அமைத்திருக்கின்றனர். ஆகையினாலே தமிழ்ப் பெயர்களாகிய சித்திரை, வைகாசி முதலியவைகளையே ஆரியர் சைத்திரம், வைசாகம் முதலிய பெயர்களாகத் திரித்து வழங்குவாராயினர் என நாம் முன்னர் விவரித்துக் கூறியது உண்மையே யாயிற்று.

இரவிக் கணக்கு மாத மொன்றில் இரண்டு இருள்மதி வந்தால் அவ்விரண்டுக்கும் இடைப்பட்டு வருகிற காலத்தையே அதிக மாதம் அல்லது பொய் மாதம் என்று ஆரியர் கூறுகின்றனரென மேலே கூறினோம். இவ்வாறு தங்கள் திங்கள் மாதத்துக்கு இரவி மாதப் பெயரையே திரித்துக் கொடுத்து அவ்வாறு பெயர் கொண்டது உண்மையான இரவிமாதச் சேர்க்கையைப் பெற வேண்டுமென ஏற்பாடு செய்து கொள்வதற்கு முன்னரே பாணினீயம், அமரம், சூரிய சித்தாந்தமாகிய நூல்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் இக்காலத்திலும் வழங்கிவரும் இவ்வேற்பாட்டை அந் நூல்கள் கூறவில்லை. ஆதலின் அக்காலத்தில் அவை பெயர்க் காரணங்கூறத் தலைப்பட்டது தாங்கள் திரித்துக் கொண்ட இரவி மாதப் பெயர்களுக்கேயாம் எனத் தெளியலாம். இதனாலும் அவர்கள் தமிழ் மாதங்களையே அக்காலத்தில் கொண்டிருந்ததோடு அவைகளையே இவ்வாறு திரித்து வழங்கினவராவ ரென்பது நிலை பெறுகிறது. இரவி மாதங்களைச் சைத்திரம் முதலியனவாகத் திரித்துப் பெயர்க் காரணமாக்க ஆரியர் முயன்றன ரென்பதற்கு வேறு காரணங்களும் உள. இவ்வாரியர்கள் நிறைமதி சேரும் நாளைக்கொண்டு தமிழ் மக்கள் மாதங்களுக்குப் பெயரமைத் திருப்பரோ என மயங்கி உண்மைக் காரணத்தை விட்டு விட்டு விதியெழுதத் தொடங்கியபோது சில இரவி மாதங்களில் இரண்டு நிறைமதிகள் வந்தன. அப்போது அவர்கள் "ஒரே மாதத்தில் இரண்டு நிறைமதிகள் உள்ளனவே; என் செய்வது" எனக் காரணம் ஒன்றும் கூறத்தோற்றாது மலைத்தனர். அவ்வாறு மலைக்கச் செய்தபடியால் அவ்விதமாக இரண்டு நிறைமதி வரும் மாதங்களை மலமாதமெனப் பெயரிட்டழைத்தனர். மிகச் சிலவான காலங்களிலே நிறைமதி ஒன்றுமில்லாததாகச் சில இரவி மாதங்களிருந்தன. அவைகளை நச்சுமாத (விஷமாத) மெனப் பெயரிட்டழைத்தனர். இவைகளும் நிறைமதி சேரும் விண்மீனை வைத்துப் பெயர்க்காரணமமைக்கப் புகுந்த அவர்களை மலைக்கச் செய்தபடியால் இவைகளையும் அவர்கள் மலமாத மெனவும் வழங்குவாராயினர். இவர்கள் இவ்வாறெல்லாம் செய்த முயற்சி இரவி மாதங்களை யன்றி ஏனைத் திங்கட் கணக்கு மாதங்களுக்கு,

நிறைமதி யில்லாதனவோ அன்றி இரண்டு நிறைமதி வருவனவோ அம்மாதங்களில் இல்லை யாதலின், ஒரு காலத்திலும் பொருந்தா. இதனால் இக்காலத்து வழங்கும் திங்கட் கணக்கு ஏற்பாடு பிற்காலத்தில் அமைக்கப் பெற்றதென்பது ஊகித்தறிய இருக்கிறது. நிற்க.

இனி கிறித்தவச் சமயத்தினர் எவ்வாறு மாதத்தைக் கணிக்கிறார்கள் என ஆராய்வோம். ஏசுகிறிஸ்து நாதர் பிறப்பதற்கு முன்னாலேயே அவர்கள் இரவியினுடைய போக்கைக் கொண்டே ஆண்டினைக் குறித்து வந்தனர். அதன்படி அவர்கள் ஓர் ஆண்டுக்கு முந்நூற்றறுபத்தைந்து நாளென்று கணக்கு வைத்து வந்தார்கள். அவர்களும் ஓர் ஆண்டினைப் பன்னிரண்டு மாதங்களாகவே பிரித்தனர். அம்மாதங்களின் பெயர்களும் அவைகளின் நாட்களும் பின் வருவன :—

	மாதம்.	நாள்.
(க)	ஜனவரி	௩௧
(உ)	பிப்ரவரி	உ௮
(௩)	மார்ச்சு	௩௧
(௪)	எப்பிரல்	௩௰
(௫)	மே	௩௧
(௬)	ஜுன்	௩௰
(௭)	ஜுலை	௩௧
(௮)	ஆகஸ்ட்	௩௧
(௯)	செப்டம்பர்	௩௰
(௰)	அக்டோபர்	௩௧
(௰க)	நவம்பர்	௩௰
(௰உ)	டிசம்பர்	௩௧
		௩௬௫

மேலே குறித்துள்ளபடி அவ்வம்மாதத்துக்குரிய நாட்கள் எக்காலத்திலும் ஒன்று போல்வருவன. ஆனால் இம்மூந்நூற் றறுபத்தைந்து நாட்களுடன் ஒரு நாளில் ஏதோ ஒரு சிறு அளவு கூட்ட வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும்.

இதனால் பல்லாயிர நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள் வானூற் புலமையிலும் மிகவும் சிறந்த ஆராய்ச்சியுடன் விளங்கினரென்பதும், மேல்நாட்டினர் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தெரிந்துகொண்டதாகிய "பூமியே இரவியைச் சுற்று கிறது, ஞாயிறு பூமியைச் சுற்றவில்லை" என்ற உண்மையைத் தமிழ்மக்கள் அப்பல்லாயிர நூற்றாண்டுகளுக்கு முன்னரே தெரிந் திருந்தனரென்பதும், தமிழ்மக்கள் நுண்ணறிவிலும் ஆராய்ச்சி யிலும் ஈடுமெடுப்புமற்றிருந்தன ரென்பதும் தெளிவாகத் தெரி கிறது. தமிழ்மக்களுக்கு அடுத்தபடியாக ஆராய்ச்சியிற் சிறந்து விளங்கியவர்கள் ஈஜிப்ட் (Egypt) நாட்டினரே. கிரேக்கநாட்டு வீரராகிய மிக மேன்மைபெற்ற மன்னர் அலெக்சாண்டர் என் பவர் பெயரால் இந்த ஈஜிப்ட் நாட்டில் அலெக்சாண்டிரியா என ஓர் நகர் விளங்குகிறது. அந்நகரில் சூசிஜினஸ் என ஓர் ஒளி நூற்புலவர் திகழ்ந்தார். அவர் கி. மு. 46-வது ஆண்டில் ஓர் திட்டம் ஏற்படுத்தினார். அதாவது ஆண்டொன்றுக்குக் கால் நாளாகக் கூட்டி நான்காண்டுக் கொருமுறை ஒருநாள் அதிகப் படுத்த வேண்டுமென்பது. இதனால் நான்காண்டுக் கொருமுறை பிப்ரவரி மாதம் இருபத்தொன்பது நாளாயிற்று. இத்திட்டத்தை முன்னின்று செய்த அரசர் ஜீலியஸ் சீசர். முன் உரோமானியர் இப் பிப்ரவரி மாதமொன்றே குறைந்த நாளுடனிருத்தலினாலே அவ்வொருநாளும் நான்காண்டுக் கொருமுறை இத்துடன் சேர்க் கப்பெற்றது. இவ்வாறு அதிகப்படுத்துவதால் அவர்களுடைய இரவிக்கணக்கு முறைப்படி நூற்றிருபத்தெட்டு ஆண்டுகளில் ஒரு நாள் அதிகமாகிறது; அதாவது நானூறு ஆண்டுகளில் மூன்று நாளும் ஒரு நாழிகையின் ஒரு சிறு பகுதியும் அதிகமாயிற்று.

ஈஜிப்டியரின் பின்னர் ஆராய்ச்சியில் மேன்மை பெற்றவருள் ஒரு வகுப்பினர் உரோமானியர். இவர்களுடைய தலைநகரம்

உரோம் என்பது. அந்நகரம் கிறித்தவச் சமயத்தலைவர்களாகிய போப்புகளுக்கு இருப்பிடம். இப்போப்புகளில் பதின்மூன்ருவதாகப்பட்டத்துக்கு வந்தவர் போப்கிரகரி (Pope Gregary XIII. 1572—1585.) யென்பவர். இப்பெரியார் மேலே கண்டபடி நானூறு ஆண்டுகளில் ஏற்படும் மூன்றுநாள் சில்லறை நாழிகை வேறுபாட்டைச் சீர்ப்படுத்த எண்ணி, நான்கு நூற்றுண்டுகளில் முதன் மூன்று நூற்றுண்டுகளிலும் ஒவ்வொரு நூற்றுண்டின் ஈற்றிலும் வருகிற லீப் ஆண்டை (Leap year) லீப் ஆண்டாகக் கணக்கிடாமல் எப்போதும் போற் கணக்கிட்டு அவ்வாண்டுகளின் பிப்ரவரி மாதங்கள் இருபத்தெட்டுநாட்களாக எண்ணவேண்டுமென்றும், நான்காவது நூற்றுண்டின் முடிவில் வருகிற லீப் ஆண்டைமாத்திரம் லீப் ஆண்டாகவே வைத்து அவ்வாண்டின் பிப்ரவரி மாதத்துக்கு இருபத்தொன்பது நாளாகக் கொள்ள வேண்டுமெனவும் விதிசெய்தார். லீப் ஆண்டாவது நான்கு ஆண்டுகளுக் கொருமுறை பிப்ரவரி மாத நாளை இருபத்தொன்பதாகக் கொள்ள ஏற்பட்ட ஆண்டு. இதை எளிதில் அறிவதற்காக கிறித்தவ ஆண்டை நான்கால் வகுத்தால் மீதமில்லாமலிருக்கும் ஆண்டு எதுவோ அதுவே லீப் ஆண்டென்று விதித்திருக்கிறூர்கள். எடுத்துக் காட்டாக நிகழும் கி. பி. 1928-ஐப் பார்க்குமிடத்து, இதை நான்கால் வகுத்தால் மீதமில்லை. ஆதலினுலே இது லீப் ஆண்டெனப்படும். இவ்வாண்டிலுள்ள பிப்ரவரி மாதம், ஒளிநூற்புலவர் சூசிஜினஸ் விதித்தபடி, இருபத்தொன்பது நாட்களையுடையதாம்.

மேலே கண்ட கணக்கினுல் ஈடான மூன்று நாள் போக மீதமிருக்கும் சில்லறை நாழிகை நாலாயிர மாண்டுகளுக் கொருமுறை ஒரு நாளாகும். அப்போது அதனைக் கழித்து ஈடுசெய்து கொள்ள வேண்டும். இவ்வேறுபாடு செய்கிறவரை உண்மையில் பத்து நாட்கள் குறைந்திருந்தன. இந்த வேறுபாட்டைச் சீர்ப்படுத்த எண்ணிய போப் கிரகரி என்பார் கி. பி. 1582ல் அக்டோபர் மாதம் நான்காந் தேதியின் பிற்பாடு பதினைந்தாம் தேதி என வைத்துக்கொள்ள வேண்டுமென்று விதிசெய்தனர். அச்சமயத் தலைவர்செய்த விதியைக் கிறித்தவரனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

அக்காலத்திலும் கூட அறிவுவளர்ச்சி மிக்கில்லாத இங்கிலாந்து நாடு இவ்வேற்பாட்டை நடைமுறையிற் கொண்டு வாச் சில நூற்றாண்டுகள் தாழ்த்தது. இவ்வேற்பாடு கி. பி. 1752-ல் தான் இங்கிலாந்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப் பெற்றது. அப்போது பதினொரு நாள் வேறுபாடிருந்தது. அதனால் ஆங்கிலேயர்கள் கி. பி. 1752 செப்டம்பர் மாதம் இரண்டாந் தேதிக்குப் பிற்பாடு பதினான்காம் தேதியென்று கணக்கிட்டார்கள். இப்புதிய ஏற்பாடு இன்னும் 'ரஷ்யா' நாட்டில் நடைமுறைக்கு வந்திலது. அங்கே பழைய முறையே கையாளப்பெற்று வருகிறது. அதன்படி இங்கிலாந்துக்கும் அந்நாட்டுக்கும் பன்னிரண்டு நாள் வேறுபாடு இப்போது இருக்கிறது.

கிறித்தவர்கள் பழைய காலத்தில் மார்ச்சு மாதத்தையே முதல் மாதமாகக் கொண்டிருந்தனர். ஜூலியஸ்சீசர் என்ற உரோமானிய மன்னராலேயே சனவரி மாதம் முதன் மாதமாக மாற்றப்பெற்றது. இவ்விவரங்களெல்லாம் ஓர் தனிக்கட்டுரையில் ஆராய்வோம். இதுகாறும் தமிழ் மக்களின் வரலாறு, முகம்மதியருடைய மாதங்களின் வரலாறு, கிறித்தவர்களது மாதங்களின் வரலாறுகள் தெளிவாக ஆராயப்பெற்றன.

உ

பாண்டியர் வரலாறு.

திருவாளர் T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

I

முன்னுரை.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு நிலவும் இந்நிலப்பரப்பு முற்காலத்தே தமிழகம் என்று

வழங்கப் பெற்றதென்பது தொன்னூலாராய்ச்சி யுடையார் யாவரும் அறிந்ததொன்றாம். இப்போது இதனைத் தமிழ்நாடு என்றே யாவரும் கூறுவாராயினர். இது வடக்கில் வேங்கடமும் தெற்கிற் குமரிமுனையும் கிழக்கிலும் மேற்கிலும் இருபெருங்கடலுமுடையதாயிருக்கின்றது. இத்தமிழகத்தைக் குடபுலம் குணபுலம் தென்புலம் என்ற மூன்று பெரும் பகுதிகளாகப் பிரித்துப் பண்டைக்கால முதல் ஆட்சி புரிந்து வந்தோர், சேர சோழ பாண்டியர் என்னும் தமிழ் மூவேந்தரேயாவர். இன்னோர் ஆட்சி புரிந்த பகுதிகள் முறையே சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் எனப்படும். இவற்றுள் பாண்டிமண்டலத்தின் அரசுரிமையுடையராய்ப் பண்டைக்காலத்தே விளக்கமுற்றிருந்த பாண்டிய அரசர்களின் வரலாறே ஈண்டு யாம் ஆராயப்புகுந்தது.

இப்பாண்டியர் படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டுவரும் தொல்குடியினரென்பது அறிஞர்களது கொள்கை. இக்குடியினர் எக்காலத்து இப்பாண்டிமண்டலத்தை ஆட்சிபுரியும் உரிமையெய்தினரென்றுதல், எவ்வேந்தரால் இதன் ஆட்சி முதன் முதலாகக் கைக்கொள்ளப்பட்டதென்றுதல் அறிந்து கொள்ளக்கூடவில்லை. ஆகவே, எவரும் ஆராய்ந்து அளந்து காண்டற்கரிய அத்துணைத் தொன்மைபுற்ற குடியினர் இன்னோர் என்பது பெறப்படுகின்றது.

இனி, வடமொழியாளர் ஆதிகாவியமெனக் கொண்டாடும் வான்மீகி இராமாயணத்தில், தமிழ் நாட்டைப்பற்றிய உயரிய செய்திகள் பலகாணப்படுதலோடு, பாண்டிவேந்தரது தலைநகர் பொன்னாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பெற்ற கோட்டைவாயிலை யுடையதாயிருந்தது எனவும் சொல்லப்பட்டுளது. அன்றியும் வியாசரது பாரதத்தே, பாண்டவருள் ஒருவனாய அருச்சுனன் ஒரு பாண்டிய குலப்பெண்மணியை மணந்த செய்தி கேட்கப்படுகின்றது.

இங்ஙனமே வடமொழியிலுள்ள புராணங்களிலும், தமிழரசர்களைப்பற்றிய செய்திகள் காணப்படாமலில்லை. கி. மு. நான்காம் நூற்றாண்டினரெனக் கருதப்படும் காத்தியாயனர், பாணினி

வியாகரணத்திற்குத் தாம் வரைந்த வார்த்திகம் என்ற உரையுள் 'பாண்டிய' என்னும் மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளனர். அன்றியும் கிருஸ்துபிறப்பதன் முன்னர் மகதநாட்டில் ஆட்சி புரிந்த மௌரிய மன்னனாகிய அசோகனது கல்வெட்டுக்களிலும் பாண்டியர்களைப் பற்றிய செய்தி கூறப்பெற்றுள்ளது. இலங்கையின் பழைய சரித்திரத்தை விளக்கும் 'மகாவம்சம்' என்ற சரித நூல் அவ்விலங்கையின் முதற்றமிழ் வேந்தனும் புத்தாது நிர்வாண காலமாகிய கி. மு. 478ல் அதனை யாட்சி புரிந்து உரிமை யடைந்தவனுமாய விசயனென்பான், ஒரு பாண்டியர் குலப்பெண்மணியை மணந்தனனென்றும், ஆண்டுதோறும் தனது மாமனாகிய பாண்டியற்குச் சிறந்த பரிசில் அனுப்பினனென்றும் கூறுகின்றது. கி. மு. மூன்றும் நூற்றாண்டில் கிரீஸ் தேயத்தினின்றும் சந்திரகுப்தன் அரசவைக்கு வந்த யவன தூதனாகிய மெகஸ்தனிஸ் என்பான் பாண்டி நாட்டின் வரலாற்றைப்பற்றிக் கூறுவது:—

"ஹெராக்கிளீஸிற்குப் பண்டேயியாவென்ற ஒரு பெண் பிறந்தது. அவன் அப்பெண்ணிற்குத் தெற்கிற் கடலைச்சார்ந்துள்ள ஒரு நாட்டை யளித்தனன். அவளது ஆட்சிக்குட்பட்டவர்களை முந்நூற்றறுபத்தைந்து ஊர்களில் பகுத்துவைத்து ஒவ்வோர் ஊரினரும் ஒவ்வொரு நாளைக்கு அரசிக்குத் திறைகொணர வேண்டுமென்று கட்டளை யிட்டான்" என்பது. இனி கி. பி. 79-ஆம் ஆண்டில் இறந்தவராகிய பிளைனி என்ற மற்றொரு மேனாட்டு வரலாற்று ஆசிரியரும் மெகஸ்தனிஸ் கூறியதைப் போன்றுள்ளதோர் கதை கூறியிருக்கிறார். அஃது, 'இந்தியாவிற் பண்டோவென்ற ஒரே சாதி பெண்ணரசுக்குட்பட்டது. ஹெராக்கிளீசுக்கு ஒரே பெண்ணிருந்தமையின் அவன் மிக்க அன்புடன் ஒரு பெரிய நாட்டை அவளுக்கு அளித்ததாகச் சொல்லுகிறார்கள். அவள் வழியினர் முந்நூறு ஊர்களை ஆட்சிபுரிந்தனர். அன்னோர் பெருஞ் சேனைகளையுடையாரா யிருந்தனர்" என்பது. யவனாசிரியர் இருவரும் கூறியுள்ள கதை, பாண்டியர் மலயத்துவச பாண்டியனது புதல்வியாகிய மீனாட்சியம்மையின் வழித்தோன்றியவராய்க் கௌரியர் என்றழைக்கப்பெற்ற செய்தியையாதல், அன்னோர் பாண்டியன் சித்திராங்கதனது மகள் சித்திராங்கதை

யின் வழித்தோன்றல்களாயுள்ள செய்தியையாதல் குறித்ததாகக் கொள்ளல் வேண்டும். இதுகாறும் யாம் கூறியவாற்றால் பாண்டியர் மிகத்தொன்மை வாய்ந்த குடியினரென்பது நன்கு விளங்குகின்றதன்றோ ?

இனி, இப்பாண்டியர் சந்திரவம்சத்தைச் சேர்ந்தவரென்றும் வேப்பம் பூமாலையையே தமக்குரிய அடையாள மாலையாகவும் கயல் மீனுருவத்தைக் கொடியாகவும் இலச்சினையாகவும் கொண்டவர்களென்றும் சங்கநூற்களும் பிறநூற்களும் கூறுவதோடு கல்வெட்டுக்களும் குறிக்கின்றன.

இனி, புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்கநூற்களில் எத்துணையோ பல பாண்டிமன்னர்களது பெயர்கள் கேட்கப்படுகின்றன. ஆயினும் அவர்களது வரலாறு நன்குணரப்படவில்லை. கடைச் சங்கக் காலத்திற்கு முந்திய நாட்களில் நிலவிய அரசர்களுள் வடிம்பலம்ப நின்ற பாண்டியனும், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியுமே சிறந்தோராவர்.

II

கடைச்சங்கக் காலத்திற்கு முந்திய பாண்டியர்கள்.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன்:—இவன் நிலந்தரு திருவிற் பாண்டியனெனவும் பாண்டியன் மாகீர்த்தியெனவும் வழங்கப் பெறுவன். தொல்காப்பியத்திற் குரைகண்ட பெரியாருள் ஒருவராகிய நச்சினார்க்கினியர் இவ்வேந்தன் இருபத்து நாலாயிரம் யாண்டு அரசு வீற்றிருந்தனனென்றும் இவனது பேரவையின் கண்ணேதான்* தொல்காப்பியம் அரங்கேற்றப் பெற்றதென்றும் கூறியுள்ளார். ஆசிரியர் கூறியுள்ள ஆண்டின்தொகை புனைந்துரையாயிருத்தல் வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆயினும்

---

* தொல்காப்பியப் பாயிர உரை (நச்சினார்க்கினியம்). பக்கம். 9.

இவன் முடிசூடி நெடுங்காலம் ஆட்சி புரிந்தோனுதல் வேண்டு மென்பது சங்கத்துச் சான்றோர் இவனை 'நெடியோன்'* என்று பல்லிடத்தும் குறித்துள்ளமையானே வெளியாகின்றது.

இவன், கடற் பிரளயத்தால் குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த குமரிநாடு முதலியன அழிதற்கு முன்னர் அக்குமரி நாட்டில் பஃறுளி என்றதோ ராற்றை வெட்டுவித்துக் கடற்றெய்வத்திற்கு விழவெடுத்தனன். † இச்செய்தி புறநானூற்றிலுள்ள ஒன்பதாம் பாடலால் நன்கறியப் படுகின்றது. ஆகவே இவன் தலைச்சங்கத் திறுதியில் வாழ்ந்தவனெனக.

பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி:—இவ்வேந்தன் வடிம் பலம்ப நின்ற பாண்டியனது வழியில் தோன்றியவன். இவனது இயற்பெயர் குடுமியென்பது. இவன் அரசற்குரிய பரிமேதம் முதலிய வேள்விகள் செய்து சிறப்புற்றவனுதலின் இவனது இயற்பெயருக்கு முன்னர்ப் 'பல்யாகசாலை' என்ற அடைமொழி கள் சேர்க்கப் பெற்றுள்ளன. பாண்டியரது முன்னோர்களி லொருவன் ஆயிரம் வேள்விகளியற்றிப் புகழ்பெற்றானனென்று சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறுவது இவ்வேந்தனையே குறிக் கின்றது போலும். இவனைக் 'கொல்யானை பலவோட்டிக் கூடா மன்னர் குழாந்தவிர்த்த—பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும்

---

* i மதுரைக்காஞ்சி :—"நிலந்தந்தபேருதவிப்-பொலந்தார் மார் பின் நெடியோனும்பல்"

ii. முன்னீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே. புறம்—9.

† சின்னமனூர்ச் செப்பேடுகள் பாண்டியனொருவன் கடல்சுவற வேலெறிந்த கதையையும் ஒரு பாண்டியனிடத்துக்கடல் அடைக்கலம்புகுந்த கதையையும் குறிக்கின்றன. கடற்பிரளயத்தால் உலகங்களெல்லாமழிய, ஒரு பாண்டிய அரசன் மாத்திரம உயிர் வாழ்ந்திருந்த செய்தி வேள்விக் குடிச் செப்பேடுகளில் வரையப்பெற்றுளது. இம்மூன்று கதைகளும் வடிம்பலம்ப நின்ற பாண்டியனைப்பற்றியனவே யாமென்று சில ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர்.

பாண்டியாதிராசன்' என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் குறிப்பது ஈண்டு அறியத்தக்கது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்மீது அவனது அவைகளப்புலவர் தலைவராகிய மாங்குடி மருதனாரால் பாடப்பெற்ற மதுரைக்காஞ்சியென்ற நூலிலுள்ள 'பல்சாலை முதுகுடுமித்—தொல்லாணை நல்லாசிரியர்—புணர் கூட்டுண்ட புகல்சால் சிறப்பின்' என்ற அடிகளில் இவ்வேந்தன் புகழப்பட்டிருத்தல் காண்க. இதனால் சங்கச் செய்யுட்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் பிற்காலத்திய செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் பெரிதும் உறுதியெய்துதல் நன்குணரத்தக்கது.

நமது முதுகுடுமியின் சிறப்பை விளக்கக்கூடிய ஐந்து பாடல்கள் புறநானூற்றிற் காணப்படுகின்றன. அவற்றைப் பாடினோர் காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் என்ற புலவர்களே யாவர். அவர்களது பாடல்களால் அறிந்து கோடற்குரியன:—இம்மன்னர் பெருமான் அக்காலத்தில் நிலவிய பல அரசர்களையும் புறங்கண்டபெருவீரன்; வேண்டிய வேண்டியாங்கு புலவர்களுக்கும் இரவலர்களுக்கும் ஈந்த பெருங்கொடை வள்ளல்; அரசர்க்குரிய பல வேள்விகளை முடித்துப் பெருமை யெய்தியவன் சிவபெருமானிடத்தும் பெரியோர்களிடத்தும் பேரன்புடையோன் என்பன. இவனை நெட்டிமையார் பாடிய பாடல்களுள் ஒன்றைக் கீழே தருகின்றோம்.

பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறன்மாண் குடுமி
யின்னாவாகப்பிறர்மண்கொண்
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே. (புறம்—12.)

(தொடரும்.)

மாணவர் பக்கங்கள்.

உ

எனது பற்பல வேலைகள்.*

திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
திரு. பேதுரு உயர்தரப்பள்ளிக்கூடம், தஞ்சாவூர்.

எனது உழுவல் அன்பினராகிய திரு அ. பொன்னண்ணுக்களத்தில்வென்றாரவர்கள் ஒரு விரிவுரை யியற்றவேண்டுமென என்னைப் பணித்திட்ட நிருபத்தில், 'நீங்கள் புரிந்துவரும் பற்பல வேலைகட்கிடையே இதனையும் மேற்கொளல் வேண்டும்' எனுஞ் சொற்றொடரொன்று காணப்பட்டது. என்னை, ஏதோ கற்றவனாகவும் பற்பலவேலைகள் உற்றவனாகவும் சேய்மைக்கண்ணிருந்து பிறழ உணர்வார் சிலர், மேற்கூறியாங்கு, சிற்சில அமையங்களில் எனக்கு எழுதியதுண்டு. ஆயினும் அப்போதெல்லாம் யான் ஏதும் கருதியுணர்தற் கிடனிருந்ததில்லை. ஆனால் இப்போதோ, என்னொடு பன்னெடுங்காலம் பழகி என்னை நன்குணர்ந்தாரும், உண்மையல்லதை யுரைத்தறியாருமாகிய என் நண்பர் இங்ஙனம் எழுதியது, 'யான் புரிந்துவரும் பற்பல வேலைகள் யாவையோ' வென நினைத்துப் பார்த்தறிய என்னைத் தூண்டிற்று. யான் நீளநினைந்து பார்க்கவே, அவர்கள் கூறியது ஒருவழியில் உண்மையாதலைக் கண்டேன். அதனையே ஈண்டு உரைத்திடப் புகுகின்றேன்.

'எனது பற்பல வேலைகள்' என்ற பெயரைக் கேட்ட என் நண்பர்கள், அவ்வேலைகள் ஒரு உயர்தரப்பள்ளியிலோ, ஒரு

* இது, உரத்தநாட்டு உயர்தரப் பள்ளிக்கூடத்தின் மாணவர் தமிழ்ச் சங்கத்தில், 1—12—௨௮ல், எடுத்துரைக்கப்பெற்றது.

பெரிய தமிழ்ச் சங்கத்திலோ யான் புரியும் வேலைகளே என எண்ணியிருத்தல் கூடும்; இல்லை, இல்லை, ஒரு பயிர்த்தொழில் பற்றிய வேலைகளேயாகும். 'பற்பல வேலைகள்,' 'பயிர்த்தொழில்' என்ற உரைகளைக் கேட்போர், என்னை ஒரு பெருநிலக்கிழவனாக எண்ணிவிடுதலுங்கூடும்; இல்லை, இல்லை, 'யான் வறியன், ஒரு செய்யாளன்.' எனது நிலக்கிழமையெல்லாம் ஒருவயல், அதன் அயல் ஒரு துரவு, அவைகளைச் சுற்றிய ஒருவேலி எனும் இவ் வளவினவேயாகும். என்றாலும் என்வேலைகள் பற்பலவே!

இடையில் பிறிதொன்று:—மேற்கூறிய நிலம் துரவு வேலிகள் என்காலத்தில் யான் ஈட்டியனவல்ல. அவை, என்னருமைத் தந்தையார் எனக்கு ஈட்டி வைத்தன. ஆ! என் தந்தையாரை யான் பிறந்த நாட்டொட்டே கண்டறியேனே. அவரைப்பற்றி எனக்கு அறிவிப்பார் பலரும், ஒரு நெறியின்றிப் பலப்பல வகையில் கூறுவாராகின்றனர். ஒருவர், அவர் 'திருமண்' இட்டுக்கொள்பவர் என்றனர். ஒருவர், அவர் தம்வயிற்றின் புறம்பே யன்றி உள்ளுந் திருமண் ணிட்டுக்கொள்பவரென்றார்! ஒருவர், அவரைத் 'திருநீறு' பூசிக்கொள்பவரென்றார். ஒருவர், அவரை நஞ்சுண்ணும் பித்தரென்றார். ஒருவர், அவர் எப்போதும் நீரிற் கிடப்பவரென்றார். ஒருவர், அவர் எப்போதும் இடுகாட்டிருப்பவரென்றார். ஒருவர், என்றும் தூங்குபவரென்றார். ஒருவர், இரவும் பகலுமாக விழித்துக்கொண்டிருப்பவரென்றார். ஒருவர், கறுப்பென்றார். ஒருவர், சிவப்பென்றார். ஒருவர், எல்லோரையும் அளித்துப் புரப்பவரென்றார். ஒருவர், எல்லோரையும் அழித்துத் தொலைப்பவரென்றார். ஒருவர், நீயே அவர், அவரே நீ, உன்னைக் கண்டால் அவரைப் பார்க்க வேண்டியதில்லையென்றார். இங்ஙனம் அவரவர் கூறுவனவற்றை யெல்லாம் எடுத்துரைத்தால், அதுவே ஒரு தனி விரிவுரையாகிக் காலத்தைக் கவர்ந்து கொள்ளும். எந்தையார் எத்தகையாராயினும், அவர் எங்கோ இன்றும் இருப்பதாகவே பலருங்கூற, சின்னாட்கு முன் நமது அன்புடையார் ஒருவர்மட்டும், அவரை எண்ணிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று கூறியுள்ளார். இவர் கூறுவது 'அவர் இல்லைபோலும்' என்ற ஐயத்தினையும் அச்சத்தினை

யும் விளைவிக்கின்றது. அவ்வன்புடையார் தாம் கண்ட உண்மையினை வெளிப்படையாகக் கூறிவிடுவாராயின், அது என்போன்ருர்க்குச் செய்யும் பேருதவியாகும். தந்தை யொருவர் இருக்கின்ருர் என்ற உணர்ச்சியே, என் நிலத்தினைப் போற்ற வேண்டுமென்னும் கடமையையும், அந்திபட்டால் வீட்டுக்குப் போக வேண்டுமென்னும் அச்சத்தினையும் உண்டாக்குகின்றது. இலரென்பார்க்கொன்றுமில்லை யன்றே! இது நிற்க.

யான் என் தந்தையாரைத் தேடிக் கண்டறியாதது ஒரு வியப்பன்று. அவர் என் கடன்களை நீக்கிக்கொள்ள எனக்குத்தேடி வைத்த வயலையும் தூரவையுமே யான் நெடுங்காலம் பார்த்தறியேனே! வயலைச் சுற்றியுள்ள வேலியைப் போற்றி வந்த நிலேயே என் காலமெல்லாங் கழிந்து விட்டதே! இவ்வேலியைப் போற்றி வந்ததாலாய வேலைகளே, அந்தோ! யான் இங்குக் கூறப் புகும் எனது பற்பல வேலைகள் எனும் விரிவுரை யாகின்றதே! இவ்வேலி மிக மிக அருமை வாய்ந்தவேலி என்பதூஉம், இதனைப் போற்றிவைத்தே வயல் தூரவுகளின் நலனை அடைய வேண்டுமென்பதூஉம், இவ்வேலி யழியின் அப்பொழுதே அங்கு வயல் தூரவுகளும் அழிந்துபோம் என்பதூஉம் முழு உண்மையே. ஆயினும், வயல் தூரவுகளை மறந்து இவ்வேலி யொன்றினையே போற்றி வந்ததுதான் எனது அறியாமை யாகும். கழிந்தது பற்றி இரங்குதலென்? இவ்வேலியின் இயல்பென்னை? அதற்கு யான் புரிந்து வந்த பற்பல வேலைகள் யாவை? வயல் தூரவுகளை யான் அறியாதிருந்தமையின் அவை எய்திய நிலை என்னை? அவற்றைச் செப்பனிட யான் கண்டுகொண்டிருப்பதென்னை? என்பனவே இதுபோது உரைத்தற்குரியன.

பச்சைவேலி, பட்டவேலி என இருவகைப்படும் வேலிகளுள் இவ்வேலி பச்சைவேலியாகும். வளைந்தும் நிமிர்ந்தும் சிறுத்தும் பெருத்தும் உள்ள பற்பல கழிகளை, ஒருவகை நாரினால் கட்டப்பெற்ற உட்கூட்டின் மேலே கருமை, செம்மை, வெண்மையாய நிறஞ்சேரும் ஒருவகை மண்ணாற் பூசப்பெற்றது இவ்வேலி யாகும். இவ்வேலி நூறு ஆண்டுகள் அழியாதிருக்கத்தக்கதாயி

னும், ஏதேனும் ஒரு பழுதுற்றால், ஒருநாள், ஒரு திங்கள், ஓராண்டு, ஈராண்டு, ஐந்தாண்டு, பத்தாண்டு முதலாய காலங்களிலேயும் அழிந்து, இருந்த விடமே தெரியாமற் போய்விடக் கூடியது. இவ்வேலி நொய்திலும் நொய்யது. இது வெப்பந் தாங்காது, மழை தாங்காது, பனி, காற்று முதலாயவையுந் தாங்காது. இதன் உரத்திற்கே சிலரிடம் தொண்டியற்றியுளேன்; இரந்துளேன்; திரைகடலோடியுளேன்; சிலரைப் புகழ்ந்து பாடியுளேன்; அம்மம்ம! இன்னும் எத்தனை வகையான முயற்சிகள்! அந்தோ! சிலர்பலர், இத்தகைய தம் வேலியைப் புரத்தற்குப் பிறவற்றின் வேலிகளுள் நூற்றுக் கணக்கு, ஆயிரக்கணக்காய என்? இலட்சக்கணக்காய வேலிகளை அழித்துவிட்டனரே! அந்தோ! பாவம். அது நிற்க. என் வேலிக்கு இங்ஙனம் அரும் பாடுபட்டுத் தேடி யமைக்கும் உரந்தானும் சிறிது மிகினும், அன்றிக்குறைபினும் இது முற்றும் பழுதுபட்டுவிடும். இவ்வேலி ஒரு நாளைக்கு உணவின்றி யிருத்த லமையாது; இருநாளைக்குச் சேர்த்தேற்றுக்கொள்ளாது. ஆ! இவ்வொரு வேலிக்குமட்டும் சென்ற பல்லாண்டுகளாக ஆகிய உரப் பொருள்களின் அளவினை எண்ணப் பெருவியப்புறுகின்றதே! இந்த என்வேலி ஒரு நாற்பதாண்டுகளாக வுள்ளது. முதலிருபது ஆண்டுகட்குத் திங்களொன்றுக்கு, மிகுதி குறைவு நிரவலில், பத்து ரூபா வைத்துப் பார்க்கினும் (10 × 12 × 20) ரூ. 2400ம், பின்னிருபது ஆண்டுகட்குத் திங்களொன்றுக்கு ரூ. 15 நிரவலில் வைத்துப் பார்க்கினும் (15 × 12 × 20) ரூ. 3600ம் ஆக ரூ. 6000 செலவாகியிருக்குமே! இம்மட்டோ, இவ்வேலியின் எண்ணிறந்த பழுதுகளைச் செப்பனிட்ட செலவுகள், இது மழை வெய்யிலிற் பழுதுறுது போட்டுவந்த மேலுறைகள் முதலாய பல்வகைச் செலவுகளும் எத்தனை ஆயிரம் ஆயிரம் ஆயினவோ! மிகக்குறைந்தது ஒரு பதினாயிரமாவதாகுமே! அம்மம்ம! இத்தொகையினை நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தந்திருப்பினும் பலநற்காரியங் கட்கிடனாயிருக்குமே! இத்துணைப் பெருஞ் செலவிட்டுக் கண்ணுங் கருத்துமாகப் புரந்துவரும் இவ்வேலி, பழுதுறாத நாளுமில்லை; பழுது பார்ப்பாரைத் தேடாத நாளுமில்லை. ஒரு வேலிக்கு ஒரு

பழுதுறின் அது அருகிலுள்ள பல வேலிகட்கும் அடுப்பது இயல்பாகின்றது. பழுது பார்ப்பவரிற் சிலரோ, வேலியின் இயற்கை நிலையினையும் பழுதின் இயற்கையினையும் ஆய்ந்துணராது, எங்கோ ஓர் சில்லுறுப்பிற் பழுதுறினும் பல்லுறுப்பினைப் பிடுங்கி எறியும் பான்மையினராகின்றனர். இப்பழுதுபார்ப்போரிற் சிலர், வேலிக்காரர்க்கு வேண்டியவராய்த் தோன்றிப் பழுது பார்ப்பது போற் பழுது செய்து வருதலின், வேலிகளின் எதிரியின் உளவாளியாகி அவரிடமும் உட்கூலிபெறும் ஒற்றர்களோ என ஐயுறத்தக்கா ராகின்றனர். யானும், என் வேலியைப் பழுது பார்ப்போரும் செய்துவரும் இடையறுப் பழுதுகட்கிடையே, எனது வேலி, இத்துணைக்காலம் நிலைநிற்பது பெருவியப்பினதே! இனி இவ்வேலியின் துணையாக இதனை யடுத்திருக்கும் உள்ளீரமுள எனையொரு வேலியும், இவ்விரு வேலிகளினின்றும் கிளைத்தவொரு சிறுமெல் வேலியும், இவற்றைச் சார்ந்த வேறு சில வேலிகளும் உளவாகலின், அவை பற்றிய வேலைகளாய இணையாறுகள் எனது வேலி பற்றிய பற்பல வேலையாகும் முதலாறுடன் கூடலின், எனது பற்பல வேலைகள் பற்பலபல வேலைகளாவதிற் றடை யுண்டுகொல்?

இனி, வயல் தூரவுகளின் நிலையினைச் சொல்லப்புகும் யான், இத்தகைய உலக வேலிகளின் ஒருவகை வியப்பை மட்டும் உரைத்து அப்பாற் செல்ல வேண்டியேன் ஆகின்றேன். மேற்கூறியவாறு இவ்வேலியிலமைந்து கிடக்கும் கழிகளாலோ, கயிற்றாலோ, மேல் மண்ணாலோ, உள்ளூறை எனைப் பொருள்களாலோ சிறிதும் வேறுபாடு காணற்கியலாத இவ்வேலிகளுள், ஒரு சில, மிகவுயர்ந்த வகை வேலிகளெனவும், ஒரு சில, மிக இழிந்த வகை வேலிகளெனவும், மிகப்பல, முன்னவற்றை நோக்க இழிந்தவாகவும் பின்னையவற்றை நோக்க உயர்ந்தவாகவும் எண்ணப்படுகின்றன. என் கண்காண ஒரு இழிந்த வகை வேலியின் மேற்படிந்த ஒரு தூசி, காற்றினுல் ஒரு உயர்ந்த வகை வேலியின் மீது பட, அங்கு நிகழ்ந்த ஒரு பெரும் போரினை, இப்பாலெய்திய ஐரோப்பிய மாபெரும் போரும் மறக்கச் செய்திலதே! பல வேலிகட்கு உரம் சமைக்கும் கூலிக்காரன் ஒருவன், முன்னே போடத்தகும்

உயர்ந்த வகை வேலி அங்குக் காணப்படாமையானும், பின்னே போடத்தகும் வேலியாயினும் மிக இன்றியமையாமை எய்தி நின்றமையானும், ஒரு இழிவகை வேலிக்கு உரமிட்டுக்கொண் டிருக்க, அங்குத் தோன்றிய அவ்வுயர்வகை வேலி, உரம்இடு வோனையும் இழிவகை வேலியினையும் பற்றி விளைத்த போரினைக் காணுதாரன்றோ, மேற்கூறிய ஐரோப்பியர் போர்க்கு மாபெரும் போரெனப் பேர் தந்தவர்! இங்ஙனமாக இவ்வேலிகளின் உயர்வு தாழ்வுபற்றிய எண்ணங்களாய பெருநோய், இவ்வேலிகளை விட் டொழியுங்காலம் என்று வருமோ!

இனி, அவ்வயல் தூரவுகளின் நிலையினைச் சிறிது பார்ப்போம். இங்கே கூறிய தூரவு, வேலியின் மேல் கோடியில் உளது. வயலோ தூரவின் கீழே, வேலியின் மேற்பாகத்தினிடையே அமைந் துளது. எஞ்சிய விடங்களெல்லாம் இடைவெளிகள். தூரவு, இயற்கையாய நீரூற்றுடையதாய், எத்துணை நீர் இறைத்துப் பாய்ச்சினும் சிறிதுங்குறையாது நீர்வள மிகுவதாய், எத்துணை வெளிநீர் வந்து பெருகினும் இடந்தருவதாய் உள்ள ஒரு அருமைப் பொருளாகும். வயலோ, அளவிற்சிறிதாயினும் எத்துணை உயர்ந்த பொருளும் விளைதற்கேற்ற நன்செய்நிலமாய், நட்டபயிர் எத் துணை ஆண்டுகள் செலினும் பட்டொழியாது நிலைநின்று வளந் தாற்கேற்றதாய் உள்ள அருநிலமாகும். புறவேலியில் அமைந் துள்ள ஐந்து வழிகள் வயலுக்குவேண்டும் உயரிய விதைகளையும் தூவிற்குவேண்டும் இனிய நீரையும் கொண்டுவரத்தக்க அரிய வாயில்களாகும். இத்துணைச்சிறந்த தூரவு, வயல், வாயில்கள் யாவும் என் பார்வையின்மையான் எய்திய கேட்டினை, ஆ! என் னென்பேன்! ‘செல்லான் கிழவ னிருப்பின் நிலம்’ எக்கேட்டினை எய்தாது? என் வேலியே எனது பொருளென, என் வேலியைப் புரத்தலே எனது கடனென எண்ணிப் பலகாலத்தினைப் போக்கிய யான், இப்பால் சில சான்றோரால், வேலியின் உட்புறத்து எனக் குரியதாய நிலந்தூரவுகளைக் கேட்டுணர்ந்த போது, அவற்றைப் பரபரப்புடன் சென்று எட்டிப்பார்த்தபோது, அவற்றின் கேடு களைப் பார்த்தறிந்தபோது, அந்தோ! யான் எய்திய துயரினை எங்ஙனம் எடுத்துரைக்க வல்லேன்!

முள்மரம் ஒன்று. தன்னைத் தொட்டவரை அயரச்செய்து அவர் தம் நலங்களையெல்லாம் போக்கும் செடியொன்று. தன்னை யடைந்தவரை நினைப்பொழிந்து போகச் செய்யும் பூண்டு ஒன்று. அம்மம்ம! இங்ஙனமாய பிற பலவற்றையும் யான் எங்ஙனம் எடுத்துரைக்க வல்லேன். இவ்வயலில்-இல்லை-வனத்தில் உள்ள 'சிறுகட் புகர்முகப் புழைக்கைக்-கறையடிக் களிநல்யானை' யின் ஆர்ப்பினை, அன்று கண்டேனோ! அன்றி இன்றுதான் இதோ காண்கின்றேனோ! அறிகின்றிலேனே! ஏனைய பலவகை விலங்கு களின் இன்னல்களை யெல்லாம் எவ்வாறு இயம்புவது! தீய செடி கொடி மரங்கள் முளைப்பினும் அவற்றையழித்து நற்பயிர் கள், மரங்களையே வளர்த்தற்குரிய தூரவு நீரோ! தன்னியல்பு கெட்டு, நச்சுநீராகி இக்கூறிய செடி கொடிகளின் வளர்ச்சிக்கும், விலங்குகளின் பெருக்கத்திற்கும் ஏற்ற தொன்றாகியதே! அதனை, வேலியே பயிரையழிப்பது போன்றதென்பேனோ! ஆசிரியரே மாணவரைக் கெடுப்பது போல்வதென்பேனோ! வேறு என் சொல்வேனோ!

இனி, இத்தோற்றங்களைக் கண்டு திடுக்குற்ற யான், என் வயலும் தூரவும் இவ்வின்னல்களினின்றும் நீங்கி, நன்னிலமும் நற்றூரவுமாமாறு யான் செய்ததென்ன? கண்டதென்ன? என் பவையே ஈங்குரைத்தற்கு எஞ்சியுள்ளன. வயலிலுள்ள தீய செடி கொடி மரங்களை வேரறக் களைய வல்லதொரு கருவியை, தூரவி லுள்ள நச்சு நீரைப் போக்கி நன்னீர் ஊற்றந் திறக்க வல்லதொரு கருவியை, வேலியிலுள்ள வாயில்கட்கு, தீய விதைகள் நச்சு நீர் முதலாய பொருள்கள் வரக்காணின் அதுபோது மூடிக்கொள்ள வும், நல்வித்து நன்னீர் வரக்காணின் அதுபோது திறந்து கொள்ள வும் வல்லதொரு கதவினையமைக்கும் கருவியை யான் காணல் இன்றியமையாத தாயிற்று. அதனோடு வயலினை வளம்படுத்த வல்ல நல்விதைகளோ நற்பயிர் செடி கொடிகளோ எனக்கு இன்றியமையாதன வாயின. இவைகளை எனக்குத்தந்துதவுவாரைத் தேடித் தேடி அலைவேன் ஆயினேன். சிறந்த தோட்டங்களாகத் தோன்றும் எத்தோட்டங்களினும் வயல்களினும் புகுந்து, அவற் றின் அமைப்பினையும் அங்குள்ள பொருள்களையும் ஆராய்வேனு

யினேன். நல்லூழின் பயனாகச் சில பெரியார் தோட்டங்களைக் கண்டேன். ஆயினும் அவைகள் ஆங்காங்குச் சிற்சில விதைகளை வழங்கினவே யன்றி, நிறைந்த தீங்குகளை விரைந்து போக்கிச் சிறந்த பொருள்களை ஒருங்கு அமைக்க வேண்டிய எனக்குப் போதிய உதவி புரிவனவாகவில்லை. மேலும் மேலும் சென்று கொண்டிருந்தேன். ஓரிடத்து ஒரு பெரிய தோட்டம், தன்னைச் சுற்றியுள்ள பெரிய முள் வேலியும் போதாதது போல் சிலபல காவலரையும் கொண்டிருப்பக்கண்டு, அங்குள்ள காவலரையணுக, அவர்கள் அந்தோ! ‘அகலப்போ, அகலப்போ’ எனக் கூறிச் சீறி விழுந்தனர். எட்டிக்கொண்டு, ஐயன்மீர்! எனது வயல் தூவுகள் மிகப் பழுதுற்றிருத்தலின் அவற்றைச் செப்பனிடும் வழிகளை உங்கள் தோட்டத்தினைப் பார்த்துத் தெரிந்துபோக வந்தேன், திருடனலேன், அருள் கூர்ந்திடுக என்று வேண்டினேன். ஒருவர், அடே! இது தேவர் தோட்டமென அறிந்திலையோ! விண்ணிற் றேவரும் மண்ணிற் றேவருமே இங்கு வந்து இதனுட் புகலாம். இழிந்த வேலியினராய உன் போன்றார் இதனைக் கனவினுங் காணலாகாது என்றனர். நன்றெனக் கூறிச் சென்றனன் அப்பால். நெடுந்தூரஞ் சென்றபின் ஒரு அழகிய சிறிய தோட்டத்தினைக் கண்டு பெருமகிழ்வுற்று அதன்பால் ஏகினன். அத்தோட்ட வாயிலில் ஒரு அழகிய மண்டப மிருந்தது. அதன் கண் ஏறத்தாழ ஐம்பதின்மர் இனிதமர்ந்திருந்தனர். அவர்கள் என்னை அன்போ டெதிர்கொண்டு இன்மொழிகூறி நல்லிடத் திருக்கச் செய்தனர். என்முகவாட்டமறிந்து அதன் காரணங் கேட்டனர். நடந்தனபலவும் நவின்றனன். முதற் கூறிய தோட்டத்தின்பால் யான் எய்தியதும், காவலரால் அலைப்புண்டதும், அதனைக் காணப் பெறாமையால் ஆவலுற்றிருப்பதும் கூறி வருந்தும் காலை, அவர்களுள் ஒருவர், புன்னகை கொண்டு, அத் தோட்டமா! என்று தொடங்கி, அத்தோட்டம் வெளித் தோற்றத்தாற் சிறந்ததேனும், இடத்தாற் பரந்ததேனும் உள்ளுறைப் பொருள்களால் எளியதொன்றென்றார். மற்றொருவர், அதன் கண் ஒன்று இரண்டு மூன்று நான்கு பிரிவுகளுளவாகவும் அத் தோட்டத்தினர் ஐந்தாம் தோட்டம் முதலாய அமைத்திருத்தலின்

அது குறைபாடுடையது எனல் விளங்கும் என்றார். வேறொருவர் அதன்கண் மெய்ப்பூண்டு செடி கொடி முதலாய வற்றோடு பொய்ப்பூண்டு செடி கொடிகளும் கலந்துள்ளனவே என்றார். பின்னொருவர், அத் தோட்டத்தினருள்ளும் ஒருவர் நன்றெனும் பொருளைப் பிறரொருவர் அன்றெனுமாறு அதன்கண் மாறுபாட்டினைத் தரும் பல பொருள்கள் அமைந்துள்ளன வென்றார். ஏனையொருவர், உட்செல்வார் அங்குள்ள பொருள்களைக் காணுமாறு எத்தகைய ஒழுங்குகளும் செய்யப் பெறாது மயங்கிக்கிடப்பது அது வென்றார். இன்னொருவர், மலைகல்லி எலிபிடிப்பதுபோல் அரிது முயன்று சிறுபயன் அடையத் தக்கது அது வென்றார். இனி யொருவர், அதன்கண் ஒளிப்பகுதிகளே யன்றி யிருட் பகுதிகளும் உளவே யென்றார். இப்பாலொருவர், இவை போன்ற பல காரணங்களாலேதான், பிறர் அதனைக் காண விடலாகாதென அன்னோர் காவல் புரிகின்றனர் என்றனர்.

இங்ஙனமெல்லாம் அத்தோட்டத்தின் இயல்பினை அவர்கள் பலவாறு எடுத்துரைத்துவரவே, அக்காவலர் கூறிய கடுமொழியாலாய வெறுப்பும், அத்தோட்டத்தினைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பும் என்னை விட்டொழிந்தன. இனி, மேற்கூறிய பெரியார் தங்கியிருக்கும் அணிமன்றின் பின்னே யொளிரும் அழகிய தோட்டத்தினைக் காணவேண்டுமெனும் விருப்பெழுந்து ஓங்கிற்று. 'ஐயன்மீர்! அருள்கூர்ந்து இத்தோட்டத்தினுட் சென்று பார்த்து வர எனக்கு ஆணை தருவீர்களாக' என்று யான் அவர்களை வேண்டுமுன்னரே, நன்று நன்றென்றுரைத்தருளினர். அவர்கள் ஆணைகொண்டு உட்புகுமளவில் அதன் வாயிலில் 'வருக வருக வளமெலாம் கொள்க' என எழுதப்பெற்றிருந்தது கண்டு மகிழ்பூத்தேன். எச்சாதியினரும், எம்மதத்தினரும், எவ்வுலகத்தினரும் இனிது சென்று கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் இன்பங்களையெல்லாம் ஒருங்கே தாவல்லது அத்தோட்டமெனலை அதனுட் புகுமளவிலேயே கண்டுகளித்தேன்! ஆ! அத்தோட்டத்தின் அருமை பெருமைகளையெல்லாம் எடுத்துரைக்க யாரால் இயலும்? உலகெலாம் பரந்துள அதன் பேரொளியால் அதனை ஒரு பகலோன் எனலாம்! உள்ளங் குளிரச்செய்யும்

அதனை ஒரு திங்கள் எனலாம்! தெவிட்டாது தித்தித்திருக்கும் அதனைத் தேவர் அமிழ்தம் எனலாம்! ஓ! அவையாவும் ஒவ்வா, ஒவ்வா. பகலோன் உலகின் வெளியிருளை ஓட்டும். வெளியே யுள்ள தாமரைகளை மலர்த்தும்; ஆயினும் இதனைப் போல ஒருவர் தோட்டத்து வேலியினுள்ளிருக்கும் திண்ணிய உள்ளிருளைப் போக்கவும் உள்ளத்தாமரையை மலர்த்தவும் வல்லதாமா? திங்கள் தண்ணிய ஒளியினைத்தந்து உள்ளங் குளிரச்செய்வதொன்றாயி னும், ஒரு மறுவுமின்றி என்றுங் குறையாது கலைவளர்ந்து நிற்கும் இதனை ஒக்குமா? அமிழ்தம், தேவர்க்கே, நாவின்பொன்றையே தரவல்லது; அது யாவர்க்கும் ஐம்புல இன்பினையும் தரவல்ல இதனை ஒக்குமா? அம்மம்ம! இத்தோட்டத்தின் பாத்தியமைப் பினை! பாத்தியுட் பதித்த செடிகளின் அமைப்பினை! என்னென் பேன்! ஏற்றத் தாழ்வில்லாத நூற்றுமுப்பத்து மூன்று பாத்திகளை யுடையது இத்தோட்டம். பாத்தி யொவ்வொன்றிலும் இரண் டிரண்டு அடிகளுயர்ந்த பத்துப் பத்துப் பூஞ்செடிகள் உள்ளன. ஒவ்வொரு பூஞ்செடியிலும் பூத்திருக்கும் அழகிய மலர்கள், கண் கவர் வனப்பினவாய் உலகெலாம் பரவும் நறுமணம் வீசுவதொடு இடையறாத தேன் ஊற்றினைச் சொரிந்துகொண் டிருக்கின்றன! இம்மலர்களோ, என்றும் வாடாதன; என்றும் மணம் வீசுவன; என்றென்றும் தேன் சொரிவன. இத்தோட்டம் ஒன்றினைக் காண்போர் வேறு எத்தோட்டங்கட்கும் சென்று பார்க்க வேண்டும் இன்றியமையாமை யிலராவர். இத்தோட்டத்தினை நன்கு ஆய்ந்தறிவார், தாமே ஒரு வேளாண் புலவராகிவிடுவார். இத்தோட்டத்தினை ஒருமுறையேனும் பாரார் தமது பிறப்பின் பயனை இழந்தோரேயாவர். ஒருமுறைபார்த்தோரும் இதன் அருமை பெருமைகளை முற்றும் அறியமாட்டார்; அவர், எத் தனைதாம் சென்று சென்று பார்ப்பினும் காண்டொறும் காண் டொறும் புத்தெழில்! புதுநலம்! புதுமணம்! கண்டு மகிழ்வர். இத்தோட்டத்தினைப் பார்த்துச் சென்றோர் இதுபற்றி எண்ணு தோறும் எண்ணுதோறும் இன்னலம்பல தோன்றக்கண்டு மகிழ் வர். உலகில் உள்ள நற்செடிகளை யெல்லாம் அரிது தேடி அழகு பெறவைத்த காட்சித் தோட்டமே இதுவாகும். இதன்கண்

ணில்லாத ஒரு பொருள் எவ்வுலகத்தும் இல்லை. இத்தோட்டத்தின் நலத்தினைக் கண்டு வியந்து, இதன் விதைகளையெல்லாம் கொண்டு சென்று, இதே தோட்டம்போல் தங்கள் தங்கள் மண்ணிலும் தோட்டம் அமைத்துக் கொள்ளாத நாட்டினர் உலகில் எங்குமில்லை. சுருங்கக் கூறின், எந்நாட்டினரும் எக்காலத்தினரும் தலையால் வணங்கி வாயாற்போற்றி நெஞ்சால் நினைந்தேத்தற்குரிய தெய்வத் திருத்தோட்டம் இதுவே எனலாம். இத்தோட்டத்தின் பெருமைகளைப் பின்னும் பின்னும் பன்முறை பற்பல விதமாகக் கூறும் அவாவுடையேன்.

இனி, இவ்வரிய தோட்டத்தினுள்ள ஒவ்வொரு பாத்தியினையும் செடியினையும் என் எளிய வயலில்—இல்லை—கொல்லையில் அமைத்துவிட வேண்டுமெனும் பேராசை என்னைப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வழகிய பூஞ்செடிகளின் விதைகளுள் இம்முதன் முறையில் யான் கொண்டு வந்திருப்பன சிற்சிலவேயாகும். ஒரு விதை, எனது துரவை நச்சுத் தன்மை நீக்கித் தெளியவைப்பது; நன்னீரைப் பெருக்கெடுத்தோடச் செய்வது; இந்த நன்னீர்ப் பெருக்கொடு கலந்து சென்று என் கொல்லையில் உள்ள தீய செடி கொடி மரங்களை யெல்லாம் மாய்த்தொழிப்பது. ஆ! இவ்விதையின் அருமை பெருமைகளை என்னென்பேன்! இது வெள்ளத்தால் அழியாதது; வெந்தழலால் வேகாதது; திருடர் பற்றிக் கொள்ளற்கியலாதது; அரசர் வரிவிதித்தற்கிடந்தராதது. யான் பயன் படுத்திக் கொள்வதோடு, யானே ஒருவனல்லாக எத்தனை பேருக்குக் கொடுப்பினும் குறைவின்றி வளர்ந்து கொண்டிருப்பது. இங்ஙனமாய இதன் பெருமைகள் விரிக்கிற் பெருகும். இவ்வித்தினை யொத்த பெருமைத்தாய பிறிதொரு வித்து, பற்பலர் பலகாலும் பலவழியாலும் தேடி வைத்திருக்கும் அரிய உரம் நீர்களெல்லாம் எளிதிற்பெற்று இனிது வளரும் செடியின் வித்து. இந்த இரண்டு வித்துக்களாலும், என் துரவும் கொல்லையும் புனிதமாயபின், விதைத்திடக் கொண்டு வந்திருக்கும் சில விதைகளுள் ஒன்று, தன்பாற் சார்ந்திருப்போர்க்கு இன்முகங் காட்டிக் கண்ணீர் பெருக்கி இன்னுரை வழங்கி இயன்ற உதவிகள் செயத்தரும் இனிய செடியைத் தருவது. மற்றொன்று,

பண்டறியாரையும் கண்டஞோரளவில் மேற்கூறியாங்கு இன்முகம் காட்டல் முதலிய செய்வதோர் அரிய செடியினைத் தருவது. வேறொன்று, உள்ளதை உள்ளதாகவும் இல்லதை இல்லதாகவும் தெரிவித்து என்றும் அழியாத செடியினைத் தருவது. பிறிதொன்று, தன்பால் எய்துவோர்க்கு மிக்க மனவெழுச்சியினைத் தந்து அவர் தொடங்கிய வேலைகள் யாவும் வெற்றியுடன் முடித்து வைப்பதொரு செடியினைத் தருவது. எனை யொன்று, தன் வன்மைக்கடங்கிய எச்சிறு கொடிகளையும் அழிக்காத செடியின் வித்தாகும். இன்னும் ஒன்று, தான் வதியும் நிலத்தினிடத்து மிக்க ஆர்வம் கொள்ளும் செடியினைத் தருவதோர் விதை. அடுத்த தொன்று, ஒன்றன் கருத்தினை ஒன்று அறிந்து கொள்ளற்குரிய நன்மலரைத் தந்து வளமூட்டும் அரியவிதை. யான் கொணர்ந்த விதைகள் மிகச்சிலவே யாயினும் அவை ஒவ்வொன்றின் சிறப் புக்களைக் கூறற்கும் இடமிலனாகின்றேன். என்றாலும், இறுதி யாக இணையிலாததொரு நல்விதையின் சிறப்பினை மட்டுமாதல் கூறிச் செல்கின்றேன். இவ்விதையாலெழூஉஞ் செடியே என் தந்தையாரை என்பாற் சேர்ப்பது. இவ்வொரு விதையை விதைத்து வளர்க்காதவர் எத்துணைச் செல்வரேனும், எத்துணைப் புலவரேனும், எத்துணை உயர் சாதியினரேனும், எத்துணை மூப்பின ரேனும், எத்துணை மனைவி மக்கள் வாழ்க்கையினரேனும் அவரவர் கள் அவ்வவற்றால் எய்தும் பயன் ஒரு சிறிது மில்லை. இவ்விதை யாலெழும் செடியின் பயனுற்றாரே தத்தம் தாய் தந்தையரைக் கண்டு களித்து என்றும் அகலாப்பேரின்ப நிலையை இனிது பெற்று வாழ்ந்திருப்பர். எல்லாம்வல்ல இறைவன் திருவருள், எமது கொல்லையினைச் சீர்திருத்தி, மேற்கூறிய விதைகளையும் இன்னனைய வேறுபல விதைகளையும் அதன்கண் விதைத்து நலன் எய்துமாறு, எனக்கும் என்போன்றார்கட்கும் அருள் புரிவதாக.

உ

பெருமிழலைக் குறும்ப நாயனாரது திருப்பதி.

திருவாளர் T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவராகிய பெருமிழலைக் குறும்ப நாயனார் வாழ்ந்து வீடுபேறெய்திய திருப்பதி பெருமிழலை என்பது திருத்தொண்டர் புராணம் படித்தோர் யாவரும் நன்கறிந்த தொன்றாம். இஃது இங்ஙனமாக, சைவசமயாசாரியர்களால் பாடப்பெற்றதும், திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் படிக்காசு அருளப்பெற்றதுமாகிய திருவீழிமிழலை என்னும் திருப்பதியே இந்நாயனாரது பெருமிழலை எனக்கொண்டனர் பிற்காலத்தினர். ஆதலால் இத்திருப்பதிகள் இரண்டும் ஒன்றோ? அன்றிவேறோ? வேறாயின் பெருமிழலை யாண்டையது? என்பவற்றை ஆராய்வாம்.

சுந்தரமூர்த்திகள் அருளிய திருநாட்டுத் தொகையிலுள்ள 'மிழலைநாட்டு மிழலையே வெண்ணிநாட்டு மிழலையே' என்ற அடியால் மிழலை என்னும் பெயருடைய திருப்பதிகள் இரண்டு உண்டு என்பது வெளியாகின்றது. அன்றியும் இவ்விருமிழலைகளுள் ஒன்று மிழலை நாட்டிலும் மற்றொன்று வெண்ணிநாட்டிலும் இருத்தல் வேண்டுமென்பது அவ்வடியாலே அறியப்படுகின்றது. ஆசிரியர் சேக்கிழார் நமது குறும்பநாயனாரது திருப்பதி, மிழலை நாட்டிலுள்ள பெருமிழலை என்று மிகத்தெளிவாய்க் கூறியுள்ளனர். இதனை,

சூதநெருங்கு குலைத்தெங்கு பலவுபூகஞ் சூழ்புடைத்தாய்
வீதிதோறு நீற்றினொளி விரியமேவி விளங்குபதி
நீதிவழுவா நெறியினராய் நிலவுங்குடியா னெடுநிலத்து
மீதுவிளங்குந் தொன்மையது மிழலைநாட்டுப் பெருமிழலை.

(பெரியபுராணம்—குறும்பநாயனார் புராணம்-1.)

என்ற பாடலால் உணர்க. அன்றியும் அவ்வாசிரியர், வீழி மிழலையை மிழலைநாட்டிலுள்ள திருப்பதி என்று யாண்டும் குறிப் பிடவில்லை. ஆதலால் அவர் வீழிமிழலையும் பெருமிழலையும் வெவ் வேறு திருப்பதிகள் என்றே கருதியுள்ளாரென்பது ஒருதலை. எனவே, சுந்தரமூர்த்திகள் கூறியுள்ள மிழலைநாட்டு மிழலையும் வெண்ணிநாட்டு மிழலையும் முறையே பெருமிழலையும் வீழிமிழலையு மாயிருத்தல் வேண்டும் என்பது நன்கு துணியப்படும். ஆகவே, இவ்விரண்டும் வெவ்வேறு திருப்பதிகளேயாம். இங்ஙனமே, ஆனாயநாயனாரது மங்கலமும் * ஏயர்கோன் கலிக்காம நாயனாரது பெருமங்கலமும் † அரிவாள்தாய நாயனாரது கணமங்கலமும் ‡ பொதுவாக மங்கலமெனப்படினும், அவை வேறு வேறு திருப் பதிகளாயிருத்தல் ஈண்டு அறியத்தக்கது. இத்துணையுங் கூறிய வாற்றால், பெருமிழலைக் குறும்பநாயனாரது திருப்பதி வெண்ணி நாட்டு வீழிமிழலை யன்றென்பதும், மிழலைநாட்டுப் பெருமிழலையே யாம் என்பதும் இனிது புலப்படும்.

இனி, மிழலை நாட்டிலுள்ள பெருமிழலை எவ்விடத்துள்ளது என்பதைத் துருவி நோக்குவாம். முற்காலத்தில் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது; அவற்றுள் இராசேந்திர சிங்கவளநாடு என்பதும் ஒன்றாகும். ஒவ்வொரு வளநாடும் பலநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது; எனவே, இராசேந்திர சிங்கவளநாட்டிலும் பல உள்நாடுகள் இருந்திருத்தல் வேண்டும். இவ்வளநாடு இருபத்திரண்டு நாடுகளாகப் பிரிக்கப்

* பெரியபுராணம்—ஆனாயநாயனார் புராணம்—7.
† ,, ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்—1.
‡ ,, அரிவாள்தாயநாயனார் புராணம்—1.

பட்டிருந்ததென்பது கல்வெட்டு ஆராய்ச்சியால் புலப்படுகின்றது; அவற்றுள் மிழலைநாடு என்பதும் ஒன்றாகும். இதனை 'இராசேந்திர சிங்கவளநாட்டு மிழலைநாட்டுச் சேய்நலூர் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்' ¶ என்ற கல்வெட்டுப்பகுதியால் நன்குணரலாம். இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள சேய்நலூர், அறுபான்மும்மைநாயன்மார்களுள் ஒருவராகிய சண்டேசுவரநாயனர் திருவவதாரஞ் செய்தருளியதும் மண்ணியாற்றின் கரையிலுள்ளதுமாகிய திருச்சேய்ஞலூரேயாகும். இத்திருச்சேய்ஞலூர் மிழலைநாட்டிலுள்ளது என்பது மேற்குறித்த கல்வெட்டால் புலப்படுஞ்செய்தியாகும். இத்திருப்பதிக்கண்மையில் இரண்டுமைலில் மிழலை என்ற அழிந்த வூர் ஒன்றுளது. இஃது இப்பொழுது கும்பகோணத்திலிருந்து நான்கு மைல் தூரத்தில் சென்னைக்குப்போகும் பெருவழியில் உளது. யாம்நேரிற்சென்று அதனைப்பார்த்தபோது அழிவுற்ற நிலையிலுள்ள ஒரு பழைய சிவாலயம் அங்கே காணப்பட்டது. எக்காரணத்தாலோ அச்சிவாலயமும் அதனைச் சூழ்ந்துள்ள ஊரும் அழிந்துபோய்விட்டன. அவ்வூரினர் அதற்கருகிலுள்ள களம்பரம் என்ற ஊரில் குடியேறியுள்ளனர். மிழலையும் அதிலுள்ள சிவாலயமும் பழைய நாளில் நல்ல நிலையிலிருந்திருத்தல் வேண்டும். அழிவுற்ற அவ்வாலயத்திலுள்ள படிமங்கள் அதில் ஒருபுறத்தில் புதியதாக அமைக்கப்பெற்றுள்ள ஒரு சிறு அறையுள் வைக்கப்பெற்று வழிபாடு செய்யப்பட்டு வருகின்றன. அவ்விடத்திற் பெருமிழலைக் குறும்பநாயனரது படிமம் இன்றும் உளது. ஆகவே, புலவர் பெருமானகிய சேக்கிழார் குறும்பநாயனரது திருப்பதியாகக் கூறியுள்ள பெருமிழலை மிழலை நாட்டிலுள்ள இம்மிழலையே யாதல் அறிந்து கொள்க.

இனி, சேக்கிழாரடிகள், குறும்ப நாயனரது திருப்பதி பெருமிழலை என்றன்றோ உரைத்துள்ளனரெனின், கூறுவாம். பாபநாசந்தாலூகாவிலுள்ள மிலட்டூர் முற்காலத்தில் பெருமிலட்டூர் என்று வழங்கிற்று என்பது "நித்தவினோத வளநாட்டுக் கிழார்க்

¶ South Indian Inscriptions Volume II part III pp 331.

கூற்றத்துப் பெருமிலட்டூர் ஊரார் யாண்டு இருபத்தொன்பதாவது முதல் காசு ஒன்றுக்கு ஆட்டைவட்டன் முக்குறுணி நெல்லுப் பொலிசையாகத் தஞ்சாவூர் ஸ்ரீ ராஜராஜிஸ்வரம் உடையார் பெரும் பண்டாரத்தேய் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவர்களாகக்கொண்டகாசு இருநூறினால் ஆண்டாண்டுதோறும் அளக்கக்கடவ நெல்லு ஐம்பதின் கலம்.'' (South Indian Inscriptions Volume II No. 6) என்னும் கல்வெட்டினால் புலப் படுகின்றது. இதனைப்போலவே, தீஞ்சாவூர்த் தாலூகாவிலுள்ள ஆற்காடு என்னும் ஊர் பழையநாளில் போற்காடு எனவும் சீநக்கவள்ளலுக்குரிய ஊர்களுள் ஒன்றாகிய அரசூர் போரசூர் எனவும் வழங்கிவந்தன என்று தெரிகிறது. (South Indian Inscriptions. Volume II. Introduction page 26) எனவே, பெருமிலட்டூர், போற்காடு, போரசூர் என்று முற்காலத்தில் வழங்கிய ஊர்கள் முறையே மிலட்டூர், ஆற்காடு, அரசூர் என்று தற்காலத்தில் வழங்குவது போல, நமது குறும்ப நாயனாரது திருப் பதியாகிய பெருமிழலையும் இஞ்ஞான்று மிழலை என வழங்கு கின்றது என்றுணர்க.

உ

திருச்சிற்றம்பலம்.

திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

திரு. கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சாவூர்.

(தொடர்ச்சி. துணர் 4, பக்கம் 80.)

௬௬. வையம் புரந்த வயவேந்தர் வேறாகி
ஐயம் புகக்காண்டு மாதலினால்—வெய்ய
பினாகத் திருக்கையனைப் பேறாக நெஞ்சே!
புனாகத் திருக்கையனைப் போற்று.

வேறாகி-தாம் ஒரு பக்கமும், மனைவி மக்கள் ஒரு பக்கமுமாகப் பிரிந்து. "வேறாகி வீழ்வர்தாங் கொண்ட, மனையாளை மாற்றார் கொள" என்றார் நாலடியாரிலும். காண்டும்-கண்கூடாகப் பார்க்கின்றோம். வெய்ய பினாகம் திருக்கையனை-விரும்பத்தக்க பினாகமென்னும் வில்லையேந்திய அழகிய திருக்கையையுடையவனை.

பேறாக-நிலைநிற்பதான ஐசுவரியம் உனக்குக் கிடைக்குமாறு. புனாகத்து இருக்கு ஐயனை-புன்னாக மாத்தின்கீழ் வீற்றிருக்கும் வேதமுதல்வனாகிய திருமேனிப்பிரானை. பின்னிரண்டடி திரிபு என்னும் சொல்லணி உடையது.

௬௭. போற்றித் தொழுதெழுந்தாற் பொல்லாப் பிணியனைத்தும்
பாற்றி மனமே! பதந்தருவான்—சீற்றத்
தழனாக வேங்கைக்குக் காலாட்டைத் தந்த
நிழனாகத் தெம்மான் நினைந்து.

நினைந்து போற்றித் தொழுதெழுந்தால்-மனம், வாக்கு, காயம் என்னுந் திரிகாணத்தாலும் வணங்கினால். பாற்றி-பரிகரித்து.

தழல் நாகம்-விடத்தையுடைய நாகத்துக்கும், வேங்கைக்கு-புலிக்கும், கால் ஆட்டை-பதமெடுத்தாடும் திருநடக்காட்சியை. நாகம் என்றது பதஞ்சலியை ; வேங்கை என்றது வியாக்கிரபாதரை. கௌதமமுனிவரின் பொருட்டுத் திருநடஞ் செய்ததை யுட்கொண்டு திருமேனிப்பிரானைத் "தழனாக வேங்கைக்குக் காலாட்டைத் தந்த நிழனாகத் தெம்மான்" என்றார். மனமே! நாகத்துக்குக் காற்றையும் புலிக்கு ஆட்டையும் தந்து அவற்றின் பசிப்பிணியைத் தீர்த்த திருமேனிநாதர் உனக்கும் உணவைத் தந்து உனது பசிப்பிணியைத் தீர்த்தருள்வார் என்ற மற்றொரு பொருளும் தோன்றுமாறு வைத்தது பாராட்டற்பாலதாம். கால்-காற்று ; பதம்-உணவு. இது இப்பொருளாதலை "பெருஞ் சோற்று மிகுபதம்" எனவரும் புறப்பாட்டாலறிக.

௩அ. நினையாரும் பாவகரி நீணதியிற் சென்னி
நனையாரும் வெண்ணீறு நாதா!—புனையாரும்
சூலத் தலமருவார் சூழார் தொழாதாரும்
ஞாலத் தலமருவார் நைந்து.

நினையாரும்-உன்னை நினைந்து தியானியாதவரும். பாவகரி நீள்நதியில் சென்னி நனையாரும்-பாவகரி என்னும் நீண்ட நதியிலே தலைநனைத்து முழுகாதவரும். பாவகரி என்பது திருச்சுழியலில் ஓடும் நதியின் பெயர். எல்லாப் பாவத்தையும் போக்குவது பற்றி இந்நதிக்கு "பாவகரி" என்று திருநாமம். சூழார்-வலமாகச் சூழாதவரும். ஞாலத்துநைந்து அலமருவார் என்றியைக்க.

௩௯. நைந்து புவனேசன் நாமத் திருவெழுத்தோர்
ஐந்து முறையி லறிந்தோதி—உய்ந்து
புனிதராய்ப் போகாத புல்லறிவின் மாக்கள்
மனிதராய் என்பிறந்தார் வந்து.

நைந்து-மனம் நைந்து. நாமம்-பெருமை. முறையில் அறிந்து-திருமுறைகளிலே விசாரித்தறிந்து. ஐயறிவே யுடைமையின் புல்லறிவின் மாக்கள் என்றார். "மாவு மாக்களும் ஐயறி வினவே" என்பது தொல்காப்பியம்.

சO. வந்தித்து நெஞ்சே! வயலூர்ப் பெருமானைச்
சிந்தித்துத் தேறித் தெளிந்துணர்ந்து—பந்தித்த
பாத கமலத்தைப் பற்றறுக்கும் பற்றற்றான்
பாத கமலத்தைப் பற்று.

பந்தித்த-ஆன்மாவைத் தளைப்படுத்திய. பாதக மலத்தை-பாதகமான மும்மலங்களை. பாத கமலத்தை-தாமரை மலர் போன்ற பாதங்களை. 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' ஆகலான் 'பற்றற்றான்' என்றார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"—என்ற திருக்குறளின்

கருத்தைப் பின்னிரண்டடிகளும் கொண்டுள்ளது அறியத்தக்கது.

சக. பற்றாது செல்லப் படர்க்குரைக்கும் பாவகரி
வற்றாது சூழ்வயலூர் வாழ்பவரைச்—சுற்றாது
கார்க்கண்டன் பத்தரைநங் கைக்கயறென் றோர்காலன்
மார்க்கண்டன் சீர்த்தியையுள் வைத்து.

பற்றாது செல்ல—பற்றாமல் அப்பாற் றொழுது செல்லும்படி. படர்—யமபடர். சுற்றாது—வளைத்தல் செய்யாது. கயறு—பாசம். கார்க்கண்டன்-கரிய திருக்கண்டத்தை யுடைய சிவபெருமான். கார்க்கண்டன் பத்தரை நம் கைக்கயிறு சுற்றாதென்று ஓர்காலன், மார்க்கண்டன் சீர்த்தியை யுள்வைத்து, படர்க்குப், பாவகரி வற்றாது சூழ்வயலூர் வாழ்பவரைப் பற்றாது செல்ல உரைக்கும் என்று இச்செய்யுட்கு அந்நுவயம் காண்க. பாவகரி நதியில் முழுகிக்கொண்டு வயலூரில் வாழ்கின்ற அடியார்கட்கு யமபயமில்லை என்பதாம். இச்செய்யுள்

"தொழுது நமனுந்தன் றூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன்—பழுதிலாப்
பத்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்கள்
எத்தனையுஞ் சேய்த்தாக வென்று" என்ற முன்னோர்

செய்யுளை அடியொற்றியது காண்க.

"திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் னாமம்
மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியுஞ்
சாதுவராய்ப் போமின்க ளென்றான் நமனுந்தன்
றூதுவரைக் கூவிச் செவிக்கு" என்று பெரியாரும் பணித்தார்.

சஉ. வைத்த நுதற்கண் மழுவாளி பூமீசன்
கைத்த கடுவைக் கனிபோலத்—துய்த்த
கருங்கண்ட வாழ்வே கடவுளர்கள் முன்னம்
வருங்கண்டம் போய்மகிழும் வாழ்வு.

கடவுளர்கள்—திருமால் முதலிய தேவர்கள். முன்னம் வரும்—முன்பு தங்களுக்கு நேர்ந்தான. கண்டம் போய்—விபத்து நீங்கி. மகிழும் வாழ்வு—மகிழ்தற்குக் காரணமான சுகவாழ்க்கை. துய்த்த—உண்டருளிய. கருங்கண்ட வாழ்வே—கரிய திருக் கண்டத்தினால் வந்த வாழ்வே. இச்செய்யுளின் கருத்து

"கற்பங் கடந்து கடவுளராய் வாழ்வரோ
பொற்பங் கயன்முதலாம் புத்தேளிர்—அற்புதமே
தெவ்வடக்கு சூலத்தார் தென்கருவை நாதனார்
வெவ்விடத்தை யுண்ணா விடின்" என்ற பிறசான்றோர் செய்யுளினும் பயின்றுள்ளமை அறிக.

சங. வாழலாம் வாமனமே! வன்மைப் பழவினையைப்
போழலாம் பூமீசன் பொன்னடியைத்—தாழலாம்
மெள்ளத் திருச்சுழியல் மேவிற் சிவானந்த
வெள்ளத் திருச்சுழியல் வீழ்ந்து.

மேவில்—சென்றால். சிவானந்த வெள்ளத் திருச்சுழியல் வீழ்ந்து வாழலாம்—சிவானந்தமாகிய வெள்ளத்தினது அழகிய சுழிகளிலே குதித்துப் பேரின்ப வாழ்க்கை பெறலாம்.

விரைந்து செல்லத் துணியாத மடநெஞ்ச மாகலின் "மெள்ள மேவின்" என்றார் என்க.

சச. வீழ்த்துக வெந்நரகில் வீழ்த்தா தடியேனை
வாழ்த்துக வன்றி மறுசுழியில்—ஆழ்த்துக
எண்ணுவதே செய்க எழிற்சுழிய லெந்தாயைக்
கண்ணுவதே என்றன் கடன்.

மறுசுழி—மறுபிறவியாகிய சுழி. எந்தாயை—எனது தந்தையாகிய உம்மை. கண்ணுவதே—தியானிப்பதே. இச்செய்யுள்

"வாழ்த்துவாய் வாழ்த்தா தொழிவாய் மறுசுழியிட்
டாழ்த்துவா யஃதறிவாய் நீயன்றே—யாழ்த்தகைய
வண்டார் பொழிற்கபிலை வாழ்கென் றிருப்பதே
கண்டா யடியேன் கடன்" என்ற மேலோர் செய்யுளை அடியொற்றியது காண்க.

காலமயக்கு.

சரு. கடல்கொண்ட மால்போற் கவின்சுழியற் சோலை
மடல்கொண்ட மாமலர்த்தேன் வாரக்—கடல்கொண்ட
கண்மாரி சிந்திக் கலங்குவதென் காரிகைநீ
விண்மாரி யென்றுண் மெலிந்து.

கடல் கொண்ட மால்போல்—கடல் நீரைத் தன்னிடத்தே கொண்ட மேகத்தைப்போல்; அன்றி, கடலைத் தனக்குப் பள்ளியிடமாகக் கொண்ட திருமால்போல எனினுமாம். மடல்கொண்ட மாமலர்த்தேன்வார-தன்னிடத்தேயுள்ள இதழ்விரிந்த அழகியமலர்களினின்று மிகுதியாகத் தேனைச் சொரிய. விண்மாரி யென்று—(அதனை) மேகங்கள் மழையைப் பொழிகின்றன என்று மாறுபடக் கொண்டு. கவின் சுழியற் சோலை, கடல் கொண்ட மால்போல் தேன்வார என இயைத்துப் பொருள் கூறுதல் நன்கமையும்.

நன்னிமித்தங்கண்டு தான் ஆறியிருத்தலைத் தலைவி தோழிக்குக் கூறல்.

சசு. மெல்லியல் பாகன் விழுச்சுழிய லெங்கோமான்
சொல்லியல் கொண்டு துயருறுவேன்—பல்லியின்
சொல்லருளின் சொல்லாய்த் துணிவுற் றிருந்தேனல்
நல்லருளின் மானே நயந்து

சொல்லியல்-சொல்லின் தன்மை. பல்லியின் சொல் அருளின் சொல்லாய்-பல்லிக்குட்டியினது சொல்லைத் திருவருட் சொல்லாக. நல்லருளின்-நல்ல அருளையுடைய. பல்லியின் சொல்லை நிமித்தமாகக் கொள்ளுதல் வெளிப்படை.

“ இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே ”

என்றார் கலித்தொகையினும். “ கொட்டாய் பல்லிக்குட்டி குடமாடி யுலகளந்த, மட்டார் பூங்குழன் மாதவனைவரக் கொட்டாய் பல்லிக் குட்டி ” என்பர் திருமங்கை மன்னனும்.

தலைவன் பொருள்வயிற் பிரிதலைக் குறிப்பாலறிந்த தலைவி தோழிக்குக் கூறல்.

௭௭. நயக்கும் செயலும் நவில்வனவும் நாடின்
வியக்கும் வலிநாக வெற்பர்—பயக்கும்
பொருள்செய்வான் கற்ற கொடியனகாண் பூவாய்!
அருள்செய்வா னில்லை யவை.

நாகவெற்பர்—பன்னகசயிலத்தலைவர். பயக்கும் பொருள்-(அறத்தையும் இன்பத்தையும்) ஈனும் பொருள். அருள் செய்வான் இல்லை-எனக்கு அருள்செய்யும் பொருட்டுச்செய்யப்பட்டன வில்லை.

பொருளீட்டுதற் பொருட்டுத் தலைவன் தலைமகளைப் பிரியக் கருதினைக, அப்பிரிவுக்காலத்தில், அவள் நினைத்து ஆறியிருக்கு மாறு சில பணிவான செய்கைகளையும் சில உபசாரமொழிகளையும், முறையே செய்தலும் சொல்லுதலுஞ்செய்ய, அதனையறிந்த தலைமகள் “ இதற்குமுன்பு நாம் கண்டு கேட்டிராத இச்செய்கைகளையும் வார்த்தைகளையும் ஆராய்ந்து நோக்குழி, இவையாவும் பொய்யாகத் தோன்றுகின்றன; இங்ஙனம் செய்தற்கு ஒரு கருத்து உளவாதல் வேண்டும்; அதுதான், பொருளீட்டுதற் பொருட்டு எம்மைப்பிரிய நினைத்தவன்மையே” என்று கூறுகிறாள்.

"முள்ளுறழ் முளையெயிற் றமுதூறுந் தீநீரைக்
கள்ளினும் மகிழ்செயும் எனவுரைத்தும் அமையாரென்
ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர்
உள்ளுவ தெவன்கொல் அறியே னென்னும்"

என்ற கலித்தொகை இங்கு அறியத்தக்கது.

நயக்கும் செயல்-தலைவி காலைப்பிடிப்பது, கையைப்பிடிப்பது வணங்குவது முதலியன. நவில்வன-தலைவியைப்பார்த்து நின்னைப் பிரியேன், பிரிந்து உயிர்தரியேன் என்று கூறுதல் முதலியன. மழைக்காலத்திலே யுட்கொண்ட நீரை, வெயிற்காலத்தில் வெளிப் படுத்தும் தன்மை யுடையதாய் வாய்ந்த மலையின் வளத்தையுடை யார் என்பாள் "வியக்கும் வலிநாக வெற்பர்" என்றாள். வன் னெஞ்சர் என்று குறிப்பிப்பாள் "நாகவெற்பர்" என்றாள். குறிஞ்சிநிலத்தலைவர் என்பாள் "நாகவெற்பர்" என்றாளுமாம். குறிஞ்சி-கூடுமிடம். கூடியே யிருக்கவேண்டியிருக்க, பிரிய நினைக் கக் கூடுமோ என்னுங் கருத்தாலே "நாகவெற்பர்" என்ற தென்க. இச்செய்யுளை

"காணகின் றனகளும் கேட்கின் றனகளும் காணிலிந்நாட்
பாண்குன் றநாடர் பயில்கின் றனவிதெல் லாமறிந்தோம்
மாண்குன் றமேந்திதண் மாமலை வேங்கடத் தும்பர்நம்பும்
சேண்குன்றஞ் சென்று பொருள்படைப் பான்கற்ற திண்ணனவே."

என்ற நம்மாழ்வார் திருவிருத்தப் பாசுரத்தோடு ஒப்புநோக்குக.

சஅ. அவையுந் தினங்கொல்? அவர்பிறந்தார் கொல்லோ?
சுவையுஞ் சுகந்தமுமாய்த் தோன்றும்—எவையும்
புவனேசன் என்றவனைப் போற்றாத நாளுந்
தவனேச மில்லவருந் தாம்.

சுவையும் இரசமும், சுகந்தமும்—நறுமணமும். ஆய்த்தோன் றும் எவையும்—உள்ளனவாய்க் காணப்படும் பொருள்கள் யாவும். அவனை—அப்புவனேசனை. நாள் அவையும்—அந் நாட்களும். தவனேசம் இல்லவர் அவரும்—மிகுதியாகச் சிவநேசம் இல்லாத

வர்களாகிய அவர்களும். பிறந்தார் கொல்லோ—பிறந்தவர் களாவரோ ?

"உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றபடி "சுவையுஞ் சுகந்தமுமாய்த் தோன்றும்—எவையும் புவனேசன்" என்றார். "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்னும் சுருதியை யுட் கொண்டு, புவனேசனைப் போற்றாத நாள் அவையும் தினங்கொல்? என்றும், அவனைப் போற்றாதவர் பிறந்தார் கொல்லோ ? என்றும் கூறினார்.

சசூ. தானே யயனரியாய்த் தந்தளித்த தாரணியை
தானே துடைத்துத் தனிநாதன்—தானே
விரும்பித்தன் கூத்தை விளையாடிப் பெற்றான்
பெரும்பித்தன் என்னும் பெயர்.

தான் செய்ததொன்றைத் தானே அழித்தலும், தானே தனியிடத்துக் கூத்தாடுதலும், தானே தனியாக விளையாடலு மாகிய இப்படிப்பட்ட பித்தனது செய்கைகளையே யுடைமையால் தனுநாதன் பித்தனெனும் பெயர் பெற்றான் என்றார்.

எதுத் தற்குறிப் பேற்றவணி. காண்பா ரொருவருமில்லாத சருவசங்கார காலம் என்பார், "தானே தன் கூத்தை விரும்பி" என்றார். ஈசுவரனுக்குப் படைத்தல், காத்தல் அழித்தல் என்னும் இவையும் ஒரு விளையாட்டாம் என்பார் "விளையாடி" என்றார். கல்வியிற் பெரியாரும்

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்—" என்றார்.

ருஎ. பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தோடு நிற்றல்.
பெயருந் திருநீறும் பேசியிடிற் பேதை
அயருந் திருமேனிக் காகும்—துயரும்
அசங்காது வேலற் கணுவளவுந் தாய்மீர்!—
அசங்காது மற்றிவ் வணங்கு.

பெயரும்—சிவபெருமானது திருநாமங்களையும். பேசி—உச்சரித்து. இடில்—இவளது மெய்யிலே பூசுவீர்களாயின், பேதை—(அது) பேதைப்பருவத்தளாகிய இவளது. ஆகும்—செய்யத்தக்க நல்ல பரிகாரமாகும். இவ்வணங்கு—இந்நோயானது. துயரும் அசம் காது வேலற்கு-வருந்துகிற ஆட்டைக் கொல்லுதற்குச் சமைந்து நிற்பவனான இவ்வெறியாட்டாளனுக்கு. அசங்காது—அசையாது. (நீங்காது)

அயரும் திருமேனிக்கு ஆகும் என்பதில் அயர்தற்குக் காரணமான திருமேனிப் பிரானிடத்து கொண்ட காதல்நோய்க்கு ஏற்ற பரிகாரமாகும் என்ற மற்றொரு பொருளும் தோன்றும். நோயாளிக்கு மேலுக்கு ஒரு மருந்தும், உள்ளுக்கு ஒருமருந்தும் உபயோகித்தல் போல, காதல் நோய் கொண்ட இவளுக்குச் சிவ பெருமானது திருநாமங்களை இவள் காதின் வழியே உள்ளே போகுமாறு உச்சரித்து அவரது திருநீற்றினை இவளது மெய்யில் பூசுங்கள் என்று பரிகாரம் கூறுகிறாள்.

"மந்திரமாவது நீறு" என்றபடி மந்திரமாகிய திருநீற்றை ஓதி உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசினால் திருமேனிக்காகும் துயரும் பெயரும் என முடித்தலும் பொருந்தும். பெயர்தல்-நீங்குதல். இவ்வாறு பொருள் கொள்ளின் திருநீறும் என்றவிடத்துள்ள உம்மை, இசை நிறையாய் நிற்றல் காண்க.

ருக. இவ்வணங்கு தானுயிரென் றேழையர்க்காட்பட்டுநெஞ்சே
அவ்வணங்கு மார்க்கத்தி லாழாமல்—தெவ்வணங்கு
தென்னவனார் போற்றுந் திரிசூலப் பட்டினத்தென்
முன்னவனார்க் காட்செய்வான் முந்து.

உயிர்-எனக்கு உயிர்போன்று இனியவளாயிருப்பவள். அவ்வணம் கு மார்க்கத்தில்-அம்மாதிரியான கெட்ட வழியில். இனி, அணங்கு மார்க்கம் என இயைத்து, துன்பந்தரும் மார்க்கம் எனினுமாம். பெண்களைத் தொடர்ந்து செல்லும் மார்க்கம் எனினும் அமையும்; அம்மார்க்கத்தில் ஆழ்தலாவது, பெண்வழிச் சென்று கெடுதல் என்க. தெவ்வணங்கு-பகைவர்கள் தலைவணங்கும்படியான மிடுக்கையுடைய. தென்னவனார்-சுந்தரசேன மகா

ராசன். திரிசூலப்பட்டினம் சென்று அங்கு எழுந்தருளியிரா நின்ற திருமேனி நாதனைக் கைதொழுது, பெரும்பேறு பெற்றதனால், 'தென்னவன்' என்னாது 'தென்னவனார்' என்றார் போலும். முன்னவனார்-யாவர்க்கும் முற்பட்ட பிரானாகிய திருமேனிப்பிரான். முந்து-முற்படு. திரிகாணத்தில், மனம் சிறந்ததாகலில் அதனை விளித்து அறிவுறுத்துகின்றனர், இப்பாசுரத்தில் என்க.

பிரிவாற்றாத தலைவி கடலோடு புலம்பல்.

௫௨. முந்து வளைசிதறி முத்திறைத்துப் பாயலையும்
உந்திக் கதறி உறங்காயால்—சிந்து
மயலூர் உனையும் மணந்தகன்றார் கொல்லோ
வயலூர்ப் பெருமானார் வந்து.

முந்து-முற்பட்டு. வளைசிதறி-வளையல்களை எறிந்து (சங்கங்களைச் சிதறி) முத்து இறைத்து-முத்துப்போன்ற கண்ணீரை வடித்து (முத்துக்களை வீசி), பாயலையும் உந்தி-படுக்கைகளைக் காலினால் உதைத்துத் தள்ளி (தாவுகின்ற அலைகளையும் வீசி), கதறி-கதறிக் கொண்டு (சத்தமிட்டுக்கொண்டு), உறங்காயால்-தூங்காது இருக்கிறாய் ஆதலால், சிந்து-கடலே! மயலூர் உனையும்-காதல் மயக்கத்தையுடைய உன்னையும், வயலூர்ப் பெருமானார்-திருச்சுழியலிலே எழுந்தருளியிருக்கின்ற திருமேனிநாதன், வந்து-முன்னம் பூம்பொழிலிடத்தேயெய்தி, மணந்தகன்றார் கொல்லோ-புணர்ந்து பிரிந்தனரோ. முந்துவளை-சிறந்த (சிலாக்கியமான) வளை; பிறர்கழற்றுவது பாராதே, தானே கழன்று வீழ முற்படுகின்ற வளையெனினும் இழுக்காது. சிந்து அண்மைவிளி. இங்கு கேளாதது கேட்பது போலச் சொல்லப்பட்டது மரபுவழுவமைதி. முன்னிரண்டடி, செம்மொழியும் பிரிமொழியுமாக வந்த சிலேடைபற்றிய உவமையணி. இச்செய்யுளை,

"வாயினி ரங்கினை யாரமெ றிந்தனை வால்வளை சிந்தினைதண்
பாயலை யுந்தினை மாலைய டைந்தனை பாரிலு றங்கிலையாற்
கோயில ரங்கனை மாகன கந்திகழ் கோகன கம்பொலியும்
ஆயிழை நண்பனை நீயும்வி ரும்பினை யாகுநெ டுங்கடலே"

என்ற திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்காரது திருவரங்கக் கலம்பகச் செய்யுளோடு ஒப்பு நோக்குக.

தோழி தினையோடு வெறுத்து வரைவுகடாதல்.

௫௩. வந்து வினைதினையின் முற்றியதால் மற்றிதற்கு
மந்து முளதோ மலியிருளிற்—சந்து
விழிகையிற் சேரா மெலியிடைபாற் சென்றேன்
சுழிகையிற் கார்ப்புனமே! சொல்.

விழிகையிற் சேரா மெலியிடை—கைக்குள் அடங்காத அகன்ற விழியினையும் மெலிந்த இடையினையுமுடைய பாவை நாச்சியார். சுழிகையின் கார்ப்புனமே-திருச்சுழியலைச் சார்ந்த கரியபுனமே. தினையின் வந்து-தினைப்பயிராக வந்து முளைத்து வளர்ந்து, முற்றியது-நன்றாகக் கதிர்முற்றிப்போயிற்று; இதற்கு-இது இங்ஙனம் முற்றாமல் கதிர்பறிந்தபடியே யிருக்கும்படி செய்வதற்கு, மந்தும் உளதோ (ஏதேனும்) மருந்தும் உண்டோ.

இயற்கைப் புணர்ச்சியும் பாங்கற் கூட்டமும் பெற்றபின்பும் களவொழுக்க நெறியிலேயே நின்ற தலைவன் தலைவியின் காதற் பாங்கியை யுணர்ந்து அவளை யடைந்து தன்குறை கூறியிரப்ப, அவன் கருத்துக்கு அரிதின் இசைந்த அப்பாங்கி, தலைமகனுக்கு ஒரு குறியிடங்கூறித்தாம் தினைப்புனங்காப்பதாகச் சொல்லி, வீட்டிலுள்ளாரிடம் விடைபெற்றுக்கொண்டு, தலைவியை அழைத்துக் குறியிடத்திற் சேர்த்து, அங்குத் தலைவன் வந்து தலைமகளுடன் கூடுமாறு செய்விக்க, அத்தலைமகன் பின்னரும் அக்களவு நெறியையே வேண்டி நின்றானாக, அவனுக்குத் தோழி 'இனி இவ்வாறு ஒழுகுவது தகுதியன்று' என்றும், 'விரைவில் வெளிப்படையாக இவளை மணஞ்செய்து கொள்ளுதலே தகுதி' என்றும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும், எதிரில் நின்று பேசியும் முன்னிலைப்புறமொழியாகக் கூறியும் பலவாற்றான் உணர்த்துவள். கீழ்க்கூறியவாறு பகற்குறிவந்து ஒழுகுகின்ற தலைமகன் வழக்கப்படி ஒருநாள் சிறைப்புறமாய்க் குறியிடத்துவந்து நிற்க,

தோழி, அவன் செவிப்படுமாறு, 'இத்தினைக்காவல்பற்றி நாம் உன்னைக் காணலாம் என்று நினைந்து இதுவரை தினைகாத்து வந்தோம். அத்தினை நன்றாகக் கதிர் முற்றிவிட்டதாதலால், எம்மவர் தினைகொய்து விடுவார்கள்; யாம் இன்று ஊருக்குப் போய் விடுவோம். இனி எமக்குத் தினைப்புனங்காவல் இல்லையாதலால், யாம், இனி உன்னைக் காண்டல் இயலாது' என்பது தோன்ற, தினைப்புனத்தை நோக்கி, 'கரியபுனமே! தலைவன் மேல்வைத்த விருப்பினால் தினைகாத்து மகிழ்ந்து நின்ற எங்கட்கு, அத்தினை எங்கள் தீவினையாய் வளர்ந்து முற்றியது. இதனை முற்றாதபடி செய்ய வகையுண்டோ?' என்று தினையை வெறுத்துக் கூறுதல் இப்பாட்டிற் குறிக்கப்பட்ட பொருள். தினைவிதைத்த நாளில் இத்தினைக்காவல்பற்றித் தலைவனைக் கூடலாமென்று மகிழ்ந்து தினைக்காவற்கு உடன்பட்டனர் ஆதலாலும், அத்தினை கதிர்முற்றி விடவே கொய்துவிடுவாராகலின், இனிப்பாதுகாவலும் இல்லையாகவே அவனைக்காணுதல் இயலாதாதலாலும், தினைமுற்றியதைத் தங்கள் தீவினையே இங்ஙனம் வந்து முற்றியதாகக் கூறுவாள், "வந்து வினைதினையின் முற்றியதால்" என்றாள். "மற்றிதற்கு, மந்து முளதோ" என்றது, இரக்கத்தாற் கூறியது. மந்து-தெலுங்கு மொழி, 'தாண்மிடைந்தன தம்மிமிடைந்தன,' 'அக்கட விராவணற் கமைந்த வாற்றலே ' என்ற விடங்களில் தம்மி அக்கட என்ற பதங்களைக் கம்ப நாடர் எடுத்தாண்டிருத்தல் காண்க. 'விழிகையிற் சேரா,' என்பதற்கு, கையை விழியாகக் கொண்டு தடவிச்சென்று எனவும் பொருள் கொள்ளலாம்; சேரா-செய்யா என்னும் வாய்ப்பாட்டு இறந்த காலவினையெச்சம். கையை வழியாகக் கொண்டு மலியிருளில் மெலியிடைபாற் சென்றானது சுழிமை என்றதனால், மேல் இரவுக்குறியிற் கண்டு கூடவிரும்பினாள் என்பது பெறப்படுதல் காண்க. கார்ப்புனம் என்பதற்குக் கார்காலத்துப் பொலியும்புனம் எனினும் இழுக்காது. திருக்கோவையாரில் கார்ப்புனம் என்பதற்கு-'கரிய புனம்' என்றும் 'கார்காலத்துப் பொலியும் புனம் எனினும் அமையும்' என்றும் ஆசிரியர் தொல் பேராசிரியர் உரையெழுதிப் போந்தமை காண்க. இச்செய்யுளை

"விளையா தொழிய மருந்துமுண் டேயெம் வினைதிளையின்
கிளையாக் கிளர விளைகின்ற தாற்கிளை யாம்பிறவித்
தளையா சழியத் தடுத்துத்தென் பாலை வழிதடுத்துக்
களையா சறத்தடுத் தாண்டான் குருகையிற் காரப்புனமே"

என்ற சடகோபரந்தாதிச் செய்யுளோடு ஒப்புநோக்குக.

ருச. சொல்லத் தரமோ சுழியற் பெருமையுந்தான்
செல்லத் தகுமோர் செழுந்தருவின்—நல்ல
சினைநிழலிற் சேர்ந்தார் செறிநிழல்போற் றீமை
புனைநிழலிற் சேர்தலுமே போம்.

செழுந்தருவின்—செழுமையான மரத்தினது. நல்ல சினை நிழலில்-நல்ல கிளையினது குளிர்ந்த நிழலிலே. சேர்ந்தார்—சேர்ந்தவர்களது. செறி நிழல் போல—செறிந்த (சரீரத்தினது) நிழலைப் போல. தீமை புனைநிழலில் சேர்தலுமே போம்—ஒருவனது பாவங்களெல்லாம் புன்னாக மரத்தினது நிழலை அடைந்த மாத்திரத்தில் போய்விடும். இப்படிப்பட்ட உத்தம நகரமாகிய திருச்சுழியலினது மகிமை தானும் ஒருவராற் சொல்லற் பாற்றோ என்று முதலடியால் வியந்தபடி.

ருரு. போந்தேற லென்றமரர் போற்றப்போம் வாழ்வதனை
நாந்தேறல் செய்யோம் நவின்றிருப்போம்—தீந்தேறல்
போலினிக்கு மெந்தை புவனேசன் பூங்கமலக்
காலினுக்குங் காப்பெனவே கற்று

போந்து ஏறல் என்று அமரர் போற்ற போம் வாழ்வதனை—மேலேயுள்ளதான எங்களுலகத்துக்கு வருக என்று சொல்லித் தேவர்கள் போற்றி அழைக்க, அங்குச் சென்று அனுபவிக்கும் வாழ்வினை. நாம் தேறல் செய்யோம்—நாம் மதிக்க மாட்டோம். இனிக்கும்-இனி மேலைக்கும். கற்று நவின்று இருப்போம்—அறிந்து அத்திருவடிகளைத் துதித்துக்கொண்டிருப்போம். திருவடிகளைத் துதித்தலை "அரவணையான் சிந்தித்து ஆற்றும் அடி" என்று தொடங்கிப்போற்றும் பெரியார் திருப்பாட்டுக்களால் அறிக. இந்திரன் முதலோர் இடங்களில் எய்தப்பெறும் சொற்பகால

போகங்களினும், திருமேனிநாதனது திருவடிகளே எற்றைக்கும் எழேழ்பிறவிக்கும் தஞ்சமென நம்பி அவற்றையே அனுபவிப் பதனாலாகும் இன்பம் மேம்பாடுடையதெனக் கூறியவாறும். எறல்—அல்லீற்று வியங்கோள். 'மக்கட் பதடி எனல்' என்னுமாபோல. கற்று நவின்று(திருவடிகளிடத்தே)இருப்போம் எனலும் அமையும். பத்துப் பாட்டுத் திருமுருகாற்றுப் படையில் 'சேவடி படரும் செம்மலுள்ளமொடு—நலம்பிரி கொள்கைப் புலம்பிரிந்துறையும்' என்ற விடத்து, உரைகாரர், "புலம் பிரிந்து உறையும் அடி—மெய்ஞ்ஞானத்தாலறிதலைக் கைவிட்டுத் தங்குந் திருவடி" என உரைத்துள்ளமை அறிக. இச்செய்யுள்

"போந்தே றுகவென் றிமையோர் புகலினும் பூந்தொழுவின்
வேந்தே றடர்த்தவன் வீடே பெறினு மெழிற்குருகூர்
நாந்தே றியவறி வன்றிரு வாய்மொழி நாளுநல்குந்
தீந்தேற லுண்டுழ லுஞ்சித்தி யேவந்து சித்திக்குமே"

என்ற முன்னோர் செய்யுளை ஒருவாறு அடியொற்றிச் செய்யப் பட்டது என அறிக.

ருசு. கற்றூர் கதிபெறுவர் கண்டீர் புலனைந்துஞ்
செற்றா னுறையத் திருச்சுழியல்—பெற்றான்
பிறவாத் திருமேனிப் பெம்மான்பேர் நாவின்
மறவா தனுதினமும் வைத்து.

தானுறைய—தான் இனிது வாழ்வதற்காக, திருச்சுழியல் பெற்றான்—திருச்சுழியல் என்னும் தலத்தை யடைந்தவனும், பிறவாத்திருமேனிப்பெம்மான்—பிறப்பில்லாதவனுமாகிய திரு மேனி நாதனது, பேர்—திருநாமத்தை. நாவில் வைத்து—நாவிலே வைத்து. நாவில் வைத்து என்பதற்கு, நாவிலே அலங்காரமாக வைத்து எனப் பொருள் காண்டல் நன்கு பொருந்தும். பிறரும் "நாவுக் கழகுஈனது நாமம்" என்றும் "நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே" என்றும் கூறியமை யறிக. இச்செய்யுளை

"உற்றானமக் குயரும்மதிச் சடையான்புல னைந்துஞ்
செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல்
பெற்றானினி துறையத்திறம் பாமைத்திரு நாமங்
கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்தும்மது கடனே" என்ற

சுந்தரமூர்த்தி அடிகளது திருப்பாடலோடு ஒப்புநோக்குக.

நுள. வைப்பிற் றவமாஞ் சதிராமே மாமலத்தா
லெய்க்கும் பிறப்பறுப்பீ ரேத்துமினோ—உய்க்குஞ்
செழும்புனல்சேர் வேணித் திருச்சுழியற் றேவைக்
கொழும்புகையும் பூவுநீர் கொண்டு.

உய்க்கும்—ஆன்மாக்களைத் தீநரகிற் றள்ளாது நற்கதியிற் சேர்க்கவல்ல. செழும்புனல்—கங்காநதி. கொழும்புகை—கொழுமையான தூபம். மாமலம்—கரிய மலத்தொடர்பு. அறுப்பீர்—அறுத்துக் கழிக்க வேண்டும் என்ற மனமுடையீர்களாயின். வைப்பில்—உலகத்தில். தவமாம் சதிராம்—தவமும் ஞானமுமாகும். வைப்பு—நிதியுமாம். மா—கருமை என்னும் பொருளில் வருதலை "மாக்கடல்" "மாக்கழி மலர்ந்த நெய்தல்" என்பதனானுமுணர்க. தேவும் தெய்வத்திற் கொருபெயர் என்பர் நச்சினார்க்கினியர். கொண்டு—மூன்றும் வேற்றுமைச்சொல்லுருபு. இப்பாட்டு

மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியனமர்ந் திடமாந்திருச் சுழியல்
நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையானினைந் தேத்துந்
தலந்தாங்கிய புகழான்மிகு தவமாஞ் சதிராமே. என்ற

சுந்தரர் தேவாரத்தை முற்றிலும் அடியொற்றி வந்திருத்தல் பாராட்டற் பாலதாம்.

நுஅ. கொண்டலை நேர்பூங் குழலார் குடைந்தாடும்
மண்டலைப் பௌவ மணிச்சுழியல்—கண்டலைத்
தாட்கையினார்க் கன்பர் சரணந் தலைக்கணியும்
வேட்கையினர் அவ்வவரும் வேந்து.

பூங்குழலார்-அழகிய கூந்தலையுடைய மங்கையர்கள்; பூவை முடித்த குழலாருமாம். மண்டு அலைப்பௌவம்-மிகுந்த அலைகளை யுடைய சமுத்திரத்தாற் கரைக்கேற்றப்பட்ட, மணி-முத்துக்களால் விளங்குகின்ற, சுழியல்-திருச்சுழியலில்எழுந்தருளியுள்ள. கண் தலை தாள்கையினர்க்கு-கண்ணைத் திருவடியிலும் தலையைக் கையிலும் தரித்தவராகிய திருமேனிநாதனுக்கு. வேட்கையினர் அவ்வவரும்-ஆசைப்பெருக்கினையுடை அவரவர்களும். வேந்து-தனித்தனி அவ்வத்திசைக்கு அரசராவர்கள்.

இயல்பிலேயே மிக்க அலைகளோடு கூடிய சமுத்திரம் பின்னும் அதிகமாக அலைகளை எழுப்பித் தன்பாலுள்ள மணிவகைகளைக் கரைக்கேற்றும்படியாக, இளமங்கையர் குடைந்தாடாநிற்கும் சுழியல் என்க. இதனான் மடவாரது மிகுதியும், கடல் வளப்பமும் கூறியவாறு. பிறரும்

"குரும்பைமென் முலையா ராடக் கூந்தலி னறவந் தோய்ந்த
இரும்புன லாறு பாய வெறிதிரை சுருட்டுந் தெண்ணீர்க்
கருங்கடல் புலவு நீங்கி நறுமணங் கமழு மென்றால்
முருந்துறழ் மூர லார்தம் மிகுதியை மொழிய லாமோ"

என்று கூறிப்போந்தமை காண்க. கண் என்றது திருமாலினது கண்ணை. தலையென்றது பிரமகபாலத்தை. இப்பாசுரம்

"கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியற்
றெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவா
ரவ்வத்திசைக் கரசாகுவ ரலராள்பிரி யாளே"

என்ற சுந்தரரது தேவாரத்தைப் பின்பற்றியது.

சுந்தரர், திருச்சுழியற்றெய்வத்தின் தொண்டர்க்குத் தொண்டு செய்யும் அடியார்க்கு ஏற்றம் கொடுக்க, இவர் அங்ஙனம் தொண்டு செய்ய விரும்புவோர்க்கே ஏற்றம் கொடுத்தது பாராட்டற்பாலது.

தொடரும்.